

கல்கி
ALKI நவம்பர் 18, 1951
4 அணா



# இரம்மியமானது...

# ஹிமாலயா புக்கே

## டாய்லட், டால்கம் பௌடர்களின்

## இனிமையான பரிமளம்

வாசனை மிகுந்த, நேர்த்தியான ஹிமாலயா புக்கே பௌடர்கள் உங்கள் அழகு பராமரிப்பிற்கு மிகவும் சிறந்தது. அவைகள் உங்கள் சருமத்திற்கு மிகவும் சாந்தியைக் கொடுக்கும். அவைகளின் நீடித்திருக்கும் பரிமளம் மலர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது.




நேர்த்தியான
இரண்டு **இராஸ்மிக்** தயாரிப்புகள்

HBP 3-X30 TM

# பொருள் அடக்கம்

கல்கி

மலர் 11 இதழ் 16 | 1951 நவம்பர் 18 | கர ௵ கார்த்திகை 2உ


| | | | |
|---|---|---|---|
| இமாலயப் பிரச்னைகள் | (தலையங்கம்) | ... | 3 |
| இது ஒரு வெற்றி! | ... | ... | 5 |
| சமாதானப் பிரசாரம்! | சாஸ்திரி | ... | 5 |
| நீதியும் நெருப்பும் | ... | ... | 6 |
| பொன்னியின் செல்வன் | கல்கி | ... | 8 |
| அட்டைப்பட விளக்கம் | ... | ... | 15 |
| மக்களே தீர்ப்புக் கூறட்டும்! | கனம் எம். பக்தவத்ஸலம் | ... | 17 |
| தீபாவளிக்குப் பிறகு | ... | ... | 18 |
| கண் திறந்தது | கமலா கோபாலன் | ... | 20 |
| கஜேந்திரனின் சினிமாப்படம் (பாப்பா மலர்) | விஜயம் | ... | 24 |
| நீங்களும் வரையலாம் | ... | ... | 25 |
| படித்துப் பாருங்கள்! | ... | ... | 26 |
| விஷமக் குரங்கு | சாமா | ... | 28 |
| சரிகை வேஷ்டி | வேங்கட லக்ஷ்மி | ... | 29 |
| ஆரோக்கிய ரகசியம் | வி. என். குமாரசாமி | ... | 33 |
| மனச்சாந்தி | கா. சுப்பிரமணியம் | ... | 36 |
| 'இடைக்கால மனைவி'! | கே. எம். முன்ஷி—ரா. வீ. | ... | 39 |


ஜூபிடர்
ரிலீஸ்
நவம்பர்
16உ
முதல்
சென்னை
ஸ்ரீ கிருஷ்ண & சித்ரா
மற்றும் தமிழ்நாடெங்கும்
ஆரம்பம்
நாகேஸ்வர ராவ்.. ரேலங்கி
பாண்டியன்.. எஸ்.எஸ்.ஆர்
அஞ்சலி தேவி . . . கிரிஜா
சூர்ய ப்ரபா முதலியோர் நடிப்பது
விநோதாவின்
ஸ்த்ரீ ஸாகஸம்
உரிமையாளர்கள் : பெல் பிக்சர்ஸ்
தமிழ்

கல்கி

மலர் 11 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 16

# இமாலயப் பிரச்னைகள்

சென்ற வாரத்திய தினப் பத்திரிகைகளில் பக்கம் பக்கமாகவும் பத்தி பத்தியாகவும் வெளியாகி யிருந்த அபூர்வமான விளம்பரங்களை நம் நேயர்களில் பலர் பார்த்திருப்பார்கள்.

தபசில் 1 அவிசல் 2
3-ம் தமூனு 4-ம் அமீனு
5 அ (8) தலைவலி 6-ஏ (9) பிரதிபந்தம்

ஆகிய சட்டப் பிரிவுகள் உட் பிரிவுகள் விதிகள் உள் விதிகள் இவற்றின் பிரகாரம் அந்தந்தத் தேர்தல் தொகுதிகளில் நிரப்பப்பட வேண்டிய ஸ்தானங்களுக்கு நேமகச் சீட்டுக்களைத் தாக்கல் செய்ய வேண்டியது பற்றி அந்தந்தத் தொகுதி ரிடர்னிங் ஆபீஸர்கள் பக்தி சிரத்தையுடன் கையொப்பமிட்டு வெளியாக்கி யிருந்த விளம்பரங்களைத்தான் குறிப்பிடுகிறோம். மேற்படி விளம்பரங்களை ஊன்றிப் படித்த நேயர்கள் நமக்கு முன்னால் எவ்வளவு மகத்தான பிரம்மாண்டமான இமாலயப் பிரச்னைகள் பயங்கர ரூபத்துடன் எழுந்து நின்று திக்குமுக்காடச் செய்கின்றன என்பதை உணர்ந்து கொண்டிருக்கலாம்.

அந்த இமாலயப் பிரச்னைகள் மக்களையும் பயமுறுத்திக் கொண்டிருக்கின்றன; மாபெரும் தலைவர்களையும் பயமுறுத்திக் கொண்டிருக்கின்றன; அரசாங்கத் தேர்தல் அதிகாரிகளை ரொம்ப ரொம்பப் பயமுறுத்திக் கொண்டிருக்கின்றன.

மக்களின் முன்னால் உள்ள பெரிய பிரச்னை யாருக்கு வோட்டுக் கொடுப்பது என்பது. மாட்டுக்கா, ஆட்டுக்கா, யானைக்கா, பூனைக்கா, குதிரைக்கா, கழுதைக்கா, அரண்மனைக்கா, குடிசைக்கா, அரிவாளுக்கா, வைக்கோலுக்கா, பௌர்ணமிக்கா, அமாவாசைக்கா, ராகு காலத்துக்கா, போதாத காலத்துக்கா என்று பொது மக்கள் யோசித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். இது பிரம்மாண்டமான பிரச்னை அல்லவா?

மேற்கண்டவாறு மிருகங்களையும் சடப் பொருள்களையும் தேர்தல் சின்னங்களாகத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தவர்களைப் பற்றி நாம் அவ்வளவாகப் பாராட்டுவதற்கில்லை. எந்தெந்த மிருகம் அல்லது சடப் பொருள்கள் எந்தெந்தக் கட்சியை அல்லது சுயேச்சை அபேட்சகரைக் குறிப்பிடுகிறது என்பதைப் பிரசாரம் செய்வதும் மக்களின் மனதில் பதிய வைப்பதும் கடினமான காரியந்தான். சென்னை ராஜ்யத்தில் மட்டும் பதினாறு அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிட முன் வந்திருக்கிறார்கள். ஒவ்வொரு தொகுதியிலும் சுயேச்சை அபேட்சகர்கள் பலர் நிற்கப் போகிறார்கள். அவர்களில் பலர் நேமகச் சீட்டுக்களைத் தாக்கல் செய்து விட்டுத் தேர்தல் சின்னங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு விதவிதமான தேர்தல் சின்னங்களை அச்சுப் போட்டுப் பெட்டிகளிலே ஒட்ட வேண்டும். அவை கிழிந்து போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தேர்தல் சாவடிகளிலே வைக்க வேண்டும். வோட் எடுப்பு நடத்த வேண்டும். தேர்தல் விதிகள் சரியாக அனுஷ்டிக்கப் படுகின்றனவா என்று பார்த்துக் கொள்ள வேண்டும்.—தேர்தல் விதிகள் என்றால் அற்ப சொற்பமானவை யல்ல. அந்த விதிகளைப் பற்றி அவற்றைத் தயாரித்தவர்களைக் கேட்டால் அவர்களுக்கே தலைவலி வந்து விடும். மற்றவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை யல்லவா?—இத்தகைய பிரம்மாண்டமான இமாலயப் பிரச்னைகள், பொதுத் தேர்தலை நடத்தி வைக்கப் போகும் அரசாங்க அதிகாரிகள் முன்னால் எழுந்து நின்று பூச்சாண்டி காட்டுகின்றன.

நம் மாபெரும் தலைவர்களின் முன்னால் எழுந்துள்ள பிரச்னைகளோ பலப் பலவாகும். அவை நம் தலைவர்களை எவ்வளவு கஷ்டப்படுத்தி வருகின்றன என்பதைச்

## இது ஒரு வெற்றி!



எல்லைப்புற மாகாணத்தில் தற்பொழுது சர்வாதிகாரம் நடத்தும் அப்துல் கையூம்கான் தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டார்.

---

சமீபத்தில் நேருஜி வெளியிட்ட அறிக்கையிலிருந்து ஒருவாறு நாம் அறியலாம்.

"அபேட்சகர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு நாங்கள் இந்தத் தடவை கைக்கொண்ட முறை தவறானது என்று உணர்ந்து கொண்டோம். ஆயினும் இனிமேல் பின்வாங்குவதற் கில்லை. இதே முறையைக் கையாண்டுதான் சமாளித்தாக வேண்டும். இப்போது பட்டு அறிந்த அநுபவத்தை அடுத்த முறை பயன்படுத்திக் கொள்வோம்!" என்று நேருஜி சோக ரசத்துடன் சொல்லியிருக்கிறார். நேருஜி தம் வாழ்க்கையில் முகாரி ராகம் அதிகமாகப் பாடுவதில்லை. இவ்வளவு சோக ரசத்துடன் இதற்கு முன் பாடியதேயில்லை என்று சொல்லலாம். அவருடைய சோகத்துக்குக் காரணம் என்னவென்பதையும் நாம் எளிதில் ஊகிக்கலாம்.

காங்கிரஸின் சார்பாக அபேட்சகர்களாக நிற்பதற்கு விருப்ப முள்ளவர்கள் எல்லாரும் விண்ணப்பம் போடலாம் என்று சொன்னார்கள். விண்ணப்பம் போட்டவர்கள்மீது குற்றம் குறைகள் இருந்தால் மற்றவர்கள் புகார் சொல்லலாம் என்றும் கூறினார்கள். மாகாணத் தேர்தல் கமிட்டி சிபார்சு செய்தவர்கள்மீது மற்றவர்கள் மத்திய தேர்தல் கமிட்டிக்குப் புகார்கள் அனுப்பலாம் என்று சொல்லி வைத்தார்கள். "எல்லாப் புகார்களையும் சாங்கோபாங்கமாக விசாரித்து முடிவு செய்வோம்" என்றும் கூறித் தொலைத்தார்கள்.

இந்த முறையினால் விளைந்தது என்ன! காங்கிரஸ் அபேட்சகராக நிற்க முன் வந்த ஒவ்வொருவர் மீதும் எண்ணத் தொலையாத புகார்களும் அப்பீல் மனுக்களும் போய்க் குவிந்தன. அந்தப் புகார்களை யெல்லாம் அப்படியே நம்புவது என்றால் அபேட்சக மனுப் போட்டவர்களில் பெரும்பாலோரை ஒன்று சிறைச்சாலைக்காவது அனுப்ப வேண்டும் அல்லது பைத்தியக்கார வைத்தியசாலைக்காவது அனுப்ப வேண்டும் என்று ஏற்பட்டது. புகார்களில் எட்டில் ஒரு பங்கை நம்புவது என்றாலும் மனுப் போட்டவர்களில் யாரையும் அபேட்சகராக எடுக்க முடியாமற் போகும்!

இந்த நிலைமை மத்திய தேர்தல் கமிட்டியையும் நேருஜியையும் திக்கு முக்காடச் செய்து விட்டது. "புகார்களை உண்மையென்று நாங்கள் ஒப்புக் கொள்ளவும் இல்லை; பொய் என்று தள்ளவும் இல்லை" என்று நேருஜி நியாயாதிபதி ஸ்தானத்திலிருந்து சொல்லியிருக்கிறார். ஆயினும் அத்தனை புகார்களுக் கிடையில் அபேட்சகர்களைப் பொறுக்கி எடுக்கும் இமாலயப் பிரச்னையை அவரும் அவருடைய சகாக்களும் தீர்க்க வேண்டியதாயிருந்தது. ஏதோ ஒரு மாதிரி தீர்த்து வைக்க முயன்றிருக்கிறார்கள். இன்னும் முழுமையும் தீர்ந்த பாடாக இல்லை.

நமது தமிழ்நாடு தேர்தல் கமிட்டியார் சுற்றுப் பிரயாணம் தொடங்கிய போதே அபேட்சகர்களைப் பொறுக்கி எடுக்க இது சரியான முறையில்லை என்பதை நாம் எடுத்துக் காட்டினோம். ஆனால் உலகமே கண்டும் கேட்டும் அறியாத பிரம்மாண்டமான தேர்தல் நெருங்கி வரும் சமயத்தில் எங்கேயோ ஒரு மூலையிலிருந்து நாம் எடுத்துக் கூறுவதை யார் கேட்கப் போகிறார்கள்! கேட்கவில்லைதான்! ஆனாலும் அந்த முறை சரியான முறையல்ல என்பதை நேருஜி இப்போதாவது உணர்ந்து கொண்டதை அறிந்து நாம் பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

* * *

இமாலயப் பிரச்னைகளில் எல்லாவற்றிலும் மிகப் பெரிய பிரச்னையை இனிமேல் நம் மாபெருந் தலைவர்கள் தீர்த்து வைக்க வேண்டும். அந்தப் பிரச்னை, தேர்தல் நடக்கும்போது வோட்டர்கள் சிரத்தையுடன் வோட்டுச் சாவடிக்கு வந்து வோட்டுப் போடும்படி செய்யும் பிரச்னைதான்.

'இமாலயத் தேர்தல்' என்று அடிக்கடி சொல்லி வந்திருப்பது கேவலம் பறங்கிமலைத் தேர்தல் ஆகிவிடக் கூடாது அல்லவா!

இமாலயத் தேர்தலின் முதலாவது கட்டம் இமாலயப் பிரதேசத்திலேயே ஆரம்பமாயிற்று. பத்தாயிரம் அடி உயரத்துக்கு மேலேயுள்ள அந்தச் சிறிய மாகாணத்து வோட்டர்களில் நூற்றுக்குப் பதின்மூன்றே முக்காலரைக்கால் வோட்டர் வீதந்தான் வோட்டுக் கொடுத்தார்கள் என்று தெரிய வருகிறது! ஜனநாயகத்தில் பற்றுள்ளவர்களுக் கெல்லாம் இச்செய்தி அதிர்ச்சியைக் கொடுக்கும். "வயது வந்தவர்களுக்கெல்லாம் வோட்டுரிமை கொடுத்தோம்; புருஷர்களைப் போல் ஸ்திரீகளுக்கும் சமமாக வோட்டுரிமை கொடுத்தோம்" என்றெல்லாம் இத்தனை காலமும் பெருமை யடித்துக் கொண்டிருந்தோமே, அதற் கெல்லாம் பங்கம் வந்து விடும்போல் அல்லவா தோன்றுகிறது! நாடெங்கும் இமாலயப் பிரதேசத்தில் ஆரம்பித்தது போலவே தேர்தல் நடந்து முடியுமானால், அதாவது 100க்குப் பதின்மூன்றே முக்கால் பேர் வீதமே வோட்டுப் போட்டார்களானால், அத்தகைய தேர்தலை 'இமாலயத் தேர்தல்' என்று நாம் பெருமையுடன் மார் தட்டிக் கொண்டு சொல்ல முடியாதல்லவா!

கிரேட் பிரிட்டனில் சமீபத்தில் நடந்த பொதுத் தேர்தலில் 100க்கு 85 விகிதம் வோட்டர்கள் தங்கள் வாக்குரிமையைப் பயன் படுத்தினார்கள். இந்தியாவில் குறைந்தபட்சம் 100க்கு 60 பேராவது வாக்குரிமையைப் பயன் படுத்தினால் ஜனநாயகம் வெற்றி பெற்றதாகும்.

இதை உத்தேசிக்கும்போது காங்கிரஸ் வாதிகள் தங்களூர்குள்ளே அபேட்சகர்களாகப் போட்டி யிட்டதையும் புகார்கள் செய்ததையும் நாம் பாராட்ட வேண்டும். அபேட்சகர்களாகத் தேர்ந்தெடுக்கப்படாதவர்களில் சிலர் சட்டுப் டென்று காங்கிரஸிலிருந்து ராஜினாமா செய்வதையும் பாராட்ட வேண்டும். ஏனெனில் இத்தகைய காரியங்கள் பொது மக்களைத் தேர்தல் மனப் பான்மை கொள்ளச் செய்திருக்கின்றன.

இன்றும், ஆச்சாரிய கிருபளானி காங்கிரஸி லிருந்து வெளி வந்து தனியாகப் பிரஜா கட்சி அமைத்ததும் ஓரளவு ஜனநாயகத்துக்குத் தொண்டு செய்ததாகும். அவருடன் வெளியேறுவதாகச் சொல்லி வெளி வந்து விட்டு உடனே திரும்பிப் போன கித்வாய் முதலியவர்களும் மக்களின் கவனத்தைப் பொதுத் தேர்தலின் பக்கம் இழுக்க உதவி செய்திருக்கிறார்கள்.

இது வரை பாதாள வாசிகளாயிருந்த கம்யூனிஸ்டு தோழர்கள் சிலர் இப்போது பூலோகத்துக்கு வந்து தேர்தல் போட்டிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்கள் மட்டும் சென்ற நாலு வருஷமாக இடைவிடாமல் அமைதியான முறையில் மக்களிடையே வேலை செய்து வந்திருப்பார்களாயின் 100க்கு 60 பேர் என்ன, 90 பேர் கூட தேர்தல் சாவடிகளுக்கு வந்து வோட்டுப் போடும்படி செய்திருக்கலாம். அந்தச் சந்தர்ப்பத்தை இழந்து விட்டார்கள். இப்போதேனும் சட்ட ரீதியான முறையில் அவர்கள் தேர்தலில் போட்டியிட முன் வந்தது ஜனநாயகத்துக்கு அநுகூலமான காரியந்தான்.

பிறகு, நம் சோஷலிஸ்ட் நண்பர்கள் இருக்கவே இருக்கிறார்கள். ''காங்கிரஸ் படுமோசம்—நேரு ஒருவரைத் தவிர!'' என்ற பல்லவியைப் பாடி இவர்களும் வரப்போகும் தேர்தலின் முக்கியத்தைப் பொது மக்களிடையே பரப்பி வருகிறார்கள்.


மற்றும் உழைப்பாளிகள், பாட்டாளிகள், முற்போக்குக் கட்சியார், முஸ்லிம் லீக் தலைவர்கள், ஜஸ்டிஸ் கட்சிப் பெரியார்கள் எல்லாரும் தேர்தலில் கலந்து கொள்ள முன் வருவதன் மூலம் ஜனநாயகத்துக்குத் தொண்டு செய்கிறார்கள்.

நல்ல தொண்டுதான்; நன்றாகச் செய்யட்டும். ஆனால் நேருஜியின் வேண்டுகோளை மனதில் வைத்துக் கொண்டு தொண்டு செய்யட்டும்.

அதாவது தேர்தல் பிரசாரத்தைத் தனிப்பட்ட மனிதர்களை வசை கூறும் சாக்கடையாகச் செய்து விட வேண்டாம். கொள்கைகளையும் திட்டங்களையும் எடுத்துக் கூறி ஜனநாயகத்தை நிலைநிறுத்தும் புனிதமான காவேரி நதியாகச் செய்யட்டும்.

வரப்போகும் பொதுத் தேர்தலில் மகாஜனங்களின் கடமையைப் பற்றி மேலும் நாம் எழுத வேண்டியிருக்கும். அதற்கிடையில், நேயர்களும் பொதுத் தேர்தலைப் பற்றிய தங்கள் கருத்துக்களை வட்டமேஜைப் பகுதிக்கு எழுதும்படி கோருகிறோம். கொள்கைகளையும் திட்டங்களையும் ஸ்தாபனங்களின் தராதரங்களையும் முக்கியமாக வைத்துக்கொண்டு எழுதும்படி வேண்டுகிறோம்.

## சமாதானப் பிரசாரம்!



# நீதியும் நெருப்பும்

மக்களுக்கு சுயநம்பிக்கை தளர்ந்தாலும் தளரலாம். சர்க்கார் மீதுள்ள நம்பிக்கை குறைந்தாலும் குறையலாம். ஆனால் நீதியில் உள்ள நம்பிக்கை, அதாவது தங்களுக்கு நிச்சயம் நீதி கிடைக்கும் என்பதில் உள்ள நம்பிக்கை அணுவளவும் குறைவதற்கு இடம் கொடுக்கக் கூடாது. அவ்விதம் இடம் கொடுப்பது நீதியுடன் விளையாடுவதாகும். நீதியுடன் விளையாடுவது நெருப்புடன் விளையாடுவதாக முடியும்.

சர்வ வல்லமை பொருந்திய சர்க்காரையும் எதிர்த்து நீதி பெற முடியும் என்ற நம்பிக்கை ஜனங்களுக்கு இருக்க வேண்டும். நீதி தேவியின் முன்னிலையில் அரசனும் ஆண்டியும் ஒன்று என்ற தர்மம் சர்க்காரை நடத்தும் ஜனப் பிரதிநிதிகளின் மனதில் நிரந்தரமாக இடம்பெற வேண்டும்.

அதனால்தான் சர்க்கார் நிர்வாகத்தையும் நீதி நிர்வாகத்தையும் பிரிக்க வேண்டும் என்ற அபிப்பிராயம் நாளுக்கு நாள் பலம் அடைந்து வருகிறது. சென்னை மாகாணத்தில் கூட இரண்டொரு ஜில்லாக்களில் அவ்வாறு பிரிக்கப் பட்டிருப்பதையும் பார்க்கிறோம்.

* * *

ஜனங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதில் இந்திய ஜனாதிபதியும் சுதந்திர இந்திய சர்க்காரும் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பது இப்போது வெளியாகியிருக்கிறது.

மைசூர் சமஸ்தானப் பிரதம நீதிபதியைக் கொல்ல முயற்சித்ததாக ஒரு பிரமுகர்மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. அந்த வழக்கை மேற்படி சமஸ்தானத்துக்கு வெளியே உள்ள ஏதாவதொரு கோர்ட்டுக்கு மாற்றி விசாரிக்க வேண்டும்; அல்லது வெளி மாகாணத்திலிருந்து ஒரு நீதிபதியைத் தருவித்து மேற்படி வழக்கை விசாரிக்கச் செய்ய வேண்டும் என்று இந்திய சர்க்கார் அபிப்பிராயப்பட்டனர். நீதி மன்றங்களுக்கே தலைவரான பிரதம நீதிபதி சம்பந்தப்பட்ட ஒரு வழக்கில் தமக்கு நீதி கிடைக்குமா என்ற அவநம்பிக்கை எதிரிக்கு ஏற்பட்டுவிடக் கூடாதல்லவா!

ஆனால் மைசூர் சர்க்கார் அந்த இரண்டு யோசனைகளில் ஒன்றையும் ஏற்றுக்கொள்ள இணங்கவில்லை. எனினும் மைசூர் சர்க்காரைக் காட்டிலும் நீதிதான் பெரிது என்ற எண்ணத்துடன் ஜனாதிபதி, குடியரசு இந்தியா அரசியல் திட்டத்துக்கு இணங்கத் தமது அதிகாரத்தைப் பிரயோகித்து விட்டார். அந்த வழக்கை மைசூர் சமஸ்தானத்துக்கு வெளியே உள்ள ஒரு கோர்ட்டுக்கு மாற்றும்படி மைசூர் சர்க்காருக்கு உத்தரவு பிறப்பித்து விட்டார்.

அவ்வளவுதான்! தர்ம நியாயமான, உயர்ந்த நீதியை அடிப்படையாகக் கொண்ட இந்த உத்தரவு மைசூர் அரசியல் வாதிகளிடையே அர்த்தமற்ற ஆத்திரத்தை உண்டாக்கிவிட்டது. மைசூர் மந்திரிகள் உள்பட எல்லோரும் மைசூர் சட்ட சபையில் தங்களுடைய ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்து விட்டார்கள்.

குறிப்பிட்ட சர்க்கார் நீதியில் மிகவும் அக்கறையுள்ளவர்களாக இருக்கலாம். நீதி மன்றங்கள் நீதி வழங்குவதில் கண்ணும் கருத்துமாக இருக்கலாம். எனினும் வழக்கில் சம்பந்தப் பட்ட நபருக்கு, தமக்கு நீதி வழங்கப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட வேண்டும். அவர் மனதில் எழும் அவநம்பிக்கைக்கு ஆதாரம் இராவிட்டாலும் அவரது உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும்.

எதிரி, குறிப்பிட்ட கோர்ட்டில் தமக்கு நீதி கிடைக்காது என்று கருதும் சந்தர்ப்பங்களில் ஒரு கோர்ட்டிலிருந்து மற்றொரு கோர்ட்டுக்கு வழக்கு மாற்றப்படுவது சர்வசகஜமான காரியம். அது போலவே ஒரு மாகாணத்திலிருந்து மற்றொரு மாகாணத்தில் உள்ள கோர்ட்டுக்கும் வழக்கை மாற்றுவது உண்டு.

* * *

மைசூரிலிருந்து வழக்கை மாற்றும்படி ஜனாதிபதி விடுத்த உத்தரவினால் மைசூர் சர்க்காரின் கௌரவம் குறைந்து விட்டதாகவோ, மைசூர் நீதி மன்றத்துக்குக் களங்கம் ஏற்பட்டு விட்டதாகவோ நினைப்பது தவறாகும்.


ஜனாதிபதியின் உத்தரவினால் மைசூர் சர்க்காருக்கோ, நீதி நிர்வாகத்துக்கோ சிறிதும் களங்கம் ஏற்படவில்லை. ஜனாதிபதியின் உத்தரவை ஆட்சேபித்ததின் மூலம் மைசூர் சர்க்கார் தங்களுக்குத் தாங்களேதான் களங்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

எனினும் மேற்படி களங்கத்துக்கு மைசூர் சர்க்கார் காலதாமதமின்றிப் பரிகாரம் செய்து கொண்டதற்காக அவர்களைப் பாராட்டுகிறோம். வெளி மாகாணத்திலிருந்து ஒரு நீதிபதியைத் தருவித்து விசாரணையை நடத்த வேண்டும் என்ற யோசனையை இப்போது மைசூர் சர்க்கார் கண்ணியமாக ஏற்றுக் கொண்டு விட்டனர். எனவே அதற்குப் பதிலாக ஜனாதிபதியின் உத்தரவும் வாபஸாகிவிட்டது.

இந்திய சர்க்காரின் யோசனைக்கு முதலிலேயே மைசூர் சர்க்கார் இணங்கியிருந்தால் அனாவசியமான மனக் கசப்பு, மனக்கொதிப்பு எல்லாம் தவிர்க்கப் பட்டிருக்கும்.

ஏதோ நடந்தது நடந்து விட்டது! இத்துடனாவது இவ்விஷயம் சீக்கிரத்தில் சுமுகமாகத் தீர்ந்ததைக் குறித்து மகிழ்ச்சி யடைகிறோம்.

## மற்றொரு யுத்தம்!




கல் மனத்தையும் கரையச்செய்யும்
சம்பவங்கள் நிறைந்த
சித்திரம்....
சம்சாரம்
தமிழ்
ஜெமினி
..சித்திரம்..
இப்பொழுது சென்னை....
பிரபாத்
வெலிங்டன்
இரு தியேட்டர்களிலும் மற்றும்
தமிழ்நாடு, கேரளதேசமெங்கும்
நடைபெறுகிறது..




அத்தியாயம் 45

## சிறைக் கப்பல்

கண் மூடிக் கண் திறக்கும் நேரத்தில் 'யானை இறவு' என்னும் கடல் துறை பின்னுக்குச் சென்றது. பின்னர், கானகத்து மரங்கள் பின்னோக்கி ஓடின. வானத்துப் பறவைகள் பின்னோக்கிப் பறந்தன. ஓடைகள், குளங்கள், ஊர்ப்புறங்கள், கோயில்கள், மண்டபங்கள் எல்லாம் பின்னோக்கிப் பாய்ந்து மறைந்தன. மான் கூட்டம் ஒன்று அந்த யானையுடன் சிறிது தூரம் போட்டியிட்டு ஓடப் பார்த்தது. மான்களும் தோல்வி யடைந்து பின் தங்கின. யானை மட்டும் முன்னால் முன்னால் முன்னால் போய்க் கொண்டிருந்தது. எத்தனை தூரம் எத்தனை நேரம் என்றெல்லாம் பூங்குழலிக்கு ஒன்றும் தெரியவில்லை. ஆனால் இன்னமும் ஈழ நாட்டிலேதான் இந்த யானை போய்க் கொண்டிருக்கிறதா என்று மட்டும் பூங்குழலிக்கு வியப்பாயிருந்தது. இத்தனை நேரம் அந்தத் தீவை மூன்று தடவை கடந்து போயிருக்கலாமே? இல்லை, இல்லை! இந்த யானை ஈழ நாட்டைக் கடந்து செல்லவில்லை. பூலோகத்தைக் கடந்து போய்க் கொண்டிருந்தது. பூலோகத்தின் தென் முனையிலிருந்து வட முனைக்குப் போய்க் கொண்டிருக்கிறது! இதன் முதுகில் ஏறிக்கொண்டு நானும் பூமியைப் பிரதட்சணம் செய்கிறேன். நான் மட்டுமா? இளவரசருந்தான்!

முதலில், யானை மதம் பிடித்து ஓடத் தொடங்கியதும், பூங்குழலிக்குக் கொஞ்சம் பயமாய்த்தானிருந்தது. பயத்துடன், என்ன நிகழ்கின்றது என்று தெரியாத தியக்கமும் இருந்தது. இரண்டு மூன்று தடவை இளவரசர் அவளைத் திரும்பிப் பார்த்துப் புன்னகை புரிந்தார். பின்னர் அவளுடைய பயமும் தியக்கமும் மறைந்தன. எல்லையற்ற உற்சாகம் அவளை ஆட்கொண்டது. கொஞ்ச நேரம் வரை இப்பூவுலகில் ஒரு மத்தகஜத்தின் மீது ஏறிச் சென்றாள். திடீரென்று எப்படியோ சொர்க்கத்துக்குப் போய்விட்டாள். சொர்க்கத்தில் தேவேந்திரனுடைய ஐராவதத்தின் பேரில் அவள் வீற்றிருந்தாள். ஐராவதம் வான வீதிகளில் ஊர்வலம் போய்க் கொண்டிருக்கிறது. கற்பக விருட்சங்கள் அவள்மீது சுகந்த மலர்களைப் பொழிந்தன. கந்தர்வர்கள் இன்னிசைக் கருவிகளிலிருந்து இனிய சுவரங்களை எழுப்பிக் கொண்டு அவள் பின்னோடு பறந்து வந்தார்கள். அப்ஸர ஸ்திரீகள் நடனமாடிக்கொண்டு வந்தார்கள். ஊர்வலம் சென்ற வான வீதியின் இருபுறமும் நட்சத்திர தீபங்கள் சுடர்விட்டு ஜகஜ்ஜோதியாகப் பிரகாசித்தன! இப்படிப் பல பல பல யுகங்கள் சென்றன!

இதோ, ஐராவதத்தின் வேகம் குறைகிறது. திடீரென்று அது பூலோகத்துக்கு வந்துவிட்டது. ஈழ நாட்டின் காடுகளுக்கே வந்துவிட்டது. யானைப்பாகன் குனிந்து அதன் மத்தகத்தைத் தட்டிக் கொடுக்கிறான். அதன் காதண்டை ஏதோ சொல்கிறான்.—சச்சே! அவன் யானைப் பாகன் அல்ல; தேவேந்திரன் அல்லவா?—இல்லை; இளவரசர் அல்லவா இவர்?

நாலு புறமும் மரங்கள் சூழ்ந்த ஒரு குளத்தின் கரையிலே வந்து யானை அமைதியாக நின்றது.

பூங்குழலி சிறிது கவலையுடன், இளவரசரை வரவேற்று உபசரிப்பதற்காக

ஜனக்கூட்டம் வந்து அக்கரையில் நிற்கிறதோ என்று பார்த்தாள். இல்லை! பின்னால் குதிரைகள் தொடர்ந்து வருகின்றனவோ என்று பார்த்தாள். அதுவும் இல்லை! குளத்தைப் பார்த்தாள். அதில் பூத்திருந்த அல்லி மலர்களும் செங்கழுநீர்ப் பூக்களும் அப்படி அப்படியே கொடிகளுடன் பிய்த்துக் கொண்டு வந்தன. அவளை நாலு புறமும் சூழ்ந்து கொண்டன. கன்னங்களிலும் தோள்களிலும் உடம்பு முழுவதும் அந்த மலர்கள் அவளைத் தழுவிக் கொண்டு மகிழ்ந்தன. பின்னர் அப் பொல்லாத மலர்களின் கொடிகள் அவளை இறுக்கிப் பிடித்து அமுக்கி மூச்சுத் திணறச் செய்தன. உடம்பை ஒரு குலுக்குக் குலுக்கி அப் பூங்கொடிகளின் பிடியிலிருந்து அவள் திமிறினாள். அப்படித் திமிறிய உடனே வானுலகிலிருந்து பூமிக்குத் தலை கீழாய் வந்தது போலிருந்தது. யானை தன் பெரிய முன்னங் கால்களை மடித்துக் குனிந்தது. பிறகு பின்னங் கால்களையும் மடித்துக் கொண்டு தரையில் படுத்தது. இளவரசர் யானையின் கழுத்திலிருந்து கீழே குதித்தார். "பூங்குழலி! யானை மேலிருந்து இறங்குவதற்கு மனம் இல்லையா?" என்றார்.

பூங்குழலி உடம்பைச் சிலிர்த்துக் கொண்டு தன் நினைவை அடைந்தாள். "ஐயா! சொர்க்கத்திலிருந்து பூமிக்கு வருவது கஷ்டந்தானே?" என்று முணுமுணுத்துக் கொண்டு இறங்கினாள்.

யானை மீண்டும் எழுந்து குளக்கரையிலிருந்த ஒரு பெரிய மரத்தின் கிளையை ஒடித்துத் தன் அகண்ட வாய்க்குள்ளே திணித்துக் கொண்டது.

அருள்மொழி வர்மர் குளத்தின் கரையோரமாகச் சென்று உட்கார்ந்தார். தயங்கி நின்ற பூங்குழலியையும் அருகில் வந்து உட்காரச் சொன்னார்.

தெளிந்த நீரில் பூங்குழலியின் முகம் பிரதிபலித்தது. யானையின் ஓட்டத்தினாலும் அச்சமயம் நேர்ந்த உள்ளக் கிளர்ச்சியினாலும் அவள் முகம் செக்கச் செவேலென்று ஆகிச் செங்கழுநீர்ப் பூவுடன் போட்டியிட்டது.

நீரில் தெரிந்த அவள் முகத்தைப் பார்த்த வண்ணம் இளவரசர் "சமுத்திரகுமாரி! உன்னை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது!" என்றார்.

அல்லி மலர்களும் செங்கழுநீர்ப் பூக்களும் மீண்டும் இடம் பெயர்ந்து வந்து பூங்குழலியின் உடல் முழுதும் முத்தமிட்டன!

"உன்னை ஏன் எனக்குப் பிடித்திருக்கிறது தெரியுமா?" என்று இளவரசர் கேட்டார்.

பூங்குழலியின் கண் முன்னால் வானமும் வையமும் குளமும் அதிலுள்ள மலர்களும் குளக் கரையிலிருந்த மரங்களும் சுழன்று சுழன்று வந்தன.

"எனக்குத் தெரிந்த ஒவ்வொருவரும் நான் அவர்கள் இஷ்டம் போல் நடக்க





வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். நீ ஒருத்தி மட்டும் என் விருப்பத்தின்படி நடக்கச் சந்தோஷத்துடன் சம்மதித்தாய்! இந்த உதவியை என்றும் மறக்க மாட்டேன், சமுத்திர குமாரி!"

பூங்குழலியின் உடம்பு ஒரு யாழ் ஆயிற்று. அவளுடைய நரம்புகள் எல்லாம் அந்த யாழின் நரம்புகள் ஆயின. பொன் வண்ண விரல்கள் அந்த நரம்புகளை மீட்டித் தேவகானத்திலும் இனிய இசையை எழுப்பின.

"சேநாதிபதியும் பார்த்திபேந்திரனும் சேர்ந்து என் பிரயாணத்தைத் தடை செய்வதற்குச் சூழ்ச்சி செய்தார்கள்! சேநாதிபதி நாம் வரும் வழியில் பல இடையூறுகளை உண்டு பண்ணினார். நமக்கு முன் அவசரமாக ஆள் அனுப்பிக் கிராமவாசிகளை உபசாரம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்தார். பார்த்திபேந்திரர் விரைந்து திரிகோணமலைக்குப் போயிருக்கிறார். அங்கிருந்து கப்பல் ஏறி நமக்கு முன்னால் தொண்டைமானாற்றின் முகத்துவாரத்துக்கு வந்து விட வேண்டுமென்பது அவருடைய உத்தேசம். ஆகா! அவர்களுடைய சூழ்ச்சி எனக்குத் தெரியாது என்று நினைத்தார்கள்! உன் உதவியினால் அவர்களுடைய சூழ்ச்சியைத் தோற்கடித்தேன்..."

பூங்குழலிக்குச் சட்டென்று தான் செய்த காரியம் என்ன வென்பது நினைவு வந்தது. அவனை நரக லோகத்தில் யம தூதர்கள் உயிரோடு செக்கிலே போட்டு ஆட்டுவது போலிருந்தது.

"ஐயா! அவர்கள் எல்லாரும் தங்களை எதிரிகளிடம் சிறைப்படாமல் தப்புவிக்க முயன்றார்கள். நான் பாவி! தங்களைச் சிறைப்படுத்த அழைத்துப் போகிறேன்!" என்று கூறி விட்டு விம்மினாள் பூங்குழலி.

"அடேடே! இது என்ன? உன்னைப் பற்றி நான் எவ்வளவோ நல்ல அபிப்பிராயம் கொண்டிருந்தேன். நீயும் அவர்களைப் போல் ஆகிவிட்டாயே?"

"என் சுய புத்தியினால் இந்தப் பாதகத்தை நான் செய்யவில்லை. தங்களுடைய ஆசை வார்த்தையில் மயங்கிப் பைத்தியமாகி விட்டேன். இப்போது புத்தி தெளிந்தது. நான் போகிறேன்......" என்று சொல்லிவிட்டுப் பூங்குழலி குதித்து எழுந்தாள்.

அவள் ஓடிப்போகாமல் தடுப்பதற்கு இளவரசர் அவளுடைய கரத்தை இலேசாகத் தொட்டுப் பற்றினார்.

அச்சமயத்தில் தேவலோகத்துக் கன்னிகைகளுக்கு வேறு வேலை இருக்கவில்லை. அவர்கள் வெண்ணிலவின் சாற்றைச் சந்தனக் குழம்புடன் கலந்து பூங்குழலியின் மீது தெளித்தார்கள்.

அவள் முற்றும் சக்தி இழந்து, செயலிழந்து, மீண்டும் கீழே உட்கார்ந்தாள். இரண்டு கரங்களினாலும் முகத்தை மூடிக் கொண்டு விம்மத் தொடங்கினாள்.

"சமுத்திர குமாரி! உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்ல எண்ணினேன். நீ இப்படி அழுவதாயிருந்தால் சொல்வதற்கில்லை. உடனே புறப்பட வேண்டியதுதான்."

பூங்குழலி கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவரை நிமிர்ந்து பார்த்தாள்.

"அதுதான் சரி; கேள்! இவர்கள் எல்லாரும் என்னைச் சிறைப்படாமல் காப்பாற்ற முயல்கிறார்கள் என்று சொன்னாயே? அது உண்மைதான். அது எதற்காகத் தெரியுமா?"

"தங்கள் பேரில் அவர்கள் வைத்திருக்கும் அன்பினால்தான். நான் ஒருத்தி மட்டுந்தான் பாதகி!......"

"பொறு, பொறு! என்பேரில் எல்லாருக்கும் அன்புதான்! எதற்காகத் தெரியுமா? யாரோ ஜோசியர்களும் ரேகை சாஸ்திரிகளும் சொல்லியிருக்கிறார்களாம், — நான் ஒரு காலத்தில் சக்கரவர்த்தி ஆகப்போகிறேன் என்று. ஆகையால் ஒவ்வொருவரும் என்னைச் சிம்மாசனத்திலே தூக்கி வைத்து என் தலையிலே ஒரு கிரீடத்தையும் சுமத்தி

விடப் பார்க்கிறார்கள். பேராசை பிடித்தவர்கள்!"

"ஐயா! அவர்கள் அப்படி ஆசைப்பட்டால் அதில் தவறு என்ன? இந்த லோகத்துக்கு மட்டுந்தானா, மூன்று உலகத்துக்கும் சக்கரவர்த்தியாகத் தாங்கள் தகுதி வாய்ந்தவர் அல்லவா?"

"ஆகா! நீயும் அவர்களைப் போலத்தான் பேசுகிறாய்! பெண்ணே! இவ்வுலகில் அரண்மனையைப் போன்ற சிறைக்கூடம் வேறில்லை; சிம்மாசனத்தைப் போன்ற பலிபீடமும் இல்லை; கிரீடம் அணிவது போன்ற தண்டனை வேறு கிடையவே கிடையாது. இதையெல்லாம் மற்றவர்களிடம் சொன்னால் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்; நீயாவது ஒப்புக்கொள்ளுவாய் என்று நினைத்தேன்."

பூங்குழலியின் கண்ணிமைகள் பட்டுப்பூச்சியின் சிறகுகளைப் போல் அடித்துக் கொண்டன. அவள் ஆர்வம் ததும்பிய அகன்ற கண்களினால் அரசிளங் குமாரரை நோக்கினாள்.

"சமுத்திர குமாரி! உண்மையாகச் சொல்! உன்னை வாழ்நாளெல்லாம் ஒரு சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கும்படி சொன்னால் உட்கார்ந்திருப்பாயா?" என்று இளவரசர் கேட்டார்.

பூங்குழலி சிறிது நேரம் யோசனை செய்தாள். பின்னர், "மாட்டேன்!" என்று தெளிவாகச் சொன்னாள்.

"பார்த்தாயா? பின்னே என்னை மட்டும் அந்த தண்டனைக்கு ஏன் உள்ளாக்க விரும்புகிறாய்?"

"தாங்கள் இராஜ குலத்தில் பிறந்தவர் அல்லவா?"

"இராஜ குலத்தில் பிறந்ததினால் என்ன? நல்ல வேளையாகக் கடவுள் என்னை அந்த தண்டனைக்கு உள்ளாக்க விரும்பவில்லை. இராஜ்யம் ஆளுவதற்கு என் மூத்த சகோதரர் இருக்கிறார்; என் பெரிய பாட்டனாரின் மகன் ஒருவரும் இருக்கிறார். அவரும் இராஜ்யம் ஆள ஆசைப்படுகிறார்......."

"ஆகா! அது தங்கள் காதுக்கும் எட்டி விட்டதா?" என்றாள் பூங்குழலி.

"நல்ல கதை! எனக்குத் தெரியாது என்று நினைத்தாயா, என்ன? ஆகையால் தஞ்சாவூர் சிம்மாசனம் அதன் பேரில் உட்காருவதற்கு ஆள் இல்லாமல் தவிக்கப் போவதில்லை. அத்துடன் எனக்குக் கிரீடம் சுமந்து இராஜ்யம் ஆளும் ஆசையும் இல்லை!..."

"தங்களுக்கு எதிலேதான் ஆசை?" என்று கேட்டாள் பூங்குழலி.


"அப்படிக் கேள், சொல்லுகிறேன்! சற்று முன் இந்த மத்தகஜத்தின் மீது உட்கார்ந்து பிரயாணம் செய்தோமே? அம்மாதிரி வனங்கள் வனாந்தரங்கள் எல்லாம் புகுந்து சண்டமாருதம் போல் சுற்றி வருவதில் எனக்கு ஆசை. கப்பல்களில் ஏறிக் கடல்களைக் கடந்து செல்வதில் ஆசை. உயரமான மலைகளின் உச்சிச் சிகரங்களின் மேல் ஏறுவதில் ஆசை. கடல்களுக்கு அப்பால் இந்த இலங்கையைப் போல் எத்தனையோ இலங்கைகளும் பரதகண்டத்தைப் போல் எத்தனையோ பெரிய பெரிய கண்டங்களும் உண்டு என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அங்கே யெல்லாம் போய் அந்தந்த நாடுகளில் உள்ள அதிசயங்களைப் பார்க்க வேண்டும் என்று ஆசை!..."

இளவரசர் கூறும் மொழிகளை அப்படியே விழுங்குவாள் போல் பூங்குழலி வாயைத் திறந்தபடி கேட்டுக் கொண்டிருந்தாள். ஆர்வம் கட்டுக்கடங்காமல் போகவே, "ஐயா! அங்கே யெல்லாம் போகும்போது என்னையும் அழைத்துப் போவீர்களா?" என்று கேட்டாள்.

"நான் சொன்னவை யெல்லாம் என் ஆசைகள். அவை நிறைவேறப் போகின்றன என்று யார் கண்டது?" என்றார் இளவரசர்.

பூங்குழலி கனவு லோகத்திலிருந்து பூலோகத்துக்கு வந்தாள். "ஐயா! அப்படியானால் தாங்கள் எதற்காக இப்போது தஞ்சாவூருக்குப் போக வேண்டும்?" என்றாள்.

"அதைச் சொல்லத்தான் ஆரம்பித்தேன். அதற்குள் நீ பேச்சை மாற்றி எங்கேயோ கொண்டு போய் விட்டாய். சமுத்திர குமாரி! இந்த இலங்கைத் தீவில் வாய் திறந்து பேசும் சக்தியற்ற ஊமை ஸ்திரீ ஒருத்தி அங்கு மிங்கும் சித்தப் பிரமை கொண்டவள் போல் சுற்றிக் கொண்டிருக்கிறாளே? அவளை உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார் இளவரசர் அருள்மொழிவர்மர்.





பூங்குழலி அடங்கா வியப்புடன் "தெரியும், இளவரசே! எதற்காகக் கேட்கிறீர்கள்?" என்றாள்.

"காரணம் பிறகு சொல்லுகிறேன். அந்த ஸ்திரீயை உனக்கு எப்படித் தெரியும்? அவளைப்பற்றி என்ன தெரியும்?" என்று கேட்டான்.

"ஐயா! நான் குழந்தை வயதில் என்னைப் பெற்ற தாயை இழந்தேன். பிறகு எனக்கு அன்னையின் அன்பை அளித்தவள் அந்த மூதாட்டிதான். அவள் என் குரு; என் தெய்வம். அவளைப் பற்றி வேறு என்ன கேட்கிறீர்கள்?"

"அந்த மூதாட்டிக்கு நிரந்தரமான வாசஸ்தலம் ஏதாவது உண்டா? எப்போதும் சுற்றித் திரிந்து கொண்டேயிருப்பவள் தானா?"

"கோடிக் கரையிலிருந்து இலங்கையை நெருங்கி வரும்போது பூதத் தீவு என்று ஒரு தீவு இருக்கிறது. அதில் ஒரு பாறைக் குகை இருக்கிறது. அங்கேதான் அந்த அம்மாள் பெரும்பாலும் இருப்பாள். அவ்விடத்தில்தான் தங்களை நான் முதன் முதலில் பார்த்தேன்."

"என்னை அங்கே பார்த்தாயா?"

"ஆம்! அந்தப் பாறைக் குகையில் சில அழகான சித்திரங்களை அந்த அம்மாள் எழுதியிருக்கிறாள். அந்தச் சித்திரங்களில் தங்கள் உருவத்தையும் கண்டேன்! பிறகு ஒரு நாள் கோடிக் கரையில் தங்களை நேரில் பார்த்தபோது, அதனால்தான் பிரமித்துப் போனேன்."

"ஓ! இப்போது எல்லாம் எனக்குத் தெரிகிறது. விளங்காத விஷயமும் விளங்குகிறது. சமுத்திரகுமாரி! அந்த மூதாட்டிக்கும் எனக்கும் உள்ள உறவைப் பற்றியும் உனக்குத் தெரியுமா?"

"ஏதோ உறவு இருக்க வேண்டும் என்று ஊகித்தேன். ஆனால் இன்ன உறவு என்று தெரியாது!"

"பூங்குழலி! அந்த மூதாட்டி என் பெரிய தாயார். நியாயமாகத் தஞ்சாவூர் சிங்காசனத்தில் வீற்றிருக்க வேண்டிய பெருமாட்டி அவள்......"

"கடவுளே! அப்படியா?"

"ஆனால் விதியின் எழுத்து வேறு விதமாயிருந்தது. யார் என்ன செய்ய முடியும்? என் தந்தையின் உள்ளத்தில் ஏதோ ஓர் இரகசியத் துன்பம் இருந்து வேதனைப்படுத்தி வருகிறது என்று சில சமயம் எனக்குத் தோன்றுவதுண்டு. அதன் உண்மையை இப்போதுதான் கண்டுபிடித்தேன். என் பெரிய தாயார் இறந்து விட்டதாக என் தந்தை எண்ணிக் கொண்டிருக்கிறார். தம்மால் இறந்து விட்டதாகவும் எண்ணிக் கொண்டிருக்கிறார். அவள் இறக்கவில்லை, உயிரோடிருக்கிறாள் என்பதை அவருக்கு நான் போய்ச் சொல்ல வேண்டும். சொன்னால் அவர் இருதயத்தின் தாபம் தணியும்; அவரை அரித்துக் கொண்டிருக்கும் மனவேதனை தீரும். சக்கரவர்த்தியின் உடல்நிலை சரியாக இல்லை என்றுதான் உனக்குத் தெரிந்திருக்குமே! மனித வாழ்க்கை அநித்தியமானது. எப்போது என்ன நேரிடும் என்று யாரும் சொல்வதற்கில்லை. வானத்தில் சில நாளாகத் தூமகேது ஒன்று தோன்றி வருகிறது. அதைப் பற்றி ஜனங்கள் பலவாறு பேசிக் கொள்கிறார்கள். சக்கரவர்த்தியின் மனமும் அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. இந்த நிலைமையில், விபரீதமாக எதுவும் நேர்வதற்கு முன்னால், நான் கண்டு பிடித்த விவரத்தை அவருக்குத் தெரிவித்துவிட வேண்டும். சமுத்திர குமாரி! அதற்காகவேதான் நான் அவசரமாகத் தஞ்சைக்குப் போக விரும்புகிறேன். நீ எனக்குச் செய்யும் உதவி எவ்வளவு முக்கியமானது என்று இப்போது தெரிகிறது அல்லவா?"

ஆர்வத்துடன் இளவரசரின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்த பூங்குழலி ஒரு பெரு மூச்சு விட்டாள். "கடவுளே! மனித வாழ்க்கையில் ஏன்

இத்தனை இன்பத்துடன் துன்பத்தையும் வைத்தாய்?'' என்று முணுமுணுத்தாள்.

பிறகு இளவரசரைப் பார்த்து, ''ஐயா! இந்தப் பேதையினால் தங்களுக்கு ஏதேனும் உதவி ஏற்பட்டால் அது என் பூர்வ ஜன்ம பாக்கியம். ஆனால் இதற்கு என் உதவி ஏன்? சேநாதிபதி முதலியவர்களிடம் சொல்லியிருந்தால் அவர்கள் தங்களைத் தஞ்சைக்கு அனுப்பி யிருக்க மாட்டார்களா?'' என்றாள்.

''இல்லை; அவர்கள் யாரிடமும் சொல்ல நான் விரும்பவில்லை. என்னை எப்படியாவது சிம்மாசனம் ஏற்றுவதில் முனைந்திருக்கும் அவர்களுக்கு இது ஒன்றும் முக்கியமாகத் தோன்றாது. என் தந்தையின் அந்தரங்கத்தை அவர்களிடமெல்லாம் சொல்வதற்கும் நான் இஷ்டப்படவில்லை. சொன்னால் அவர்கள் புரிந்து கொண்டிருக்கவும் மாட்டார்கள். உன்னிடம் இன்னொரு உதவியும் கோருகிறேன், சமுத்திர குமாரி! அதற்காகவே முக்கியமாக இங்கே யானையை நிறுத்தினேன். எனக்குச் சக்கரவர்த்தி பட்டமும் சாம்ராஜ்ய சிம்மாசனமும் அளித்த ஜோசியர்கள் என் வாழ்க்கையில் பல அபாயங்கள் — பல கண்டங்கள் — ஏற்படும் என்றும் சொல்லி யிருக்கிறார்கள். இந்தப் பிரயாணத்தில் அப்படி ஏதாவது எனக்கு நேர்ந்துவிட்டால்......என் தந்தையை நான் சந்திக்க முடியாமல் போய் விட்டால், ...... நீ சக்கரவர்த்தியிடம் போக வேண்டும். எப்படியாவது அவரைச் சந்தித்து என் பெரியம்மை உயிரோடிருக்கிறாள் என்பதை அவரிடம் சொல்ல வேண்டும். அவர் இஷ்டப்பட்டால் அந்த மூதாட்டியை அவரிடம் அழைத்துப் போக வேண்டும். இந்தக் காரியத்தை யெல்லாம் செய்வாயா, பூங்குழலி?''

''தங்களுக்கு ஒரு கண்டமும் நேராது; அபாயம் தங்களிடம் நெருங்கப் பயந்து ஓடும். கட்டாயம் பத்திரமாய்த் தஞ்சாவூர் போய்ச் சேர்வீர்கள்...''

''ஒரு வேளை எனக்கு ஏதாவது நேர்ந்தால் நான் கோரியபடி செய்வாய் அல்லவா?''

''கட்டாயம் செய்கிறேன், இளவரசே!''



''இந்த முக்கியமான காரியத்தை வேறு யாரிடம் நான் ஒப்புவிக்க முடியும்? நீயே சொல் பார்க்கலாம்.''

''என்னிடம் ஒப்புவிக்க வேண்டிய காரியத்தை ஒப்புவித்தாகி விட்டது. இத்துடன் என் உபயோகம் தீர்ந்து விட்டதல்லவா? நான் விடைபெற்றுக் கொள்ளலாமா?'' என்றாள் பூங்குழலி. அவளுடைய குரல் கண்ணீரின் ஈரப் பசையோடு கலந்து வந்தது.

''ஆகா! அது எப்படி? தொண்டை மானாற்றின் முகத்துவாரத்தை இன்னும் நாம் அடையவில்லையே? சோழநாட்டுப் போர்க் கப்பல்களை இன்னும் காணவில்லையே? அதற்குள் எப்படி விடை பெற்றுக் கொள்ளலாம்? கோபித்துக் கொள்ளாதே! இன்னும் சிறிது நேரம் பல்லைக் கடித்துக் கொண்டு என்னுடைய சகவாசத்தைப் பொறுத்துக் கொள். யானை மேல் மறுபடியும் ஏறி இன்னும் கொஞ்ச தூரம் என்னுடன் வா! புலிக் கொடி பறக்கும் கப்பலைத் தூரத்தில் கண்டதும் நீ என்னை விட்டுப் பிரிந்து செல்லலாம்!'' என்றார் இளவரசர்.

மறுமொழி ஒன்றும் சொல்லாமல் பூங்குழலி யானை நின்ற இடத்தை நோக்கி நடந்தாள். இளவரசரும் சென்றார். அவருடைய வார்த்தைக்குப் படிந்து யானை மண்டியிட்டுப் படுத்தது. இருவரும் அதன் முதுகில் ஏறிக் கொண்டார்கள். முன்போல் யானையை இளவரசர் விரட்டவில்லை. ஆயினும் விரைவாகவே நடந்து சென்றது.

''சமுத்திர குமாரி! எனக்கு மிகவும் பிடித்த சில காரியங்களைப் பற்றிச் சொன்னேனே? உனக்குப் பிடித்தவை என்னவென்று சொல்லவேண்டாமா?'' என்றார் அருள்மொழி வர்மர்.

''எருமை வாகனத்தின் மீது வரும் யமனை எனக்கு ரொம்பப் பிடிக்கும். நள்ளிரவில் பாறை உச்சியின் மீது நின்று கொண்டு கொள்ளி வாய்ப் பிசாசுகளை நேரம் போவதே தெரியாமல் பார்ப்பதற்கு ரொம்பப் பிடிக்கும்...''

''நல்ல விசித்திரமான குணமுள்ள பெண் நீ!''

"தங்கள் சிநேகிதர் கூறியது போல் 'பைத்தியக்காரப் பெண்' என்று சொல்லுங்கள். அதற்காக நான் வருத்தப்பட மாட்டேன். அப்புறம் சிறிய படகில் ஏறி அலைகடலின் நடுவில் போய்க்கொண்டே இருப்பதற்குப்பிடிக்கும். அதிலும் கடலில் சுழற்காற்று அடித்ததோ, என் உற்சாகம் எல்லை கடந்து விடும். அப்போது படகு ஒரு சமயம் அலை உச்சியில் ஏறி வானுலகத்தை எட்டிப் பிடிக்கும்; மறு கணம் பாதாளத்தில் தடாலென்று விழும். அதைப் போல் எனக்குப் பிடித்த காரியம் வேறொன்றுமில்லை. சற்று முன்னால் இந்த யானை வெறி கொண்டது போல் ஓடி வந்ததே, அப்போதும் எனக்கு அவ்வளவு உற்சாகமாகவே இருந்தது!"

"ஆ! பூங்குழலி! முருகப் பெருமான் உன்னுடைய புன்னகையை நாடி வந்திருந்தால் அடியோடு தோற்றிருப்பார். யானை முகனை அனுப்பிக் குறமகள் வள்ளியைப் பயமுறுத்தினாரே, அந்த யுக்தி ஒன்றும் உன்னிடம் பலித்திராது!" என்றார் இளவரசர்.

அவர்கள் தொண்டைமான் நதியின் முகத்துவாரத்தை அணுகிய போது "ஆ! இது என்ன?" என்று பூங்குழலி கூச்சலிட்டாள்.

"என்ன? என்ன?" என்று இளவரசர் ஆவலுடன் கேட்டார்.

"புலிக் கொடியுடன் கூடிய மரக்கலங்கள் நான் பார்த்த இடத்தில் இல்லையே? என்னைப் பற்றித் தாங்கள் என்ன நினைப்பீர்கள்? சேநாதிபதி என் மீது சந்தேகப் பட்டது போல் தங்களை ஏமாற்றி அழைத்து வந்தவள் ஆகி விட்டேனே!" என்றாள்.

"அப்படி நான் ஒரு நாளும் நினைக்க மாட்டேன், பூங்குழலி! நீ பொய் சொல்லி என்னை வஞ்சித்து அழைத்து வர எவ்வித முகாந்தரமும் இல்லை......"

"ஏன் இல்லை, இளவரசே! காதல் காரணமாக இருக்கலாம் அல்லவா? உலகமெல்லாம் அழகில் மன்மதனையும் வீர பராக்கிரமத்தில் அர்ச்சுனனையும் நிகர்த்தவர் என்று போற்றும் பொன்னியின் செல்வர் மீது மோகங் கொண்டு ஒரு பேதைப் பெண் இம்மாதிரி செய்திருக்கலாம் அல்லவா?"

"பெண்ணே! சேநாதிபதி இங்கே இச்சமயம் இருந்திருந்தால் ஒரு வேளை அவ்வாறு சந்தேகப் பட்டிருக்கலாம். ஆனால் உன் மனதிலும் என் மனதிலும் அத்தகைய பைத்தியக்கார எண்ணங்களுக்கு இடமில்லை."

"ஐயா! பழையாறை அரண்மனையில் வானதி தேவி என்று வீரர் குலத்து இளவரசி ஒருத்தி இருக்கிறாளே, அவளைப் பற்றியும் அப்படித் தாங்கள் சொல்வீர்களா?"

"ஆம், ஆம்! அதை நான் மறந்து விடவில்லை. இந்தச் சேநாதிபதியும் என் தமக்கையும் சேர்ந்து அந்தப் பெண்ணை என் கழுத்தில் கட்டிவிடப் பார்க்கிறார்கள். சோழ குல சிம்மாசனத்தில் அமர வேண்டும் என்ற ஆசையினால் அந்தப் பேதைப் பெண்ணுக்கும் அத்தகைய ஆசை ஒரு வேளை இருக்கலாம். அதற்கு நான் பொறுப்பல்ல, பூங்குழலி! அது போகட்டும்! நீ பார்த்த போது கப்பல்கள் எங்கே இருந்தன?" என்று இளவரசர் கேட்டார்.

"அதோ அந்த முனையில்தான் நின்று கொண்டிருந்தன! எனக்கு மிக நன்றாக நினைவிருக்கிறது!" என்றாள் பூங்குழலி.




"அதனால் என்ன? கொஞ்சம் அப்பால் இப்பால் நகர்ந்து சென்று நிற்கக் கூடும் அல்லவா? எல்லாவற்றுக்கும் கடற்கரை வரையில் போய்ப் பார்த்து விடுவோம்!" என்றார் இளவரசர்.

"கப்பல்கள் போயிருந்தால் நல்லதாய்ப் போயிற்று. இப்பொழுது எதற்காகப் போய்த் தேட வேண்டும்?" என்றாள் பூங்குழலி.

"ஆகா! நீ அப்படி நினைக்கலாம். ஆனால் எனக்கு அதைப் போல் ஏமாற்றம் தருவது வேறொன்றுமில்லை!" என்றார் இளவரசர்.

மூன்னூறு வருஷத்துக்கு முன்னால் இலங்கை இளவரசனாகிய மானவன்மன் காஞ்சிபுரத்தில் வந்து சரண் புகுந்திருந்தான். அவனுக்கு இராஜ்யத்தை மீட்டுத் தருவதற்காக மாமல்ல சக்கரவர்த்தி ஒரு பெரும் படையை அனுப்பினார். அவர் அனுப்பிய படைகள் இந்தப் பிரதேசத்திலேதான் வந்து இறங்கின. அச்சமயம் தொண்டைமான் ஆறு உள்ள இடத்தில் ஒரு சிறிய ஓடைதான் இருந்தது. கப்பல்கள் வந்து நிற்பதற்கும் படைகள் இறங்குவதற்கும் சௌகரியமாவதற்கு அந்த ஓடையை வெட்டி ஆழமாகவும் பெரிதாகவும் ஆக்கினார்கள். பிறகு அந்த ஓடை தொண்டைமானாறு என்று பெயர் பெற்றது. முகத்துவாரத்தின் அருகில் அந்த நதி வளைந்து வளைந்து சென்றது. இருபுறமும் மரங்கள் அடர்ந்திருந்தன. இதனால் கடலிலிருந்து பார்ப்போருக்குத் தெரியாதபடி கப்பல்கள் நிற்பதற்கு வசதியாக இருந்தது.



அவ்வாறு பூமிக்குள் ஆறு புகுந்து தண்ணீர் நிறையத் தேங்கியிருந்த இடம் ஒன்றிலேதான் இளவரசரைச் சிறை பிடிக்க வந்த மரக் கலங்களைப் பூங்குழலி பார்த்திருந்தாள். முதலில் பார்த்த இடத்தில் அந்த மரக் கலங்கள் இப்போது காணப்படவில்லை. அதாவது பாய் மரங்கள், கொடிகள் முதலியவை தென்படவில்லை. அந்த இடத்தை மேலும் நெருங்கிப் பார்த்தபோது ஓர் அதிசயமான காட்சி புலப்பட்டது. கப்பல் ஒன்று வெள்ளத்தை விட்டு அதிக தூரம் பூமிக்குள்ளே சென்று சேற்றிலே புதைந்து போயிருந்தது. அதன் பாய் மரங்கள் கொடிகள் முதலியவை ஒடிந்தும் சிதைந்தும் கிடந்தன. அதில் மனிதர்கள் யாரும் இருந்ததாகத் தெரியவில்லை. இரண்டு நாளைக்கு முன்னால் அவள் பார்த்த கப்பல்களிலே அது ஒன்று என்பது பூங்குழலிக்கு நன்கு தெரிந்தது.

இளவரசரைச் சிறைப் பிடித்துக் கொண்டு போவதற்கென்று வந்த கப்பல்களில் ஒன்று, அதுவே சேற்றில் சிறைப்பட்டுக் கிடப்பதைக் கண்டு பூங்குழலி ஆச்சரியக் கடலில் மூழ்கினாள்!

---

## அட்டைப்பட விளக்கம்

"வேதம் நிறைந்த தமிழ்நாடு" என்று பாடினார் மகாகவி பாரதியார். தமிழ்நாடு மட்டுமல்ல, பாரததேசமே அப்படி இன்று விளங்குவதற்குக் காரண புருஷராயிருந்தவர், ஆயிரத்து இருநூறு வருஷங்களுக்குமுன் தோன்றிய மகா ஞானியான ஆதிசங்கரர் ஆவர்.

அந்த நாட்களில் பாரத தேசத்தில் பாஷாண்ட மதங்கள் பல தலைவிரித்தாடின. அவற்றின் கோர வேகத்தை அடக்கி, நம் புராதன ஹிந்துமதத்தையும் அத்வைத வேதாந்தத்தையும் நிலை நிறுத்தியவர் ஆதி சங்கரர். அவர் மற்ற மதத்தினர்களிடம் நிகழ்த்திய வாதப்போர்களையும், அத்வைதக் கொள்கையை நிலை நிறுத்த அவர் புரிந்த தர்க்க விசாரணையையும் கண்டு இன்றும் உலகத்தில் பல பாகங்களிலுள்ள விஞ்ஞானிகளும் தர்க்க சாஸ்திரிகளும் வியக்கின்றனர்.




சேர நாட்டில் காலடி என்னும் க்ஷேத்திரத்தில் அவதரித்த மகான் சங்கராச்சாரியர். தாம் வாழ்ந்த முப்பத்திரண்டு ஆண்டுகளில் சாதித்த காரியங்கள் யாரையும் பிரமிக்க வைக்கக் கூடியவை. காசி நகரத்து மன்னர் சங்கரரின் மேதையைக் கண்டு சநாதன தர்மத்தைப் பாரத தேசம் எங்கும் திக்விஜயம் செய்து பிரசாரம் செய்யும்படி வேண்டிக்கொண்டார். அவர் விருப்பப்படி காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை யாத்திரை செய்து வேத கால ரிஷிகள் போஷித்த ஹிந்து தர்மத்தைப் பிரசாரம் செய்ததுடன், நான்கு திசைகளிலும் நான்கு பீடங்களைத் தேடிப் பிடித்து, நான்கு மடங்கள் நிறுவினார்.

ஆதிசங்கரர் செய்த நூல்கள் அனந்தம். உபநிஷதங்கள், பகவத்கீதை, பிரம்ம சூத்திரம் முதலியவற்றிற்கு அற்புதமான விளக்க உரை — பாஷ்யம் — எழுதியிருக்கிறார். அருமையான பல தோத்திர நூல்கள் இயற்றியிருக்கிறார். இவற்றுடன் பக்தி மார்க்கத்தின் மேன்மையை எடுத்து உணர்த்தும் 'பஜ கோவிந்தம்' (கோவிந்தனைப் பஜிப்பாயாக) என்றொரு அரிய நூலையும் செய்தார்.

நமது அருமைத் தலைவர் ராஜாஜி அவர்கள் ஆதிசங்கரரின் 'பஜ கோவிந்த' நூலுக்குத் தமிழில் உரையும் விளக்கமும் எழுதியிருக்கிறார்கள்.

'கல்கி'யில் அடுத்த இதழிலிருந்து வாரந்தோறும் அந்த விளக்க உரை வெளியாகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.




9 - 11 - 51 முதல் சென்னையில்

பாரகன், மஹாராணி, லக்ஷ்மி (பெரம்பூர்). ஜனதா டாக்கீஸ் (பல்லாவரம்)

# மக்களே தீர்ப்புக் கூறட்டும்!

கனம் எம். பக்தவத்ஸலம்

வெள்ளையர் வெளியேறியதற்கும் இந்திய சுதந்திரக் குடியரசு பிறந்ததற்கும் அடுத்தபடியாக, இந்தியா மட்டுமல்ல உலகின் சரித்திரத்திலேயே மகத்தான முக்கியத்துவம் பெற்றது, இப்பொழுது நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல்.

இளமைப் பருவத்தில் உள்ள நம் ஜனநாயக சமுதாயம், இன்னும் சில மாதங்களில் ஜனநாயக நிர்வாக அமைப்பை நிர்மாணிக்கும் பொறுப்பை நிறைவேற்றப் போகிறது. நம் நாட்டு மக்கள் தொகையில் பாதி அளவுக்குள்ள, வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை உண்டு; விடுதலை பெற்ற நாட்டின் நிர்வாக அமைப்பைப் புதுப்பிக்கவும் புதிய அமைப்பை நிலைநாட்டவும் அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கப் போகிறது. ஜனநாயகத்தின் சரித்திரத்திலேயே முக்கியமான இப்புதுமையை பாரத நாட்டு மக்கள் மட்டுமல்ல, உலக மக்கள் எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்றனர்.

* * *

'எல்லோரும் இந் நாட்டு மன்னர்' என்றார் கவியரசர் பாரதியார். இந்த உரிமையை ஜனநாயகம் மக்களுக்கு அளித்துள்ளது; இந்த உரிமையைக் கொண்டே வயது வந்தோர் அனைவரும் தேர்தலில் வாக்களிக்கப் போகின்றனர். ஆள்வோரும் ஆளப்படுவோரும் இந் நாட்டு மக்களே. மக்களில் ஒவ்வொருவரும் தம் விருப்பப்படி, நாட்டை ஆள்வது முடியாது; அவ்வாறு செய்ய முயன்றால் நாட்டில் ஜனநாயகம் நிலைக்காது; அராஜகம் தான் பரவும். ஜனநாயகம் நிலைக்க வேண்டுமானால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, பெரும்பான்மையான மக்கள் ஆதரவைப் பெற்ற ஜனநாயக அரசாங்கத்தை நிலைநாட்ட வேண்டும்.

* * *

அரசை அமைக்கும் உரிமை ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படும் போது, ஏகமனதான முடிவை எதிர்பார்க்க முடியாது.

பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதில் மக்களிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டால், பெரும்பான்மையினர் தீர்ப்பே மக்களின் தீர்ப்பாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. உலகெங்கும், ஜனநாயக நாடுகள் வகுத்துப் பின்பற்றி வரும் முறை இதுதான். பொது மக்களின் தீர்ப்பை அறிவதற்கு வாக்குச்சீட்டு தான் சிறந்த சாதனம் என்பதும் அதன் மூலம்தான் தீர்ப்பை நியாயமாகவும் நிச்சயமாகவும் நிதானிக்க முடியும் என்பதும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. உத்தரமேரூர் கோவில் சுவர்களில்உள்ள கல்வெட்டுகளிலிருந்தும், நம் நாட்டில் இப்பகுதிகளில் வசித்து வந்த முன்னோர் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பதும் வாக்குச் சீட்டு முறையையே கையாண்டு வந்தனர் என்பதும் அறியக்கிடக்கின்றன.

* * *


மக்கள் விவேகத்துடனும் நம்பிக்கையுடனும் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கலாம். ஆனால் எவ்வளவு விவேகத்துடனும் திறமையுடனும் தேர்ந்தெடுத்தாலும், அப் பிரதிநிதிகள் எக்காலத்துக்கும் மக்கள் பிரதிநிதிகளாக நிலைக்க முடியாது. தேர்ந்தெடுத்த பொது மக்களிடத்தோ, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடத்தோ, சில மாறுதல்கள் ஏற்படலாம்; இம்மாறுதல்களின் பயனாய், தேர்தல் காலத்தில், பிரதிநிதிகளிடம் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை தளரலாம். ஆகவே பிரதிநிதிகள் ஆயுள் காலம் முழுவதற்கும் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை; ஒரு குறிப்பிட்ட காலத்துக்கே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆகவே தேர்தலில் கலந்து கொள்ளும் வாக்காளரும் அபேட்சகர்களும் விரும்பாவிடினும், தேர்தல்கள் குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு முறை நடந்தே தீர வேண்டும்.



* * *

மக்கள் தீர்ப்பை முடிவு செய்வதற்கு வாக்குச் சீட்டு சிறந்த சாதனம் என்பது ஒப்புக் கொள்ளப் பட்டது போலவே, மக்கள் தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தித் தேர்ந்தெடுக்கச் சாதகமான முறை, கட்சி

களை அடிப்படையாகக் கொண்ட முறை என்ற உண்மையும் ஒப்புக் கொள்ளப் பட்டுள்ளது. தனிப்பட்ட அபேட்சகர்கள் பல பேருடைய தராதரத்தை விசாரித்துச் சிறந்தவரைத் தேர்ந்தெடுப்பது. அரசியல் உணர்வும் அறிவும் உள்ளவர்களுக்குக் கூடச் சிரமமானது. இதில் வாக்காளருக்கு வழிகாட்ட ஒரு முறை தேவை. மக்கள் முன்னுள்ள கருத்துக்களையும் கொள்கைகளையும் கட்சிவாரியாகப் பிரித்தால் மக்கள் அவற்றை ஆராய்ந்து சிறந்ததைத் தேர்ந்தெடுக்க உதவியாக இருக்கும். நாட்டு நிர்வாகத்தில் மக்கள் அக்கறை கொண்டு, அதைப் பற்றிய உண்மைகளை மக்கள் அறிய உதவி செய்வது கட்சி முறை. இதனால்தான் பொதுத் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களுக்குத் தனிப்பட்ட முறையில் சின்னங்கள் ஒதுக்காமல், கட்சி வாரியாகத் தேர்தல் கமிஷனர் சின்னங்களை ஒதுக்கி வருகிறார்.



* * *

பல பழைய, புதிய கட்சிகள், பொதுத் தேர்தலில் போட்டியிட முன் வந்துள்ளன. இவற்றுள் இந்திய தேசிய காங்கிரசும் ஒன்று. நாடு முழுவதற்கும் பிரதிநிதியாகவும், நாட்டு மக்கள் அனைவருடைய அபிலாஷைகளின் களஞ்சியமாகவும் இருந்து, விடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்திய மாபெரும் தேசிய ஸ்தாபனமான காங்கிரஸ் பல தரப்பட்ட கட்சிகளுடனும், புதிய டழைய காளான போல் முளைத்துள்ள சில்லறைக் கட்சிகளுடனும் தேர்தலில் போட்டியிட வேண்டியிருப்பது சற்றுப் பொருத்த மற்றதாகத் தோன்றலாம். ஆனால் விடுதலைப் போராட்டத்தின்போது, மகத்தான பல அபிலாஷைகளை மக்கள் மனத்தில் தோற்றுவித்த காங்கிரஸ், அந்த அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தன் கடமையைச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை.

* * *

வேறு கட்சிகள் இருந்த போதிலும், அவற்றிற்குத் தெளிவான கொள்கையும் திட்டமும் இல்லை. கம்யூனிஸ்ட் கட்சி, சோஷலிஸ்ட் கட்சி, அல்லது புதிதாக அமைக்கப்பட்டுள்ள பிரஜா கட்சி, பழைய இந்து மகாசபைக் கட்சி—இவற்றில் எதை எடுத்துக் கொண்டாலும் மக்கள் முன் சமர்ப்பிக்கக் கூடிய தெளிவான, செயல் முறையில் பின்பற்றக் கூடிய திட்டம் எந்தக் கட்சிக்கும் இல்லை. மக்கள் கட்சி அல்லது கிருஷிகர் கட்சி என்று சொல்லப்படும் கட்சி மக்கள் அல்லது கிருஷிகர் நலனின் ஏகப் பிரதிநிதி என்று கூறிக் கொள்ள முடியாது. கிருஷிகர் பெயரைச் சொல்லி, வாக்காளர் ஆதரவை ஒரு சிலர் நாடினால் அதனால் நாட்டில் உள்ள மற்றவர்கள் கிருஷிகர் நலனுக்குப் பாதகமான திட்டங்களையும் கொள்கைகளையும் பின் பற்றுகின்றனர் என்பதில்லை. உணவுப் பிரச்னையை ஓரே நொடியில் தீர்த்து விட முடியும் என்று பதவி வேட்கையால் உந்தப் பெற்றுப் பிரஜா கட்சி கூறினால் அக்கூற்றை மக்கள் நம்பிவிட மாட்டார்கள். தீவிர, புரட்சிகரமான கோஷங்களை எழுப்பிக் கொண்டு, செல்வமும் செழிப்பும் அனைவருக்கும் கிடைக்கும்படி செய்வோம் என்று கம்யூனிஸ்ட் அல்லது சோஷலிஸ்ட் கட்சி பறை சாற்றினாலும், அக்கட்சிகள் தங்கள் கட்சி நலனுக்காக ஏழைகளைப் பயன்படுத்திச் சுரண்டுவதை வாக்காளரிடமிருந்து மறைக்க முடியாது. இந்தச் சூழ்நிலையில்தான், நாட்டு மக்களுக்கு இணையற்ற சேவை செய்த அனுபவமும், நாட்டின் நலனுக்குகந்த தெளிவான, சாத்தியமான, திட்டமும் உடைய இந்திய தேசிய காங்கிரஸ், தேர்தலில் அரசியல் கட்சி யென்ற முறையில் போட்டியிடுவது அவசியமாகிறது.


ஜனநாயக சரித்திரத்திலேயே மகத்தான, புதுமையான இத் தேர்தல் வெற்றி பெற்று, உலகத்துக்கே சிறந்த வழிகாட்டியாய் அமையும் என்று எதிர் பார்ப்போமாக!

## தீபாவளிக்குப் பிறகு



"என் ஜோபியில் காலணாக்கூட இல்லை, ஸார்!"

"நீங்கள் தேவலையே! எனக்கு ஜோபியே இல்லை, ஸார்!"




கமலா கோபாலன்

கணபதி இருபதாவது வயதில் பி. ஏ. பாஸ் செய்து விட்டான். உடனேயே ஒரு கம்பெனியில் அறுபது ரூபாய் சம்பளத்தில் ஒரு வேலை கிடைக்கவே திருச்சியிலிருந்தும் புறப்பட்டுச் சென்னைக்கு வந்து வேலையை ஒப்புக் கொண்டான். பிறகு புதுப்பாக்கத்தில் பிள்ளையார் கோயில் தெருவில் ஒரு சிறிய வீட்டில் முன் புறத்து அறையை மாதம் ஆறு ரூபாய் வாடகைக்கு பேசி எடுத்துக்கொண்டு, அத் தெருவிலேயே இருந்த ஒரு ஓட்டலில் சாப்பாட்டுக்கும் ஏற்பாடு பண்ணிக் கொண்டான்.

முதலில் அவன் அந்த இடத்தை வாடகைக்குப் பேசும்பொழுது தற்சமயம் இங்கு இருந்துகொண்டு பிறகு ஆபீசுக்கு அருகிலே இடம் பார்த்துக் கொண்டு போக வேண்டும் என்று எண்ணி இருந்தான். ஆனால் பிள்ளையார் கோயில் தெருவின் அச்சிறிய வீட்டுக்கு வசிக்க வந்து இரண்டு மாதங்களுக்குப் பின் அந்த இடத்தை விட்டுச் செல்ல வேண்டும் என்கிற எண்ணத்தையே மறந்து விட்டான். அதற்குக் காரணம் அவன் சாப்பிட்டு வந்த ஓட்டலில் சாப்பாடு அவனது மனத்துக்குப் பிடித்தமானதாக இருந்தது ஒன்று. மற்றொன்று அவன் வசித்த வீட்டில் இருந்த பாட்டியின் பேத்தி. அந்த வீட்டில் அவர்கள் இருவர் மாத்திரமே வசித்து வந்ததால் சொந்த வீட்டில் வசிப்பது போன்ற சௌகரியங்கள் இருந்தன. சங்கீதம் பயின்று வரும் அந்தப் பெண் கற்பகம் சங்கீதப் பிரியனான கணபதியை வேறெங்கும் போக எண்ணங் கொள்ளாதபடி செய்து விட்டாளென்று சொன்னால் அது மிகையல்ல.

பத்தடி அகலமும் காற்பதடி நீளமுமுள்ள அந்தச் சிறு தாழ்ந்த கூரை வீட்டில் பாட்டியும் பேத்தியுமாகத்தான் வசித்து வந்தனர். பாட்டியின் ஜீவேவுதி அந்தச் சிறு கூரை வீடு ஒன்றுதான். அவள் உயிருடன் வாழ்ந்ததெல்லாம் தனது காதியற்ற பேத்தி ஒருத்திக்காகத்தான். அப்பளம் இட்டும், ஊறுகாய் செய்து கொடுத்தும், தெரிந்த வீட்டில் உபகாரமாய் வேலை செய்து கொடுத்தும் தன் அருமைப் பேத்தியைக் காப்பாற்றி வந்தாள். அத்துடன் அவளைப் படிக்கப் பள்ளிக்கு அனுப்பினாள்; சங்கீதம் சொல்லி வைத்தாள்.

பாட்டியின் ஆசைகளைப் பேத்தி கற்பகம் வீண் போக்கவில்லை. சூடிகையான அவள் நன்கு படித்து வந்ததுடன், சங்கீதத்தை மிக ஆர்வத்துடன் பயின்று வந்தாள். அவளது இனிய சாரீரம் கேட்பவர் மனதைக் கவரும். அத்துடன் அவளுக்குப் பிடில் வாசிப்பதில் அபூர்வ அமைப்பு ஏற்பட்டிருந்தது.

கற்பகம் அதிகச் சிவப்புமல்ல, ஆனால் ஒட்டிக் கொள்ளும் கறுப்புமல்ல. அவள் மாநிறமாக இருந்ததுடன் நல்ல வளர்ச்சியும் முகத்தில் வசீகரமான களையும் பொருந்தி விளங்கினாள். அவள் அதிகம் கலகல வெனப் பேசிச் சிரிக்கும் சுபாவம் உள்ளவளல்ல. பாட்டியின் வளர்ப்பில் மிக்க அடக்கமாய் இருக்கப் பழக்கப் பட்டிருந்தாள்.

பாட்டிக்கு கணபதியைப் பற்றி நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டிருந்ததுடன் அவன் தனது தூர பந்துவான ராமமூர்த்தியின் பெண் வயிற்றுப் பேரன் என்பதையும் தெரிந்து கொண்டு அதில் விசேஷமாகச் சந்தோஷப் பட்டாள்.

கணபதிக்குத் தாயாரும் தமக்கையும் இருந்தனர். தமக்கையின் புருஷர் திருச்சியில் பிரபல டாக்டராக இருந்தார். கணபதியின் தாயார் பெண்ணிடமே இருந்து வந்தாள். கணபதிக்கு அவனது தமக்கை புருஷரிடம் மிக்க மரியாதையும் அன்பும் உண்டு. அவர் கூறுவதை அவன் தட்டிச் சொல்லும் வழக்கம் கிடையாது.

கணபதி அந்தக் கம்பெனியில் உத்தியோகம் ஏற்றுக் கொண்டு பிள்ளையார் கோயில் தெரு வீட்டில் வசிக்க ஆரம்

பித்து ஒன்றரை வருஷமாயிற்று. ஒருநாள் அவனது ஆபீஸ் விலாசத்திற்கு ஒரு கடிதம் வந்தது. அவனுடைய அத்திம்பேர் எழுதி இருந்தார். அதைப் படித்ததும் அவன் மனம் என்னவோ போலாகி விட்டது. அதாவது அக்கடிதத்தில் திருச்சியிலேயே ஒரு கம்பெனியில் மாதம் இருநூறு ரூபாய் சம்பளத்தில் ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்திருப்பதாயும், அதை அவன் இரண்டு நாளில் வந்து ஒப்புக் கொள்ள வேண்டுமாதலால் மறு நாளே புறப்பட்டு வரும்படியும் எழுதி இருந்தது.

அவன் அன்று வீட்டுக்கு வந்ததும் என்றும்போல் அவன் சந்தோஷமாக இருக்கவில்லை என்பதைக் கற்பகம் உணர்ந்தாள். ஆனால் அவள் அவனை ஏதும் விசாரிக்கவில்லை. பாட்டி அடுப்பங்கரையில் வேலையில் ஈடுபட்டிருந்தாள். தூணில் சாய்ந்தபடி அமர்ந்திருந்த கணபதி சற்று தூரத்தில் ஏதோ புத்தகத்தைப் புரட்டியபடி உட்கார்ந்திருந்த கற்பகத்தைப் பார்த்து "கற்பகம், நாளையிலிருந்து நானிங்கு இருக்க மாட்டேன்......ஊரில் இருநூறு ரூபாய் சம்பளத்தில் ஒருவேலை பார்த்து வைத்திருக்கிறாராம் அத்திம்பேர். உடனே புறப்பட்டு வரும்படி கடிதம் வந்திருக்கிறது......நான் ஊருக்குப் போய்விட்டால் நீ என்னை மறந்து விடமாட்டாயே?" என்று கேட்டான்.

கற்பகம் "நாளைக்குப் புறப்படுகிறீர்களா?" என்று கேட்டாள்.

அவளது குரலில் ஆச்சரியமோ, வருத்தமோ, எதுவுமே தெரியவில்லை. அவள் அப்படிச் சாதாரணமாகக் கேட்டது ஆச்சர்யத்தை உண்டு பண்ணிற்று அவனுக்கு.

"ஆமாம், நாளைக்குத்தான் புறப்பட வேண்டும்" என்றான்.

கற்பகம் "ஆம், கட்டாயம் சென்று அத்திம்பேர் எப்படிச் சொல்லுகிறாரோ அப்படிச் செய்வதுதான் நல்லது......நானும் பாட்டியும் உங்களை மறக்க மாட்டோம்...... நீங்களும் எங்களை மறக்காமலிருக்க வேண்டும்" என்று சொன்ன கற்பகம் ஒரு நிமிஷம் பேசாமலிருந்து விட்டு, "இன்றைக்கு நீங்கள் பாடவே இல்லையே! பாடுகிறீர்களா? நான் பிடில் வாசிக்கிறேன்" என்று எழுந்து பிடிலை எடுத்து வந்தாள். பிறகு அவனுக்கு மிகப் பிடித்தமான "எந்துகு தயராது ரா," "சல மேலரா" முதலியவற்றை ஆரம்பித்து வாசிக்க கணபதி பாடினான். கற்பகமும் பாடினாள்.

"அன்றையதினம் போல் அவ்வளவு நன்றாய் என்றுமே பாடியதில்லை" என்று பாட்டி ரொம்பவும் சந்தோஷப் பட்டாள்.

★

கணபதி திருச்சி வந்து சேர்ந்து ஆறு மாதங்களாகி விட்டன. வந்த புதிதில் கற்பகத்தின் நினைவு அடிக்கடி வருத்திக்கொண்டிருந்தது. ஆறு மாதங்களுக்குப்பின் வேலைத் தொந்தரவாலும், மற்ற அலுவல்களாலும் கற்பகத்தின் நினைவு அதாவது காலத்தின் போக்கால் ஏற்படும் மறதியிலே முன் போல் அவ்வளவு மும்முரத்திலில்லை.

அட்வகேட் சாம்பசிவத்தின் பெண் மாலதி இன்டர் வகுப்பில் படித்து வந்தாள். ஆறு மாதகாலமாய் அவளோடு பழக நேரிட்டது பற்றித் தன்னைப்போல் பாக்யசாலி யாரும் இரார் என்று பெருமிதம் கொண்டான், கணபதி. 'புத்திசாலியும், ரஸிகையுமான மாலதியை விட்டுத் தான் ஒரு காலத்தில் கட்டுப் பெட்டி போன்ற கற்பகத்தைப் பாராமலிருப்பதைப் பற்றி வருந்தினேனே! என்ன அசட்டுத்தனம்!' என்று கூட ஒரு நாள் நினைத்தான்.

கணபதியின் தாயார், தமக்கை யாவரும் அட்வகேட் வீட்டில் சம்மந்தம் ஏற்படப் போவது பற்றி மிகவும் பெருமைப் பட்டுக் கொண்டிருந்தனர். கணபதியின் கல்யாணத்திற்கு இன்னும் இருபதே நாள்தானிருந்தது. கணபதியும் மாலதியை விவாகம் செய்து கொள்ளும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தான்.

மனிதன் நினைத்தபடி எல்லாமே நடந்து விடுகிறதா? அன்று கணபதி ஏதோ காரியமாய்ப் பொன்மலை சென்றான். வழியில் பஸ் விபத்திற்குள்ளாகி ஆஸ்பத்திரியில் கிடந்தான். அவனது நெற்றியிலும் கண்ணிலும் பெரிய கட்டு கட்டப் பட்டிருந்தது.

இருபது நாட்களுக்குப் பிறகு அவன் ஆஸ்பத்திரியை விட்டு வீட்டுக்கு வந்த சமயம் அவனது அழகிய முகத்தை இடது புருவத்தின் மத்தியைப் பிளந்துசென்றிருந்த ஆழமான வடுவும், இடது கண் இமையில் தையல் 'போடப்பட்டிருந்ததால் அக்கண் சற்று சிறியது போலும் காணப்பட்டு அவனது முக லட்சணத்தையே குறைத்து விட்



ஆந்திரப் பிரமுகர் (ஸர்வரைப் பார்த்து):—ஒரு வெங்காய தோசை கொண்டுவா!

ஸர்வர்:—வெங்காய தோசை வேண்டுமானால் கொஞ்சம் நேரமாகும், ஸார்!

ஆந்திரப் பிரமுகர்:— ஆந்திர மாகாணம் கிடைப்பதற்குள் அது கிடைத்துவிடும் அல்லவா?

டிருந்தது. ஆஸ்பத்திரியில் அவளை ஒரே ஒரு நாள் வந்து பார்த்த மாலதியிடம் அவனால் பேசவே சந்தர்ப்பப்படாமல் இருந்து விட்டதால் வீட்டிற்கு வந்த மறுநாளே அவளை அவன் வீட்டிலேயே போய்ப் பார்க்கப் புறப்பட்டான். கணபதி அட்வகேட் வீட்டை அடைந்தபொழுது வேலைக்காரன், ஐயாவும் அம்மாவும் வெளியில் போயிருப்பதாயும், சின்ன அம்மாள் மட்டும் மாடியில் சிநேகிதியுடன் பேசிக் கொண்டிருப்பதாயும் தெரிவிக்கவே கணபதி மாடிக்குச் சென்றான். அப்பொழுது மாலதியும் அவள் தோழியும் பேசுவது காதில் கேட்டது. அவன் படியிலேயே சற்று நின்றான்.

"போ விஜயா, நீ இனி மேல் அந்தக் கணபதியின் பேச்சை எடுத்தால் எனக்குக் கோபம் வரும். முன்பே எங்கப்பா அம்மாவுக்கு அந்த இடம் நமக்குச் சரியான சம்பந்தம் இல்லையே என்று தயங்கத்தான் தயங்கினார்கள். அப்புறம் போகிறது மாதம் இருநூறு ரூபாய் சம்பாதிக்கிறானே என்று ஏதோ சம்மதப்பட்டு நிச்சயம் பண்ணினார்கள். நல்ல வேளை, அவன் பஸ் விபத்தில் மாட்டிக் கொண்டதுமே என் பெற்றோர் 'பணக்காரனாக இல்லாவிட்டாலும் சம்பாதிக்கிறானே, உன்னைக் கொடுக்கலாமென்று நினைச்சோம். ஆனால் அதுக்குக்கூட அதிர்ஷ்டமில்லையம்மா, உனக்கு வேறு நல்ல இடம் பார்க்கிறோம்' என்று சொல்லி விட்டார்கள். நேற்று சாயங்காலம் நாங்கள் காரில் போய்க்கொண்டிருந்த பொழுது அவர்கள் வீட்டு வாயிலில் அவன் நின்றுக் கொண்டிருந்த பொழுது பார்த்தோம். இனிமேல் அவனுக்கும் பிள்ளையாருக்கும் ஒன்றாகத்தான் கல்யாணம்" என்றாள். இருவரும் சிரித்தனர்.

அதற்குமேல் கணபதியால் அங்கு நிற்க முடியவில்லை. மனசில் நிராவேதனையுடன் மளமள வென்று படி இறங்கி வீட்டை நோக்கி நடந்தான். அதற்குப் பிறகு யார் கல்யாணப் பேச்சை எடுத்தாலும் அவனுக்குக் கோபம் வந்து கொண்டிருந்தது.



கண் டாக்டர் (எழுத்துக்கள் அடங்கிய போர்டை மாட்டி):— ஸார், இந்த போர்டிலுள்ள எழுத்துக்களைத் தயவு செய்து உரக்கப் படியுங்கள்!

வந்தவர்:— டாக்டர் ஸார்! மன்னிக்க வேண்டும். எனக்கும் கண் பார்வை குறைவு. தயவு செய்து நீங்களே படித்துச் சொல்லுங்கள்!

*

கணபதியின் தமக்கை பெண்ணின் குழந்தைக்கு ஆண்டு நிறைவு பட்டணத்தில் இராயப் பேட்டையில் நடப்பதாகக் கடிதம் வந்தது. கணபதி அதற்குப் பட்டணம் போனான். ஆண்டு நிறைவு ஆன மறுநாள் காலையில் கூடத்தில் அமர்ந்து தினசரிப் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது மாடியிலிருந்து இருவர் பிடில் வாசிப்பதும் பாடுவதும் காதில் கேட்டது.

கணபதியின் மனம் ஒருவிதப் பரபரப்பை அடைந்தது. ஐந்து வருஷங்களுக்கு முன் புதுப்பாக்கம் பிள்ளையார் கோயில் தெருவில் தான் வசித்ததும், அங்கு கற்பகத்துடன் தான் தினமும் பாடியதும் அவன் நினைவுக்கு வந்தது. எழுந்து தெருப் பக்கத்து வராண்டாவில் வந்து நின்று கொண்டான். மாடியில் பாட்டுச் சொல்லிக் கொடுக்கும் அந்த உபாத்தியாயினி யார் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று அவன் மனம் துடித்துக் கொண்டிருந்தது.

அரை மணி பொறுத்து பாட்டுச் சத்தம் நின்ற இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம் மாடிப்படியில் யாரோ இறங்கி வரும் சத்தம் கேட்டது. கணபதி ஆவலாகப் பார்த்தான்.

ஐந்து வருஷங்களுக்கு முன் தன் மனசில் எப்பொழுதும் இடம் பெற்றிருந்த அந்த நங்கை இப்பொழுது கம்பீரமான தோற்றத்துடனிருப்பதைக் காண அவன் மனம் சந்தோஷத்தையும் பெருமையையும் அடைந்தது. ஆனால் அவள் தான் அங்கு நிற்பதைப் பார்க்காமலே போய் விட்டதை நினைக்க அவன் மனம் ஏமாற்றத்தை அடைந்தது.

'ஆம், அவள் கண்ணும் கருத்தும் வேறு எதிலோ சென்று விட்டதால் நம்மைப் பார்க்கவில்லை. நாம் தான் அவளருகில் சென்று அவளது சௌக்கியத்தை விசாரித்தால் போயிற்று' என்று எண்ணினவனாய் மளமளவென்று அவளை நோக்கி நடந்தான்.

அவளருகில் சென்றதும் "சௌக்கியமா கற்பகம்?" என்றான். தலையைத் திருப்பி அவனை நிதானமாகப் பார்த்த கற்பகம் "ஓ! நீங்களா? சௌக்கியந்தானே?' என்று மெல்ல நடந்தபடியே கேட்டாள். கணபதி அவளருகில் நடந்தபடியே "சௌக்கியந்தான். பரவாயில்லை; என்னை அடையாளம் கண்டு பிடித்து விட்டாயே!" என்று அவள் முகத்தைக் கவனித்தான். ஆனால் அவளது முகத்திலிருந்து அவனால் எந்த வித்தியாசத்தையும் கண்டு பிடிக்க முடிந்தால்தானே!

"அடையாளம் கண்டுபிடிக்க முடியாத அவ்வளவு காலம் ஆகி விடவில்லையே! நாம் ஒருவரை ஒருவர் பார்த்து ஐந்து வருஷங்கள்தானே ஆகிறது" என்றான்.

கணபதி, "ஆமாம் ஐந்தே வருஷங்களானலும் நான் ஒரு பெரிய கண்டத்திலிருந்து தப்பிப் பிழைத்தேன். புனர் ஜன்மம்போல் பிழைத்துக் கொண்டாலும் அதனால் உண்டான தழும்பிலிருந்து தப்ப முடியவில்லை. என் முகத்தைப் பார்த்தால் அது நன்ருகத் தெரியுமே!" என்றபடி கறுப்பு மூக்குக் கண்ணுடியைக் கையில் சுழற்றிக் கொண்டு அவள் பக்கம் திரும்பினன்.

மறுபடியும் கணபதிதான் பேச்சைத் தொடங்கினன். "நான் ஏதேதோ என்னைப் பற்றியே சொல்லிக்கொண்டு போகிறேனே! பாட்டி சௌக்கியமாக இருக்கிருரா? நீ...... நீயும் பாட்டியுடனிருக்கிருயா? இல்லை..." என்று முடிக்காமல் தயங்கினன்.

திரும்பிப் பார்த்த கற்பகம் மெல்லச் சிரித்துக்கொண்டு "நான் எப்பொழுதும் போல் பாட்டியுடன்தான் இருந்து வருகிறேன்...... பதினைந்து நாட்களாகப் பாட்டியின் உடம்பு குணமில்லை. நடமாடக் கூட முடியாமல் படுத்த படுக்கையாகத்தானிருக்கிருள். வேலைக்காரக் கிழவியைத் துணைக்காக இருக்கச் செய்துவிட்டு வந்தேன். பாட்டியையே கவனித்துக் கொண்டு வீட்டிலேயே இருந்தால் டியூஷன் சொல்லிக் கொடுக்கும் வீட்டார் பணம் கொடுப்பார்களா? பணம் வந்தால்தானே பாட்டியையும் கவனிக்க முடியும்?" என்ருள்.

கணபதி "அப்படியானல் நீ...நீ...இன்னும் கல்யாணம் பண்ணிக் கொள்ளவில்லை என்று சொல்லு! எனப்படி?" என்று பரபரப்புடன் கேட்டான்.

கற்பகம் "எனப்படி என்ன? ஆறு இடத்தில் பாட்டுச் சொல்லிக் கொடுக்கிறேன். நூற்றிருபது ரூபாய் வருகிறது. இதில் சுகக் குறைவு ஒன்றுமில்லையே!" என்ருள்.

கணபதி "சுகக் குறைவு ஒன்றுமில்லைதான். நான் கூடத்தான் 'ஏண்டா இன்னும் கல்யாணம் பண்ணிக்கொள்ளவில்லை?' என்று கேட்கிறவர்களுக்கு 'இப்படி இருப்பதுதாண்டா சுகமாக இருக்கிறது' என்று பதில் சொல்லுகிறேன். ஆனல் அந்தராத்மா அதை நிஜம் என்று சொல்லுமா? ஆமாம். வெகு நாட்களுக்கு முன்பே ஒரு பெண் என் மனசைக் கவர்ந்திருந்தாள். ஆனல் அதை முட்டாளான நான்தான் உணர்ந்து கொள்ளாமல் வெளித்தோற்றத்தில் மயங்கி ஒரு அதல பாதாளத்தில் விழ இருந்தேன். ஏதோ பகவான் கிருபையால் அதில் விழுந்து ஆயுள் முழுவதும் கஷ்டப்படாமலிருக்க ஒரு பஸ் விபத்தில் சிக்க நேர்ந்து நான் செய்ய விருந்த தவறை மறக்காமலிருக்க முகத்தில் தழும்பையும் பெற்றிருக்கிறேன். நான் இப்படி வெளித்தோற்றத்தைக் கண்டு ஏமாற இருந்தோமே என்கிற வருத்தத்தினலேயே விவாகத்தைப் பற்றி இதுகாறும் நினைக்காமலிருந்தேனே தவிர வேறில்லை!" என்ருன்.



கணவன் :—நீ தினமும் அடுப்பை ஊதி ஊதிக் கஷ்டப்படுவதைப் பார்க்க எனக்கு வயிறு எரிகிறது!

மனைவி :—உம்...... அடுப்புத்தான் எரிய மாட்டேன் என்கிறது!

இதற்குள் கற்பகத்தின் வீடு வந்துவிட்டது. வீட்டிற்குள் நுழைந்த கற்பகம் பாட்டியருகில் சென்று காதோடு "பாட்டி அவர் வந்திருக்கிருர்" என்ருள் மெள்ள.

கண்களை மூடிக்கொண்டு படுத்துக் கொண்டிருந்த பாட்டி கண்களைத் திறந்து பேத்தியைப் பிடித்துக் கொண்டு மெல்ல எழுந்து உட்கார்ந்து "கணபதி, வாப்பா, உட்காரு" என்ருள்.


கணபதி பாட்டியின் அருகில் உட்கார்ந்து கொண்டான்.

"எங்கே இப் பெண்ணை அனதரவாக விட்டு விட்டுப் போய்விடுவோமோ என்கிற கவலையே என்னைப் படுக்கவைத்து விட்டதப்பா......மகராஜன் இந்த ஏழைகளை மறக்காமல் நல்ல சமயத்திலே வந்து சேர்ந்தியே பகவான் கிருபைதான்...நீ வர வேண்டும். அந்தப் பெண்ணை உன்னிடம் ஒப்படைத்த பிறகுதான்...இந்த உடலை விட்டு உயிர் போக வேண்டும் என்ற ஒரே அபிலாஷை தானப்பா எனக்கிருந்தது...அந்த அபிலாஷையைப் பூர்த்தி செய்துவிட்டாள் அந்தப் பராசக்தி. இனி எனக்குக் கவலை கிடையாதப்பா" என்று சந்தோஷ மேலீட்டால் ஏற்பட்ட கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். பாட்டி பிறகு "அம்மா, ஐந்து வருஷகாலமாய்த் தியானம் பண்ணிக் கொண்டிருந்த புருஷன் வந்திருக்கிருர், உள்ளே அழைத்துக் கொண்டு போய் ஏதேனும் ஆகாரம் கொடம்மா" என்று பலஹீனத்தால் மெல்ல மெல்லக் கூறினள்.

அப்போதுதான் உள்ளே இருந்து பாட்டிக்காகக் கஞ்சி எடுத்துக் கொண்டு வந்த கற்பகம் பாட்டி சொன்னதைக் கேட்டதும் கணபதியை நோக்க கணபதியும் அவளைப் பார்த்தான்.

கற்பகத்தின் முகம் நாணத்தால் சிவந்தது.

கணபதிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியில் பாட்டியுடன் என்ன பேசுவது என்று கூடத் தோன்றவில்லை. அவன் அங்கு நின்ற கற்பகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.



# கஜேந்திரனின் சினிமாப் படம்

விஜயம்

அந்த மலைக்காட்டில் யானைகள் அதிகம். அதனால் அந்தக் காட்டுக்கு யானைக் காடு என்றே பெயர் ஏற்பட்டு விட்டது. மாதவனின் தகப்பன் அங்கேதான் ஒரு குடிசை கட்டிக்கொண்டு வசித்து வந்தான்.

மாதவன் பன்னிரண்டு வயதுப் பையனாயிருந்தாலும் நல்ல தைரியசாலி. பிரும்மாண்டமான மலையைப் போலிருக்கும் யானைகளைக் கண்டு அவன் கொஞ்சம்கூடப் பயப்பட மாட்டான். அலட்சியமாக அவைகளுடைய தும்பிக்கையில் உட்கார்ந்து சவாரி செய்வான். காட்டில் எங்கே போக வேண்டுமானாலும் யானை மேல் ஏறிக் கொண்டுதான் போவான். அந்தக் காட்டைச் சேர்ந்த யானைகளும் மாதவனிடம் மிகவும் பிரியமாயிருந்தன; அவைகள் தாமாகவே வந்து அவனைத் தும்பிக்கையினால் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு உற்சாகமாகக் காடெல்லாம் சுற்றி வரும்.

அந்தக் காட்டில் இருந்த யானைகளுக்குள் மாதவனுக்கு மிகவும் பிடித்தமான யானைக் குட்டி ஒன்று இருந்தது. அது மிகவும் சின்னக் குட்டி. அந்த யானைக் குட்டிக்கு கஜேந்திரன் என்று மாதவன் பெயர் வைத்திருந்தான்.

கஜேந்திரன் மிகவும் புத்திசாலி. தன் கூர்மையான புத்தியினால் மாதவன் என்ன சொன்னாலும் புரிந்து கொண்டு அதன்படி நடக்கும்.

இரண்டு காலால் நிற்கவும், நாற்காலியில் உட்காரவும் இன்னும் பலவிதமான சர்க்கஸ் வேலைகள் செய்யவும் மாதவன் கஜேந்திரனுக்குப் பழக்கி வைத்திருந்தான். கஜேந்திரனும் கொஞ்சங்கூட அலுத்துக் கொள்ளாமல் அவன் சொல்லிக் கொடுத்த வேலைகளையெல்லாம் செய்யும். அது மாதவன் வீட்டு வாசலில்தான் எப்போதும் இருக்கும். மாதவனின் தகப்பன் அதை மிகவும் ஆசையாக வளர்த்து வந்தான்.

ஒரு நாள் அந்தக் காட்டுக்குப் புதிதாக நாலைந்துபேர் 'ஜீப்' காரில் வந்திருந்தார்கள். அவர்களோடு ஒரு பெரிய லாரியும் வந்தது. அவர்கள் காடு முழுவதும் 'ஜீப்' காரில் சுற்றினார்கள். நாலைந்து நாட்கள் அந்தக் காட்டிலேயே கூடாரம் அடித்துக்கொண்டு தங்கியிருந்தார்கள். யானைகள் கூட்டம் கூட்டமாக வசிப்பதைப் பார்த்தார்கள்.

முக்கியமாக அவர்களுக்குக் கஜேந்திரனை ரொம்பவும் பிடித்திருந்தது. அது செய்யும் வேடிக்கைகளையும், விளையாட்டுக்களையும் பார்த்து அவர்கள் பூரித்துப் போனார்கள். மாதவனின் தகப்பனிடம் வந்து அந்த யானைக் குட்டியை விலைக்குத் தரும்படி கேட்டார்கள். மாதவன் அந்த யானைக் குட்டியை விலைக்குத் தரவே முடியாது என்றான். தன் தகப்பனாரிடமும் அதை விற்கக் கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டான்.

வேறு வழியில்லாமல் அவர்களும் தங்கள் கூடாரத்துக்குத் திரும்பிப் போய் விட்டார்கள். அவர்களுக்கு எப்படியாவது அந்த யானைக் குட்டியை வாங்கிக் கொண்டு போய் விட வேண்டும் என்று இருந்தது. மாதவனின் பிடிவாதம் காரணமாக அவன் தகப்பன் அதை விற்க மறுத்து விட்டான். ஆனாலும் அவர்களுக்கு அந்த யானைக் குட்டியை விட்டு விட்டுப் போக மனமில்லை.

அதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்த வண்ணம் இருந்தார்கள்.

இரண்டு நாட்களுக்கெல்லாம் மாதவனும் அவனுடைய தாயாரும் ஒரு கல்யாணத்துக்காகப் பக்கத்து ஊருக்குப் போனார்கள். அவ்வளவுதான். அது அந்த வெளியூர்க்காரர்களுக்கு ரொம்பவும் அதிர்ஷ்டமாய்ப் போய்விட்டது.

அந்தச் சமயம் பார்த்து அந்தக் காட்டுக்குப் புதிதாக வந்த 'ஜீப்'கார் மனிதர்கள் மீண்டும் வந்து மாதவனின் தகப்பனைக் கண்டு அந்த யானைக் குட்டியைக் கேட்டார்கள். எவ்வளவு விலை கேட்டாலும் கொடுப்பதாகச் சொன்னார்கள்.



மாதவனின் தகப்பனுக்கு யானைக் குட்டியைக் கொடுத்து விடலாம் என்று ஒரு ஆசை உண்டாயிற்று. "இரண்டாயிரம் ரூபாய் கொடுத்தால் கஜேந்திரனைக் கொடுத்து விடுகிறேன்!" என்றான்.

அவன் கொஞ்சங்கூட எதிர்பாராதவிதமாக வந்த ஆசாமிகளில் ஒருவர், 'பளிச்' சென்று இரண்டாயிரம் ரூபாய் நோட்டுக் கத்தைகளை அவன் கையில் திணித்தார். மாதவனின் தகப்பன் அயர்ந்து போனான். அவ்வளவு பெரிய தொகையை இதற்கு முன்னால் அவன் பார்த்ததே யில்லை. அவன் கைகள், தாமாகவே அந்த நோட்டுக் கத்தைகளை நடுக்கத்துடன் வாங்கிக் கொண்டன.

அதே சமயத்தில் யானைப் பாகர்கள் சிலர் வந்து கஜேந்திரனைப் பிடித்து லாரிக்கு அருகே அழைத்துச் சென்றார்கள். முன் ஏற்பாடாக லாரிக்குள் அரிசியும் வெல்லமும் கரும்பும் கொட்டிக் கிடந்தன. அவற்றைக் கண்ட கஜேந்திரனுக்கு வாயில் ஜலம் ஊறியது. அவர்கள் வைத்திருந்த சாய்வுப் பலகையில் ஏறி மறு நிமிஷமே லாரிக்குள் சென்றது. அடுத்த விநாடி லாரி பறந்தது. காட்டுப் பாதையில் புழுதி நிறைந்தது.

ஒரு மாதத்துக்குப் பிறகு மாதவனும் அவன் தாயாரும் யானைக் காட்டுக்குத் திரும்பினார்கள். ஊரிலிருந்து வந்ததும் மாதவன் செய்த முதல் காரியம் கஜேந்திரனைத் தேடியது தான்.


காடு முழுவதும் தேடியும் கஜேந்திரனைக் காணுமற் போகவே, அவன் "அப்பா, என் அருமைக் கஜேந்திரன் எங்கே?" என்று மிகவும் கலவரத்தோடு தன் தகப்பனைக் கேட்டான்.

அவன், "அன்றைக்கு ஒரு நாள் காட்டில் முகாம் போட்டிருந்த வெளியூர்க்காரர்களுக்கு இரண்டாயிரம் ரூபாய்க்கு அதை விற்று விட்டேன்!" என்றான்.

இதைக் கேட்டது தான் தாமதம், மாதவன் ஓரேயடியாக அழ ஆரம்பித்து விட்டான்.

"அப்பா, என் கஜேந்திரனையா விற்று விட்டீர்கள்? ஐயோ! அதை விட்டு விட்டு நான் எப்படி அப்பா இருப்பேன்!" என்று அவன் கதறியது அவன் தகப்பனைப் பெரிதும் உருக்கி விட்டது. ஆனால் அவன் இனிமேல் என்ன செய்ய முடியும்? யானைக் குட்டியையோ விற்றாகி விட்டது. அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. மாதவன் கஜேந்திரனைப் பார்க்காமல் சாப்பிடக்கூட மாட்டேன் என்று சத்தியாக்கிரஹம் செய்ய ஆரம்பித்து விட்டான்.

இந்தச் சமயத்தில் 'விர்' என்று ஒரு 'ஜீப்' கார் வந்தது. அதிலிருந்து ஒருவர் பரபரப்புடன் இறங்கினார். அவர் வேறு



யாருமில்லை. முன்பு கஜேந்திரனை வாங்கியவர் தான். அவர் வந்ததும் வராததுமாக, மாதவனையும் அவன் தகப்பனையும் 'ஜீப்' காரில் ஏறிக் கொள்ளச் சொன்னார். உடனே கார் வாயு வேகமாகப் பறந்தது.

காலையில் யானைக் காட்டை விட்டுப் புறப்பட்ட 'ஜீப்' கார் மாலையில் பட்டணத்துக்கு வந்தது. அங்கே ஒரு பெரிய சினிமாப் படம் எடுக்கும் ஸ்டுடியோவுக்குள் நுழைந்தது. மாதவனுக்கு ஒரே ஆச்சரியமாயிருந்தது. அந்த 'ஜீப்' கார் மனிதர், போகும் வழியில் கஜேந்திரனைப் பார்க்க அழைத்துப் போவதாகக் கூறினாரே தவிர வேறொன்றும் கூறவில்லை. காரில் போகும் உற்சாகத்தில் மாதவனுக்கு ஒன்றுமே தெரியவில்லை.

சினிமா ஸ்டுடியோவுக்குள் போனதும் கஜேந்திரனைச் சுற்றிப் படம் எடுப்பவர்கள் சூழ்ந்து கொண்டிருந்தார்கள். டைரக்டர் அரும்பாடு பட்டு, கஜேந்திரனுக்கு ஏதேதோ சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். கஜேந்திரன் பிடிவாதமாக ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்தது.

கஜேந்திரனைக் கண்டதும் மாதவன் துள்ளி ஓடி அதனருகே போனான். மாதவனைக் கண்டதும் கஜேந்திரனுக்கு உற்சாகம் பிறந்து விட்டது. அவனைத் தூக்கித் தலை மேல் வைத்துக் கொண்டு கூத்தாடியது.

கஜேந்திரன் என்னென்ன செய்ய வேண்டுமென்று டைரக்டர் விரும்பினாரோ, அதையெல்லாம் செய்து காட்டச் சொன்னான், மாதவன். எல்லோரும் இதைப் பார்த்து ஆச்சரியப் பட்டுப் போனார்கள்.

அப்புறம் கஜேந்திரன் நடித்த படத்துக்கு மாதவன் தான் டைரக்டர் என்பதைச் சொல்ல வேண்டுமா? அதிலிருந்து மாதவனும் கஜேந்திரனும் எத்தனையோ படத்தில் நடித்து விட்டார்கள்.

# படித்துப் பாருங்கள்!

## Eternal Truth of Sita Devi

அசோக வனத்தில் சீதையைக் காண்கிறான் அநுமன். ராமனது சூடாமணியைக் கொடுத்து அவளிடம் பேசுகிறான். அப்போது தூங்கிக் கொண்டிருந்த அரக்கிகள் விழித்தெழுந்து அநுமனைப்பற்றிச் சீதையிடம் விசாரிக்கின்றனர். சீதை "தீயவர்களுக்குத் தானே தீயவர்களின் தன்மை தெரியும்! எனக்கு என்ன தெரியும்!" என்று கூறி அநுமனைப் பற்றி ஒன்றும் கூறவில்லை.

இது பொய்யல்லவா! இந்தப் பொய்யைச் சீதை சொல்லலாமா! சொல்லியிருப்பாளா! என்பது தான் இந்நூலில் எழுப்பப்பட்டிருக்கும் பிரச்னை. சீதை பொய் சொல்லவில்லை என்பதை இந்நூலாசிரியர் கம்பர், வால்மீகி இருவருடைய உள்ளப் பாங்கை ஒட்டி, அவர்களது சொல்லின் நேரடியான பொருள், குறிப்புப் பொருள் இவற்றைக் கொண்டு வலியுறுத்துகிறார்.

ஆசிரியர்: சாகர்லா எஸ். சுந்தரமய்யா; பிரசுரம்: ஸ்ரீ வாணி விலாசம் பிரஸ், சங்கர குருகுலம், ஸ்ரீரங்கம்; விலை 0—8—0

## சமைத்துப் பார்!

வான சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், அர்த்த சாஸ்திரம், முதலிய சாஸ்திரங்களைப் போல் பாக சாஸ்திரமும் மனித வர்க்கத்துக்கு இன்றியமையாதது. காய்களையும், கிழங்குகளையும், தானிய வகைகளையும் பக்குவம் செய்யாமல் சாப்பிடுவதற்கில்லை. மலருக்கு அழகு மணம். அது போல் சாப்பாட்டுக்கு அழகு ருசி. அந்த ருசி சமையலில் நன்கு அமைய வேண்டுமானால் சமையல் பக்குவ முறைகள் நன்கு தெரிந்திருக்க வேண்டும். இந்தப் புஸ்தகத்தில் சாதாரண வற்றல் குழம்பு தயார் செய்வதிலிருந்து, கேசரி, அல்வா முதலிய பலவகைப் பக்ஷண தினுசுகள் செய்வது வரையில் விவரமாகக் கூறப்பட்டிருக்கிறது. இன்னும் ஊறுகாய் தினுசுகள், பச்சடி வகைகள் முதலியவைகளெல்லாம் விமரிசையாக எடுத்துரைக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு குடும்பப் பெண்மணியிடமும் இருக்க வேண்டிய புஸ்தகம்.

ஆசிரியை: எஸ். மீனாக்ஷி அம்மாள்; கிடைக்கும் இடம்: நெ. 2, வீரப்பெருமாள் கோவில் தெரு, மயிலாப்பூர், சென்னை, 4; விலை: ரூ. 3-8-0.

## ஜாவா யாத்திரை

ஜாவா, பாலித் தீவுகளில் இந்தியர் நாகரிகம் ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பே பரவியிருக்கிறது. அங்குள்ள கோயில்களில் எல்லாம் மகாபாரதக் கதைகளும், ராமாயணக் கதைகளும் செதுக்கப்பட்டிருக்கின்றன என்று கேள்விப்பட்டிருக்கிறோம். பாலிப் பெண்களின் நடனங்கள் அபூர்வ அழகு வாய்ந்தன என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அவற்றையெல்லாம் மகா கவி ரவீந்திரநாத் டாகுர் நேர்முகமாகக் கண்டு அவருக்கே உரிய நடையில் கூறும்போது அபூர்வ வேகமும் அழகும் பெறுகின்றன. ஜாவா, பாலி முதலிய தீவுகளுக்கு நாம் நேரில் போய்ப் பார்ப்பது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது. ஜாவா, பாலித் தீவுகளில் மகா கவி ரவீந்திரநாத் டாகுர் யாத்திரை புரிந்தபோது, அவ்வவ் விடங்களிலிருந்து இந்தியாவிலுள்ள தமது நண்பர்களுக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பு இது. ஸ்ரீ த.நா. குமாரஸ்வாமி மொழி பெயர்த்திருக்கிறார்.

பிரசுரம்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை: ரூ. 2.

## காசி தரிசனம்

தி. ஜ. ர.வின் கதைகள் என்றால் அவை அவருக்கே உரிய தனிப் போக்கிலிருக்கும். ஹாஸ்யமும் அவருக்கே சொந்தமான ஹாஸ்யமாக இருக்கும். அதையெல்லாம் எடுத்துச் சொல்லிச் சாத்தியமா! இத் தொகுதியில் அவர் எழுதிய எட்டுக் கதைகள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் சுவாரஸ்யமாக இருக்கின்றன.

பிரசுரம்: அமுத நிலையம், தேனாம்பேட்டை, சென்னை-18. விலை: ரூ. 1-8-0.


பிரிட்டானியா
போன்ற பிஸ்கோத்தே
கிடையாது!
மணத்தில் சிறந்தது
ரகத்தில் உயர்ந்தது
தினுசுகள் நிறைந்தது
புதுமையில் நிகரற்றது
அதிகமான ஜனங்கள்
சிறந்த பிஸ்கோத்து
பிரிட்டானியா
வை வாங்குவதில்
ஆச்சரியமில்லை



# விஷமக் குரங்கு

—சாமா—

திருமலை நாயக்கர் ஒரு விஷமக் குரங்கை வளர்த்து வந்தார். அவர் அந்தக் குரங்கு செய்யும் விஷமங்களைப் பார்த்து ஆனந்தப்படுவார். பக்கத்து வீட்டுக்காரர்கள் குரங்கினால் தங்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை எவ்வளவோ சொல்லியும் அவர் அதைக் கட்டிப் போடுவதே கிடையாது. அவர் வீட்டுக்கு எதிரில் ஒருவன் செருப்புத் தைத்துக்கொண்டு மரத்தடியில் உட்கார்ந்திருப்பான். விஷமக் குரங்கு மரத்தின்மேல் உட்கார்ந்தபடியே அவன் செய்வதை எல்லாம் பார்த்திருந்தது. அவன் சற்று வெளியே சென்றதும், தானும் கத்தியை எடுத்து அடிக்கும். செருப்புகளை யெல்லாம் இரண்டாய்ப் பிய்க்கும்.

இந்தச் சேஷ்டைகளை யெல்லாம் பற்றி, செருப்பு தைப்பவன் எத்தனையோ தடவை நாயக்கரிடம் சொல்லிப் பார்த்தான். அவர் அதைப் பொருட் படுத்தவே இல்லை. செருப்பு தைப்பவன் அவருக்குப் புத்தி புகட்ட வேண்டும் என்று தீர்மானித்தான். குரங்குக்கு எதிரில் ஒரு கந்தல் துணியைக் கொளுத்தினான். பிறகு நெருப்புப் பெட்டியைக் கீழே போட்டு விட்டுப் போய் விட்டான். குரங்கு ஓடி வந்து நெருப்புப் பெட்டியை எடுத்துக் கொண்டது. போனவன் திரும்பி ஓடி வந்து குரங்கை விரட்டினான். குரங்கு நெருப்புப் பெட்டியுடன் நாயக்கர் வீட்டுக்குள் ஓடி, நெருப்புக் குச்சியைப் பற்ற விட்டு அங்கு வெய்யிலில் போட்டிருந்த நாயக்கர் தீபாவளி வேஷ்டி, அவர் மனைவியின் புடவை எல்லாவற்றையும் கொளுத்தி விட்டுக் குதித்தது. நாயக்கர் ஓடி வந்து கதறினார்—"போச்சு, போச்சு, எல்லாம் எரிந்து போயிற்று!" என்று கதறினார். குரங்கைக் கழியால் அடித்தார். அன்று முதல் குரங்கை நன்றாகக் கட்டியே போட்டு விட்டார்.



# சரிகை வேஷ்டி

வேங்கட லக்ஷ்மி

அன்று தீபாவளி கழித்த மறுநாள்.

வாசலில் நின்ற வண்டியில் ஏறிக்கொண்டு கண்களில் தளும்பிய கண்ணீர் பார்வையை மறைக்க ஒரு தரம் திரும்பிப் பார்த்தாள் மங்களம்.

பதினைந்து வருஷங்களாக அவள் இருந்து வந்த வீடு அது. அந்த வீட்டின் ஒவ்வொரு மூலையும் முடுக்கும் அவளுடைய ஒவ்வொரு ஞாபகத்துடன் பிணைந்திருந்தது. எத்தனையோ ஆசையுடன் அவள் வைத்துப் பயிராக்கிய ரோஜாச் செடிகள் வாசலில் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன. ‘கேட்’டின் இடதுபுறமாக அவள் பத்து வருஷங்களுக்கு முன்பு நட்டு, தன்குழந்தையைப்போல் பாதுகாத்துப் பராமரித்த பாரிஜாதக் கன்று இப்பொழுது வளர்ந்து, தழைத்துப் பெரிய மரமாகி, அரும்புகளைத் தரையில் உதிர்த்துக் கொண்டிருந்தது.

அன்று விடியற்காலை கூட அவள் கையினாலேயே வாசல் தெளித்துப் போட்டிருந்த கோலம் இன்னும் கலையாமல் ‘பளிச்’சென்று பிரகாசித்துக் கொண்டிருந்தது.

எல்லாவற்றையும் ஒரு தரம் பார்த்த மங்களம் கண்ணில் முட்டிய நீரைச் சட்டென்று புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு, நிமிர்ந்து பார்த்தாள். வாசலில் யாருமில்லை. உள்ளேயிருந்து சியாமளியின் கல கல வென்ற சிரிப்பொலியும் அதைத் தொடர்ந்து அவள் கணவன் முத்துஸ்வாமி ஏதோ உரத்துச் சொல்லியதும் தெளிவாக அவள் காதில் விழுந்தது—மங்களத்தின் நெஞ்சில் ஏதோ உருண்டையாக அடைப்பது போலிருந்தது. சிரமப்பட்டு விழுங்கினாள். அக்கம்பக்கத்து வீடுகளில் வாசலில் நின்ற அனேகர் இவர்கள் புறப்பட்டுப் போவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். வண்டி புறப்படும் சமயம் வேலைக்கார மீனி, வாடிய முகத்துடன் வண்டியண்டை வந்து நின்றாள்.

“போய் வருகிறேண்டி, மீனி” என்று தழுதழுத்த குரலில் சொல்லிக் கொண்டாள் மங்களம்.

“போய் வாங்கம்மா! — ஒண்ணும் வருத்தப்படாதீங்க” என்று வருத்தத்துடன் சொன்னாள் அவள். வண்டி புறப்பட்டுச் சற்று தூரம் போனபின்பு, “மங்களம்! இதெல்லாம் விதியின் கோளாறு. யாரையும் கோவதில் பயனில்லை. வீணில் மனசைக் கலங்கவிடாதே!” என்று அவளுக்குத் ஆறுதல் கூறும் பாவனையில் பேசினார் அவள் கணவர் சிதம்பரய்யர்.

ஆனால் சென்ற ஒருவருஷ காலமாக வீட்டில் நடந்து வந்த விஷயங்கள் தன்னைக் காட்டிலும் அவரைத்தான் அதிகமாகப் பாதித்திருக்கின்றனவென்பது அவளுக்கு நன்றாய்த் தெரியும்.

## 2

சிதம்பரையர் மிகவும் சாதாரணமான நிலையிலிருந்தவர். அவருக்குக் குழந்தைகள் கிடையாது. ஆகவே இறந்துவிட்ட தன் சகோதரியின் சிறிய குழந்தையான முத்துஸ்வாமியைத் தம்முடன் அழைத்து வந்து அருமையாக வளர்த்து வந்தார். மங்களமும் நல்ல விசாலமான இருதயம் படைத்தவள். ஆகவே தம்பதிகளிருவரும் தாயற்ற குழந்தையான முத்துஸ்வாமியிடம் போட்டி போட்டு அன்பைச் சொரிந்தனர்.

எப்படியோ கஷ்டப்பட்டு அவனைப் படிக்க வைத்தார்கள். வீட்டின் நிலைமை எப்படியிருந்தபோதிலும் முத்துஸ்வாமிக்கு வேளா வேளைக்கு நல்ல சாப்பாடு போடுவதிலும் துணிகள் வாங்கிக் கொடுப்பதிலும் மங்களம் ஒரு குறைவும் வைக்கவில்லை.

நாத்தனார் பிள்ளைக்காக அவள் இவ்வளவு பாடுபடுவது எல்லாருக்கும் ஆச்சரியமாகவேயிருந்தது.

“ஏண்டி மங்களம், யாரோ பெற்ற பிள்ளைக்காக இப்படிப் பாடுபடுகிறாயே! அவன் நாளைக்கு உன்னை வைத்துக் காப்பாற்றப் போகிறானா, என்ன?” என்று ஒரு நாள்

அவளுடைய அந்தரங்கத் தோழி பண்ணை வீட்டுப் பார்வதி கேட்டாள். மங்களம் சிரித்துக் கொண்டே பேசாமல் போய் விட்டாள்.

தீபாவளிக்காகப் பட்டணத்திலிருந்து நீலம் செட்டியார் வருஷா வருஷம் பெட்டி பெட்டியாகப் புடவை வேஷ்டிகளுடன் பண்ணை வீட்டுக்கு வந்து ஒரு மாதம் முகாம் போடுவார். ஊர்ப் பெண்டுகளெல்லாம் அவர்கள் வீட்டுக்கு வந்து பிரியப்பட்டவைகளை வாங்கிச் செல்வார்கள்.

அந்த வருடமும் தீபாவளிக்கு மூன்று வாரம் முன்பாகவே விதம் விதமான சேலை வேஷ்டி வகைகளுடன் பண்ணையார் வீட்டுக்கு நீலம் செட்டியார் வந்திருந்தார். முதல் நாள் பிரதோஷத்தன்று மங்களத்தைச் சிவன் கோவிலில் சந்தித்த பார்வதி இந்தத் தகவலை அவளிடம் சொன்னாள்.

மங்களம் வீட்டுக்கு வரும்பொழுது முத்துஸ்வாமி வாடிய முகத்துடன் வாசலில் உட்கார்ந்திருந்தான்.

"முத்து! என்ன விசேஷம்? ஏன் வாசலில் உட்கார்ந்துகொண்டிருக்கிறாய்?" என்று கவலையோடு கேட்டபடியே வீட்டுக்குள் நுழைந்தாள் மங்களம். முத்துஸ்வாமி ஒன்றும் பதில் பேசாமல் மௌனமாக அவள் பின்னாலேயே உள்ளே வந்தான்.

"தலையை வலிக்கிறதா? ஏன் என்னவோ போலிருக்கிறாய்?" என்று அன்பொழுகக் கேட்டபடியே அவனுடைய நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள்.

"ஒன்றுமில்லை, மாமி!" என்று பதில் சொல்லிவிட்டுப் படிக்கப் போய் விட்டான்.

நாலைந்து தினங்கள் சென்றன. முத்துஸ்வாமியின் மனத்தில் ஏதோ ஒரு கவலை



அரித்துக் கொண்டிருக்கிறது என்று மங்களம் நிச்சயமாகத் தெரிந்து கொண்டாள்.

"பாவம்! தாய் தகப்பனில்லாத குழந்தை; அவன் மனசில் என்ன வருத்தமோ" என்று தன் தோழியிடம் அங்கலாய்த்துக் கொண்டாள் மங்களம். சற்று நேரம் வரையில் ஒன்றும் பேசாமலிருந்த பார்வதி, "மங்களம்! நான் ஒன்று சொல்லுகிறேன் நீ கோபித்துக் கொள்ளாதே; இந்த உலகம் நீ நினைக்கிறபடி அவ்வளவு நல்லதல்ல; நல்லதுக்குப் பலன் கெடுதல்தான் இந்த உலகத்தில் கிடைக்கும்; நீயும் உன் புருஷனும் வெளுத்த தெல்லாம் பால் என்று எண்ணுபவர்கள். நீங்கள் கடைசியில் இந்தப் பிள்ளை விஷயமாக ஏமாந்து போகாமலிருக்க வேண்டுமே யென்று எனக்கு ரொம்பக் கவலையா யிருக்கிறது. அப்படி ஏதாவது நேர்ந்து விட்டால் நீ நிச்சயமாய் மனசு முறிந்துபோய் விடுவாய்! அந்தப் பிள்ளை பேரில் அதிகமாகப் பாசம் வைக்காதே!" என்று அர்த்த புஷ்டியுடன் திரிகால ஞானியைப் போல் கூறினாள்.

ஒரு கணம் மங்களத்துக்குச் 'சொரேர்' என்றது. ஆனால் சற்று நேரத்துக்கெல்லாம் அவள் பார்வதி கூறிய வார்த்தைகளை மறந்தே போய்விட்டாள்.

## 3

இன்னும் தீபாவளிக்கு இரண்டு நாட்களே யிருந்தன. மாலை ஆபீஸிலிருந்து வந்த சிதம்பரையர், "மங்களம், இந்தா! இந்த ரூபாயைக் கொண்டு போய்ப் பண்ணையார் வீட்டில் நீலம் செட்டியாரிடமிருந்து உனக்கு ஒரு நூல் புடவை வாங்கிக் கொள்!" என்று கூறியபடியே மூன்று பத்து ரூபாய் நோட்டுக்களை அவளிடம் கொடுத்தார். அதைக் கையில் வாங்கிக் கொண்ட அவர் மனைவி, "ஏது பணம்?" என்று கேட்டாள்.

"ஒரு சிநேகிதரிடமிருந்து வாங்கிக் கொண்டு வந்தேன். உடனே போய்ப் புடவையை வாங்கிக்கொண்டு வா! நான் வரும்பொழுது பார்த்தேன். பண்ணையார் வீட்டில் ஒரே பெண்டுகள் கூட்டமா யிருந்தது. அப்புறம் புடவை யெல்லாம் தீர்ந்து போய் விடும்!" என்று அவசரப்படுத்தினார் அவர்.

மங்களம் தயங்கினாள். "உங்களுக்கும் முத்துவுக்கும் வேஷ்டி வாங்கவேண்டாமா?"

"அதற்கெல்லாம் இப்போது பணமெங்கே? மேலும் எங்களிருவருக்கும் இப்போதைக்கு வேண்டிய துணிமணிகளிருக்கிறது; அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். நீ போய்ப் புடவையை வாங்கிக் கொண்டு வந்து சேரு!" என்றார் அவர்.

அப்புறமும் மங்களத்துக்குத் திருப்தி வரவில்லை. "சாயந்திரம் கோயிலுக்குப் போகும் பொழுது அப்படியே அவர்கள் வீட்டில் நுழைந்து புடவையை வாங்கிக் கொண்டு வருகிறேன். ஒரே கடையாகப் போய்விடும். இப்பொழுது அதற்கென்று

போகவேண்டாம்!" என்று சொல்லிக் கொண்டே பணத்தை உள்ளே வைத்தாள்.

"உன் இஷ்டம் போல் செய்! ஆனால் கடைசியில் புடவை கிடைக்காமல் மட்டும் ஏமாந்து போய்விடாதே!" என்று சொல்லி விட்டுத் தம் வேலையைக் கவனிக்கப் போய் விட்டார் சிதம்பரய்யர்.

சற்றுப் பொறுத்து வேலையெல்லாம் முடிந்து கோயிலுக்குப் புறப்படும் பொழுது ஞாபகமாக அந்த ரூபாயை யெடுத்து இடுப்பில் முடிந்து கொண்டாள் மங்களம்.

அவள் வாசலில் இறங்கும் பொழுது ரேழி யிலிருந்த முத்துஸ்வாமி, "மாமி! கோவி லுக்கா போகிறாய்? நானும் வருகிறேன்" என்று அவளுடன் கிளம்பினான்.

சற்று நேரம் வரையில் இருவரும் பேசா மல் நடந்தார்கள்.

"மாமி! உன்னை ஒன்று கேட்கவேண்டும். கோபித்துக் கொள்வாயோ என்று பயமா யிருக்கிறது" என்று அவள் முகத்தைப் பார்த்தபடியே மெதுவாகக் கேட்டான்.

"முத்து! நான் உன்னை எப்பொழுதாவது கோபித்துக் கொண்டிருக்கிறேனா? என்ன வேண்டும்? பயப்படாமல் கேளு!" என்று அன்போடு சொன்னாள் மங்களம்.

"மாமி! நீலம் செட்டியார் தீபாவளிக் காக நல்ல நல்ல சரிகை வேஷ்டிகளெல்லாம் கொண்டு வந்திருக்கிறார். எனக்கு ஒன்று வாங்கிக் கொடேன். என் சிநேகிதர்க ளெல்லாம் வாங்கிக்கொண் டிருக்கிறார்கள். விலை முப்பது ரூபாய்தானாம்" என்றான். அவன் விழிகளில் ஆவல் ததும்பியது.

"பணமில்லை!" என்று சொல்ல எண்ணி யவள் சட்டென்று தன்னைத் தடுத்துக்கொண் டாள். புடவைக்காக இடுப்பில் முடிந்துவைத் திருந்த முப்பது ரூபாய் ஞாபகம் வந்தது.

'வேஷ்டியின் விலையும் முப்பது ரூபாய் தான். ஆனால் அதை வாங்கி விட்டால் அப் புறம் புடவைக் கென்ன செய்வது? கிழிச லில்லாமல் கட்டிக் கொள்ளத் தன்னிடம் ஒரு புடவைகூடக் கிடையாதே! வேஷ்டி யும் புடவையுமாகச் சேர்த்து வாங்கிவரப் பணமில்லையே!' என்று எண்ணியபடியே நடந்தாள். முத்துஸ்வாமியும் மௌன மாகவே அவள் கூட நடந்து வந்தான்.

'பாவம், யாருமில்லாத குழந்தை! ஆசைப் பட்டுக் கேட்கிறான். நான் வாங்கிக் கொடாமல் அவனுக்கு வேறு யார் வாங்கிக் கொடுப்பார்கள்?' என்ற ஒரு எண்ணமும் அவளுடைய மனசில் எழுந்தது.

பண்ணையார் வீட்டு வாசலை யடைந்த வுடன், "முத்து! நேராகக் கோவிலுக்குப் போ! நான் ஐந்து நிமிஷத்தில் வருகிறேன்!" என்று சொல்லி அவனை அனுப்பி விட்டு விசுக்கென்று உள்ளே நுழைந்தாள்.

4

தீபாவளி ஸ்நானம் முடிந்தது. கூடத் தில் விளக்கேற்றிக் கொண்டிருந்த மங்களத்



தைப் பார்த்து, "புதுப்புடவை கட்டிக் கொள்ளவில்லையா, மங்களம்? ஏன் பழைய புடவையையே உடுத்திக் கொண்டிருக் கிறாய்!" என்று கேட்டார் சிதம்பரய்யர்.

ஒரு விநாடி தயங்கி நின்றாள் மங்களம். பிறகு சிரித்துக் கொண்டே, "நான் புடவை வாங்கிக்கொள்ள வில்லை!" என்றாள்.

"வாங்கவில்லையா? பின்னே பணத்தை என்ன செய்தாய்? செலவழித்துவிட்டாயா?"

"இல்லை; இல்லை! செலவழிக்கவில்லை. முத்து ஒரு வேஷ்டி வேணுமென்று ஆசைப் பட்டான். குழந்தை கேட்கிறானே யென்று அவனுக்கு முப்பது ரூபாயில் ஒரு வேஷ்டி வாங்கிவிட்டேன்! புடவை அப்புறம் பார்த் துக்கொள்ளலாம்" என்று பதில் சொன்ன படியே விளக்கின் திரியைத் தூண்டி விட்டாள்.

வியப்புடன் அவளைப் பார்த்த சிதம்பரய்யர் ஒன்றும் சொல்லாமல் வாசலுக்குப் போய் விட்டார்.

சற்றுப் பொறுத்த முத்துஸ்வாமி ஸ்நா னம் முடித்துப் புதிய சரிகை வேஷ்டி இடுப்பில் மின்ன, அவரை வந்து நமஸ்கரித் தான். அவன் முகம் சந்தோஷத்தினால் மலர்ந்திருந்தது. சிதம்பரய்யர் அவனை ஆசீர் வதித்து விட்டு கடையில் மகிழ்ச்சி ததும்ப நின்றிருந்த மங்களத்தைப் பார்த்தார். அவ ளுடைய போக்கு அவருக்குப் புரியாத புதிரா யிருந்தது.

அதற்குப் பிறகு சர சரவென்று வீட் டில் மின்னல் வேகத்தில் மாறுதல்கள் உண் டாகி விட்டன. நாலே வருஷங்களில் முத்து வின் படிப்பு முடிந்து வேலையில் அமர்ந்து விட்டான். அவர்களுடைய நெருங்கிய பந்து வான ஒருவரின் பெண் சியாமளி அவனுக்கு

மனைவியாக வந்தாள். இனிபோல் காட்டுப் பெண். ஆசையாக வளர்த்து ஆளாக்கிய மருமான் கை நிறையச் சம்பாதிக்கலானான். தங்களுடைய கஷ்டமெல்லாம் விடிந்து இனி மேல் நிம்மதியாக இருக்கலாமென எண்ணி மகிழ்ந்தாள் மங்களம். ஆனால் இரண்டே மாதங்களில் காட்டுப் பெண் சியாமளி தன் சுயரூபத்தைக் காண்பித்து விட்டாள்.

வீட்டில் எடுத்ததற்கெல்லாம் சண்டை. காலையிலிருந்து இரவு வரையில் ஒரே ரகளை தான். முத்துஸ்வாமியும் மனைவியின் பட்சம் வந்து விட்டான். பாவம், வயதான தம்பதி களிருவரும் மனம் முறிந்து போய்விட் டார்கள். கடைசியில் அவர்களிட மிருந்து பிரிந்து கிராமத்திலிருந்த தங்களுடைய பூர் வீகமான சிறு வீட்டுக்கு இருவரும் போய் விட்டார்கள். கிழடுகள் இரண்டும் போய் விட்டதில் சியாமளிக்கும் முத்துவுக்கும் ஒரே சந்தோஷம்.

5

அன்றும் தீபாவளிதான். மங்களமும் சிதம்பரையரும் கிராமத்துக்கு வந்து ஒரு வருஷம் ஆகிவிட்டது. விடியற்காலம் வாச லில், மேளக்காரன் பூபாளம் வாசித்துக் கொண்டிருந்தான். தொழுவத்திலிருந்த பசு மாட்டைத் தடவிக் கொடுத்தபடியே நின்று கொண்டிருந்தார் சிதம்பரய்யர்.

மங்களம் இடுப்பில் குடத்துடன் திண்ணை வந்தாள். அவளுடைய மனதில் ஏதேதோ எண்ணங்கள்.

சர சரவென்று உள்ளே வந்த ஐயர் கொடியிற் கிடந்த ஒரு பழைய வேஷ்டியைக் கையிலெடுத்தார்.

வாசலில் குளிரால் நடுங்கிய வண்ணம் நின்று கொண்டிருந்தான் ஒரு பிச்சைக்காரன். கையிலிருந்த கந்தல் வேஷ்டியை அவனிடம் கொடுத்து விட்டுத் திரும்பினவர் தன் பின் னால் வந்து நின்ற மனைவியைப் பார்த்தார். பிச்சைக்காரன் அந்த வேஷ்டியைப் பிரித்துப் பார்த்துக் கொண்டு அவ்விருவரையும் கையெடுத்துக் கும்பிட்டான்.

மங்களத்தின் கண்களில் நீர் முட்டியது. அந்தக் கிழிசல் வேஷ்டியிலிருந்த பழைய சரிகை பள பளவென மின்னியது. சிதம்ப ரய்யர் அவளைப் பார்த்தார். ஆறு வருஷங் களுக்கு முன்னால் நடந்த தீபாவளி யொன்று அவளுக்கு ஞாபகம் வந்தது.

பிச்சைக்காரன் போய்விட்டான்.

கண்ணைத் துடைத்துக் கொண்டு உள்ளே போனாள் மங்களம். தூங்கி விழித்தவர் போல் அவரும் அவள் பின்னால் போனார்.

"முத்துவின் வேஷ்டி அது" என்றாள்.

பதில் சொல்லாமல் மௌனமாய்த் தலை யசைத்தார் அவள் கணவர்.

# ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரஸ்வாமி

## 58. பிராணாயாமம் அல்லது நாடி சுத்தி


இந்த ஆசனத்தையும், ஆசனங்கள் எல்லாம் எழுதி முடித்த பின் எழுதலாமென்று இருந்தேன். ஆனால், யோகாசன வேயர்களைச் சரியான பாதையில் கொண்டு செல்ல வேண்டியது என் கடமை அல்லவா! ஆகவே இந்த ஆசனத்தைப் பற்றியும் இப்பொழுதே சொல்லி விடுகிறேன்.

ஆசனமும், பிராணாயாமமும் இரண்டு கண்களைப் போன்றது. இதில் எதை வேண்டாமென்று சொல்லுவது! ஒரு கண் இருந்தாலும் பார்க்க முடியும். பிராணாயாமம் செய்யாமல், ஆசனங்கள் மட்டும் செய்து சுகமாகவே இருக்கலாம். ஆனால் இரண்டு கண்ணுள்ளவன் போல் அழகாயிருக்க முடியுமா! ஆசனங்களுடன் பிராணாயாமமும் சேர்ந்தால்தான் முழு மனிதனாகலாம்.

சிலர் பிராணாயாமம் என்றதும், ஆகாயத்தில் பறப்பது போலவும், விண்ணில் மறைவது போலவும், கூடுவிட்டுக் கூடு பாய்வது போலவும், தமக்குப் பிடிக்காதவர்களுக்குச் சாபம் கொடுப்பது போலவும் கற்பனை உலகில் சஞ்சரிக்க ஆரம்பித்து விடுவர். அவைகளெல்லாம் நம்போன்றவர்களுக்குச் சித்திக்கக் கூடியதல்ல. ஞானிகள் யோகிகள் பல பிறவிகளில் விடா முயற்சியுடன் செய்து வந்தால் சித்திக்கலாம். நமக்கு வேண்டுவதெல்லாம் ஆரோக்கியம் மட்டுந்தான். லேசாய் அந்தப் படிகளில் ஏறினாலே இது கிட்டும்.

"பிராணாயாமம் செய்வதா! அவைகளெல்லாம் நமக்குத் தகாது. நாமெல்லாம் பிள்ளை குட்டிகளோடு வாழுபவர்கள். யோகிகள், சந்நியாசிகள் செய்வதெல்லாம் நமக்குச் செய்யத் தகுமா! வயிற்றுப்பாட்டுக்கே பொழுது சரியாய் இருக்கும் போது இதற்கெல்லாம் நேரம் எங்கு போவது!" என்று வம்பளப்பர். ஐயா! நாடி சுத்தி என்பது நம்மைப் போன்ற குடும்பஸ்தர்கள் செய்யக் கூடியதுதான். இன்னும் பிராணாயாமத்தில் பல மேல் படிகள் இருக்கின்றன. அவைகள் யோகிகள், சந்நியாசிகள் செய்வார்கள். நீங்கள் ஆரோக்கியத்திற்காக, திடமாய் இருப்பதற்காக இதைச் செய்தால் போதும். வயிற்றுப் பாட்டுக்கு நீங்கள் செய்யும் வேலைகளுக்கு இது மிகவும் துணை புரியும்.

"பிராணாயாமம் செய்து வந்தால் மூச்சைப் பிடித்துக் கொள்ளும். அங்கு ஒருவர் இதைச் செய்து மூச்சைப் பிடித்து இறந்தே விட்டார். இதோ, இங்கொருவர் குடும்பத்திலிருந்து சந்நியாசியாய்ப் போய் விட்டார்" என்றெல்லாம் வீண் பயத்தைக் கிளப்பி விடுவார்கள் சிலர்.



சரியான மார்க்கம் தெரியாமல், குருவில்லாமல் ஏனோ, தானோ வென்று செய்தால் மூச்சைப் பிடித்திருக்கலாம். எதுவும் சரியான வழியில் கற்றுத் தெரிந்து செய்ய வேண்டும். கணக்கு வழக்கில்லாமல் மூச்சைப் பிடித்து கும்பகம் செய்தால் என்னதான் ஏற்படாது! ஒரு இடத்திற்குப் போக வேண்டும். நடந்து போகும்போது, எதிரில் வரும் ஆளுடன் முட்டாமல், மோதாமல். காருக்குக் குறுக்கே நிற்காமல் ஜாக்கிரதையாய்ப் போனால்தான் போக வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேரலாம். வழியில் இந்த ஆபத்துகளெல்லாம் இருக்கிறதே என்று இருந்தால் நம்முடைய காரியங்கள் நடக்குமா!


உலகம் நல்லதை எடுத்துக் கொள்வது சிறிது கஷ்டம்தான். குழந்தையானது தன்னிஷ்டமாய் ஓடி, ஆடி, குதித்துக் கண்டதை வாயில் போட்டுக் கொண்டு, உடலெல்லாம் அழுக்காகிச் சேற்றைப் பூசிக்கொண்டு களிக்கின்றது. தாயானவள் அதைக் குளிப்பாட்டி, சுத்தம் செய்து, உணவு கொடுத்து விடுகிறாள். அந்தத் தாய்மை உள்ளம் படைத்தவர்கள் நமது ஞானிகள், யோகிகள். ஆசனம் என்னும் சுத்தத்தையும் பிராணாயாமம் என்னும் ஆகாரத்தையும் நமக்கு உதவி இருக்கிறார்கள். இதை அடைபவர்கள் நோய் நொடி இன்றி நூறு வயதும் சந்தோஷமாகவும் ஆரோக்கியமாகவும் வாழலாம்.

நாடி சுத்தி பிராணாயாமத்தின் முதற் படியாகும். இதில் ஒரு கஷ்டமும் இல்லை. குரு வேண்டுமென்பதில்லை. இதைப் படித்தே பழகலாம். இந்த நாடி சுத்தி சில நோய்களுக்கு ஆசனங்களுடன்கூட, கட்டாயம் செய்ய வேண்டியதாய் இருக்கிறது. ஆகையால்தான் இவ்வளவு தூரம் வற்புறுத்திச் சொல்லுகிறேன்.

நாடி சுத்தி நமக்கு இரண்டு விதத்தில் பலன் தருகிறது. ஒன்று நுரையீரலில் பிராண வாயுவை நிரப்பி இரத்தத்தைச் சுத்தி செய்து, கரியமில வாயுவை அகற்றுகிறது. அதனால் நுரையீரல், இரத்தம், நாடிகள் சுத்தமாகிறது. மற்றொன்று 'பிராண' என்ற சக்தியை நமக்கு அளிக்கிறது. இந்தச் சக்தியைக் காணவோ அளவிடவோ முடியாது. எவ்வளவுக் கெவ்வளவு இந்தப் பிராண ஒருவனிடம் நிறைந்திருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு அவன் பூரண மனிதன் ஆகிறான். ஆரோக்கியம், ஆனந்தம், சாந்தம், அறிவு, தேஜஸ்

எல்லாம் அந்த மனிதனி டம் பொருந்தியிருக்கும்.

எல்லோருக்கும் இந்தப் பிராண சக்தி இருக்கிறது. இது இல்லாமல் நாம் எந்தக் காரியமும் செய்ய முடியாது. நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் இச் சக்தி செலவாகிக் கொண்டிருக்கிறது. பேசும் போதும், நடக்கும் போதும், எழுதும்போதும், மூச்சு விடும்போதும் இச் சக்தி குறைவு பட்டுக் கொண்டே வருகிறது. இக் குறைவை நிரப்புவது தான் பிராணாயாமம். மோட்டார் பாட்டரிக்கு சார்ஜ் ஏற்றுவதைப்போல, அன்றாடம் செலவாகும் பிராணனை நாம் பிராணாயாமத்தினால் பெற வேண்டும். ஆனால் பாட்டெரி சுவர்கள், அறைகள் ஓட்டையாகிச் சரியாக இல்லா விட்டால் பாட்டெரி சார்ஜ் ஏறாது. அப்படி ஏறினாலும் உடனே இறங்கி விடும். ரிப்பேர் செய்யவும் முடியாது. அப்பொழுது நாம் என்ன செய்கிறோம். வேறொரு பாட்டெரியை வாங்கிப் போட்டு உபயோகிக்கிறோம். நமது சரீர பாட் டெரியும் உறுதியாய் இருந்தால்தான் பிராணனை நன்றாக ஏற்ற முடியும். வியாதியால் உடல் கெட் டிருந்தால் பிராணனை ஏற்ற முடியாது. ஏறிய பிராணனும் நோய் எனும் ஓட்டை வழியாய் இறங்கி விடும். பாட்டெரியை வேறு மாற்றிப் போட்டு விடலாம். இந்த உடல் பாட்டெரியை எங்கு கொண்டு மாற்றுவது! மாற்றவே முடியாது. ரிப்பேர் செய்து பழையபடி பிராணனை எடுக்கச் செய்யலாம். அதற்குத்தான் ஆசனம் செய்ய வேண்டுமென்பது. ஆசனம் செய்து உடலை உறுதிப் படுத்திக் கொண்டால், பிராணனை ஏற்றி நிரப் பிச் சுகமாய் வாழலாம்.




* * *

**நா**டி சுத்தி செய்யும் விதம்: கை, கால், முகம், மூக்கு முதலியவைகளைச் சுத்தமாய்க் கழுவித் துடைத்துக் கொள்ளவும். மூக்கில் சளி முதலியவை அடைத்துக் கொண் டிராமல் மூக்கைச் சிந்தித் துடைத்துக் கொள்ளவும். சுத்தமான காற்றோட்ட முள்ள இடமாய் இருக்க வேண்டும். ஒரு சுத்தமான விரிப்பின்மேல் அமரவும். ஒரு கைக்குட்டை இருப் பது நல்லது. சில சமயம் மூக்கைத் துடைத்துக் கொள்ளவேண்டியிருக்கும்.

பத்மாசனத்தில் அமர வும். பத்மாசனம் சரி யாகப் போட முடியாத வர்கள் சாதாரணமாகவே உட்காரலாம். முதுகு, கழுத்து, சிரசு இவை மூன்றும் நன்றாய் நிமிர்ந்து நேராக இருக்க வேண்டும். கூனல் வளைவு இருக்கக் கூடாது. இடது கை இடது துடையின் மேல் இருக்கலாம். சாதாரண மாய் மூச்சை விடவும். வலது கைப் பெரு விர லால், வலது நாசியை முதல் படத்தில் உள்ளபடி அழுத்தி மூடவும். இடது நாசியால் மூச்சை மெது வாய் முடிந்தவரை இழு த்து, நுரை ஈரல்களை நிரப் பவும். பிறகு வலது கை மோதிர விரலால் இடது நாசியை அழுத்தி இரண் டாவது படத்திலுள்ளபடி மூடவும். இப்பொழுது வலது நாசியின்மேல் இருக் கும் கட்டை விரலை அகற்றி மூச்சை மெது வாய், முன் இருந்ததை விட இரண்டத்தனை மெதுவாய் விடவும். மறுபடியும் அந்த வலது நாசியின் வழியாய் மூச்சை மெதுவாய் இழுத்து, நுரை ஈரல் நிறையும் மட்டும் நிரப்பி, கட்டை விரலால் மூடிக் கொண்டு, இடது நாசியின் மேல் இருக்கும் மோதிர விரலை அகற்றி மூச்சை முன்னே இழுத்ததைவிட இரண்டத்தனை மெது வாய் வெளியில் விடவும். இப்படிச் செய்தால் நாடி சுத்தி செய்ததாகும்.

இப்படியே தொடர்ந்து இடது நாசி வழியாய் மூச்சை இழுத்து, வலது நாசியின் வழியாய் விட்டு, மறுபடியும் அதே நாசியின் வழியாய் இழுத்து, இடது நாசியின் வழியாய் விட்டு, மறு படியும் அதே நாசியின் வழியாய் இழுத்து, மேற் சொன்னபடி வேண்டிய அளவு செய்யலாம்.



மூச்சை இழுப்பது விடு வது எல்லாம் ஒரு கணக் காய் இருக்க வேண்டுமல் லவா! அதற்கும் ஒரு கணக்கு இருக்கிறது. ஏதோ இழுத்தோம், விட் டோம் என்று இருக்கக் கூடாது. அப்படிச் செய் தால் பலன் பூஜ்யம்தான். சிலர் இழுப்பதை அதிக நேரம் இழுப்பர், விடும் போது மூச்சைப் புஸ் என்று விட்டு விடுவர். ஆகையால் ஒரு கணக்கு டன் செய்தால் பல னுண்டு. மூச்சை இழுக் கும் போது ஏழு எண்ணும் வரை இழுக்கவும், விடும் போது, பதினான்கு எண் ணும் வரை விடவும் பழக வேண்டும். வெறும் எண் ணிக்கையை விட இதற் காகத் தனி ஒரு மந்திரம் இருக்கிறது. இதை மாத் திரைக்கோலாக உபயோ

இக்கலாம். எண்களைக் கவனம் வைக்கும் சிரமமில்லை. "ஓம் பூ; ஓம் புவ; ஓம் ஸ்வர்; ஓம் மஹ; ஓம் ஜன; ஓம் தப: ஓம் சத்யம்" என்பதை மனப்பாடம் செய்து கொண்டால் மூச்சை இழுக்கும்போது ஒரு தடவை இம்மந்திரத்தைச் சொன்னால் போதும். விடும் போது இரண்டு தடவை சொல்ல வேண்டும்.

இம்மாதிரி மூச்சை இழுக்கும் போதும், விடும் போதும் ஒரு பக்கம் இம்மாதிரி சொல்லிக் கொண்டு, மனதை வேறெங்கோ அலையவிடுவதில் பலனில்லை. மனதையும் அதில் ஈடுபடுத்த வேண்டும். மூச்சை இழுக்கும் போது, ஆரோக்கியம், ஆனந்தம், சுகம், சாந்தம் தன்னுள் நிரம்பி உடல் பூராவும் பரவுவதாகவும், விடும்போது தன்னிடம் இருக்கும் நோய், கஷ்டம் துன்பம் முதலியன வெளியில் மூச்சுடன் கலந்து விடுவதாகவும் மனதால் நினைத்துக் கொள்ள வேண்டும். இம்மாதிரி மூச்சை இழுப்பதற்குப் பூரகம் என்றும், விடுவதற்கு ரேசகம் என்றும் பெயர். மூச்சை உள்ளே அடக்குவதற்குக் கும்பகம் என்று பெயர். அதை இப்பொழுது செய்ய வேண்டாம். வெறும் பூரகம், ரேசகம் மட்டும் செய்தால் போதும்.

ஆரம்ப சாதகர்கள் ஐந்து தடவை நாடி சுத்தி முதலில் செய்யலாம். மிகப் பலவீனமானவர்கள் நோயாளிகள் ஒருதடவை செய்து இரண்டு மூன்று தடவை சாதாரணமாய் சுவாசம் விட்டு மறுபடி நாடி சுத்தி செய்யலாம். சிலரால் தொடர்ந்து செய்ய முடியாது. வலது கை, ஆதரவில்லாமல் தூக்கப்பட்டு மூக்கின் மேல் இருப்பதால் வலிக்கும். மூச்சும் தடுமாறும். அடக்கிவிட முடியாது. அப்போர்ப்பட்டவர்கள் இடையிடையில் விட்டு விட்டுச் செய்யலாம். ஆரம்பத்தில் காலையிலும் ஒன்றிரண்டு வாரம் கழித்து மத்தியானத்திலும் மாலையிலும் செய்யலாம்.

இதை ஆசனங்களைச் செய்தபின் செய்வதே நல்லது. முன்பும் செய்யலாம். மாலையிலும் அவ்வாறே பகலில் சாப்பாட்டுக்கு முந்தி செய்யலாம்.

ஆனால் வயிற்றில் உணவு இருக்கும்போது மட்டும் பண்ணக் கூடாது. சாப்பிட்டு மூன்று மணி நேரம் கழித்துத்தான் நாடி சுத்தி பண்ணலாம்.

நாடிசுத்தி செய்து விட்டு அப்படியே எழுந்து விடக் கூடாது. கட்டாயம் தியானத்தில் ஐந்து நிமிஷமாவது மூன்றுவது படத்தி லுள்ளபடி இருந்து விட்டே எழுந்திருக்க வேண்டும். ஆசனங்களில் எப்படி சாந்தி ஆசனம் செய்வதால் ஆசனம் பூர்த்தி ஆகிறதோ, அப்படி நாடி சுத்தியில் தியானம் செய்வதால் நாடி சுத்தி பூர்த்தி ஆகிறது. தியானம் என்பது வெறுமனே கண்ணை மூடி உட்கார்ந்திருப்பதல்ல. மனமும் அதில் ஈடுபடவேண்டும். மனதைப் புருவமத்தியில் வைத்து, அவ்விடத்தில் ஓம் என்ற பிரணவம் பிரகாசத்துடன் இருப்பதாகவும் பாவனை செய்து அதையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். அல்லது தாமரை மலர் மலர்ந்து ஜகஜ்ஜோதியாய் ஜொலிப்பதாகவும் நினைக்கலாம். தீப ஜோதியை நினைக்கலாம். இம்மாதிரி புருவ மத்தியில் இருப்பதாக நினைப்பதால் மனம் ஒடுங்கும், அடங்கும், இச்சா சக்தி அதாவது மனோபலம் வளரும்.

முதல் மாதத்தில் ஐந்து நாடி சுத்திகள் செய்யலாம். இரண்டாவது மாதத்தில் ஏழு நாடி சுத்திகளைச் செய்யலாம். இம்மாதிரி மாதத்திற்கு இரண்டு வீதம் அதிகமாக்கிக் கொண்டு 15, 17, 21 எண்ணிக்கை வரையிலும் செய்யலாம். ஆனால் காலை, மாலை விடாமல் செய்வது நல்லது. முடிந்தவர்கள் மத்தியானமும் செய்யட்டும். (தொடரும்)

# மனச் சாந்தி

நா. சுப்பிரமணியம்

“களத்திர தோஷம் உள்ள ஜாதகம் என்று நன்றாய்த் தெரிந்திருந்தும் மறுபடியும் மறுபடியும் ஏன்தான் நீங்கள் பிடிவாதம் செய்கிறீர்களோ, தெரியவில்லை. வசந்தாவை அவனுக்குக் கொடுத்து நாம் என்ன சுகத்தைக் கண்டோம்? அவனுக்கே அகிலாவைக் கொடுக்க வேண்டுமென்று சொல்ல உங்களுக்கு மனம் எப்படித் துணிந்தது?” என்று கேட்டாள் சாவித்திரி.

“அவனுக்குக் கொடுத்தால் என்ன? உன் பெரிய பெண் வசந்தாவுக்கு அல்ப ஆயுசு என்று இருக்கும்போது அதற்கு அவன் என்ன செய்வான்? இந்த இரண்டு வருட காலமாக அலைந்து அலைந்து பார்த்தும் ஒரு வரனும் நிச்சயமாகவில்லை. காலமும் பணமும்தான் விரயம் ஆயிற்றே ஒழியப் பலன் ஒன்றுமில்லை. ஏதோ தெரிந்தவனாக இருக்கிறான். உலகத்தில் ஒரு பெண்ணைக் கொடுத்து அவள் இறந்துவிட்டால் இன்னொரு பெண்ணை அவனுக்கே கொடுப்பதில்லையா?” என்றார் ராமநாதன்.

“என் வயிறு செய்யும் சங்கடம் கொஞ்ச நஞ்சமா? வஸந்தாவை அந்தப் பாவி படாத பாடு படுத்தி அதே ஏக்கத்தில் அவள் இறந்தாள். குட்டிச் சுவரில் முட்டிக்கொண்டும் உங்களுக்குக் கண் தெரியவில்லை. வசந்தாவைப் பலி கொடுத்தது போதாதென்று அகிலாவையும் பலி கொடுக்கப் பார்க்கிறீர்களா? என்ன ஆனாலும் சரி, அகிலாவை ராஜாராமனுக்குக் கொடுக்கும் காரியத்திற்கு மட்டும் நான் சம்மதிக்க மாட்டேன்” என்றாள் சாவித்திரி விம்மிக்கொண்டே.

“உன் சம்மதம் என்ன? இதில் அகிலாவின் சம்மதம்தான் முக்கியம்” என்று கூறியபடியே வெளித் திண்ணையில் போய் உட்கார்ந்தார் ராமநாதன்.

பூஜை அறையில் ஸ்வாமிக்குப் பூ தொடுத்துக் கொண்டிருந்தாள் அகிலா. கூடத்தில் அவள் பெற்றோர் பேசிக்கொண்டிருந்தது அவள் காதில் விழுந்தது. கையால் பூ தொடுத்துக் கொண்டிருக்கும்போதே அவள் நினைவு நாவிலும் எண்ண மலர்களைத் தொடுத்துக் கொண்டிருந்தாள்.

* * *

அகிலாவுக்கு அப்போது வயது பத்து. அவள் தமக்கை வசந்தா கலியாணமான ஐந்தாவது நாள் புருஷன் வீட்டுக்குக் கிளம்பினாள். எப்போதும் அக்காவை விட்டுப் பிரியாதிருந்த அகிலாவுக்கு அக்காவின் பிரிவு மிகவும் தாங்க முடியவில்லை. தலை தீபாவளிக்கு வசந்தாவும் அவள் கணவனும் வந்தார்கள். அவர்களுடன் அகிலாவும் சென்றாள். வசந்தாவும் அவள் கணவரும் அகிலாவை மிகவும் அன்புடன் நடத்தினார்கள். வசந்தாவை விட அவள் கணவன் ராஜாராமனுக்கு அகிலாவிடம் அன்பு அதிகமுண்டாயிற்று. கள்ளங்கபடற்ற அந்தச் சிறுமியின் வாயைக் கிளறுவதில் அவனுக்கு மிகவும் அலாதி இன்பம். இப்படியாக ஒரு வருட காலம் சென்றது.

வீட்டில் அகிலாவுக்கு உள்ள செல்வாக்கு வசந்தாவுக்கு உண்டா என்று சந்தேகப்படும்படியாக காரியங்கள் நடந்தன. சுபாவத்திலேயே முடுக்குக்காரியான வசந்தா சதா கணவனுடன் ஏதாவது ஒரு விஷயத்தைக் குறித்து அடிக்கடி சண்டையிட்டாள். அகிலா தலையிட்டுத் தகராறைத் தீர்க்கப் போனால் வசந்தா அவளைக் கண்டபடி திட்டுவாள். ஒரு தடவை நடந்த தகராறில் அகிலா தலையிட்டதால் வசந்தா பலமாக அவளை ஒரு அறை விட்டாள். “குழந்தையை இவ்வளவு முரட்டுத்தனமாய் அடிக்கலாமா?” என்று இரைந்துவிட்டு ராஜாராமன் வசந்தாவின் கன்னங்களில் பளீர் பளீர் என்று நான்கைந்து அறைகள் வைத்தான்.

“குழந்தையா அவள்? என் சக்களத்தி!” என்று கூறி அழுதுகொண்டே வசந்தா குப்புறப் படுத்துக் கொண்டு அழலானாள்.

“பீடை. மாசற்ற குழந்தையைப் பார்த்து என்னவெல்லாம் கற்பனை செய்து திட்டுகிறாய்?” என்று கூறி ராஜாராமன் அகிலா



கடைக்காரர்:—இந்தக் கடிகாரம் மனுஷ ஆயுசு காலத்துக்கும் உழைக்கும், ஐயா!

பெரியவர்:—அது வேண்டாம், ஸார்! எனக்கு இப்பொழுதே வயது எழுபதாகிறது!

யைப் பார்த்துத் தேறுதல் கூறினான். வீட்டில் இரண்டு நாள் மனஸ்தாபம் நீடித்து ஒருவருடன் ஒருவர் பேசவில்லை. ஆனால் ராஜாராமனோ வசந்தாவைக் கவனிப்பதை விட்டு அகிலாவைக் கவனித்து வந்தான். கள்ளங்கபடமற்ற அகிலாவுக்கு, அதுவும் பதினொரு வயது சிறுமிக்குத் தன் தமக்கை தன்னிடம் ஏன் இப்படி நடக்கிறாள் என்பதை அறியச் சிந்தனாசக்தி போதவில்லை.

இரண்டு நாள் கொம்மாளமும் இரண்டு நாள் தகராறும் இப்படியே அவர்கள் குடும்பச் சக்கரம் ஓடி வந்தது. ஆனால் ஊரிலிருந்து ராமநாதய்யர் அகிலாவை அழைக்க வரும்போதெல்லாம் வசந்தாவும் ராஜாராமனும் ஒன்று சேர்ந்து கொண்டு "வீட்டில் அவள் இருப்பது எங்களுக்கு எவ்வளவோ ஆறுதலாயிருக்கிறது. அவள் இங்கேயே இருக்கட்டும்" என்று சொல்வார்கள். ராஜாராமனுக்கு அகிலாவை விட்டுப் பிரிய மனமில்லை. அப்படியேதான் வசந்தாவுக்கும். ரொம்பவும் பலஹீனமானவள் வசந்தா. அவளால் வீட்டுக் காரியங்கள் செய்யவே முடியாது. ஆனால் அகிலாவோ பம்பரம் போல் சுழன்று எல்லா வேலைகளையும் தானே தனியாக நின்று செய்து முடிப்பாள்.

அகிலாவுக்கு வயது பதினான்கு ஆயிற்று. இன்னமும் அவளை வசந்தாவிடம் விட்டு வைப்பதில் உசிதமில்லை என எண்ணிய ராமநாதய்யர் அகிலாவை அழைத்துக் கொண்டு வந்து விடும்படி எழுதினார். இது விஷயமாக எழுந்த ஒரு சிறிய தகராறே பெரிய தகராறாக ஆகிவிட்டது. அதன் மூலம் வசந்தாவின் இல்வாழ்க்கை கசந்தது.

"அவளுக்குக் கலியாணம் செய்ய வேண்டிய வயது வந்து விட்டது. அவள் இனி இங்கிருப்பது உசிதமில்லை. அப்பா எழுதியபடி கொண்டுபோய் விட்டு விடுங்கள்" என்றாள் வசந்தா.

"அவளுக்கு வயது இப்போதுதான் பதினான்கு ஆகிறது. அதற்குள் என்ன கலியாணத்துக்கு அவசரம்? அவள் இங்கேயே இருக்கட்டும். யாராவது பெண் பார்க்க வந்தால் இங்கு அழைத்து வரட்டும். அவளை அனுப்ப முடியாது" என்றான் ராஜாராமன்.

"இதென்ன குறுக்கு யோசனை? உரிய காலத்தில் சொத்துக்களை அவரவர்களிடம் ஒப்படைக்க வேண்டியதுதானே, நியாயம்? எவ்வளவு நாள்தான் அவள் நம்மோடு இருக்க முடியும்?" என்றாள் வசந்தா.

"அவளை அனுப்பிவிட்டு இந்த வீட்டில் தனியாக நான் இருக்க முடியாது" என்றான் ராஜாராமன்.

"ஏன் நானில்லையா?" என்றாள் வசந்தா.

"நீ இருந்தும் ஒன்றுதான் இல்லாததும் ஒன்றுதான்!" என்றான் ராஜாராமன். அவன் இதைச் சாதாரணமாகத்தான் சொன்னான். ஆனால் அதன் மூலம் நம்மையறியாமலே ஒருவிஷ வித்தை வசந்தாவின் மனத்தில் நட்டு விட்டோம் என்பது அவனுக்குத் தெரியாது. அது ஒரே நாளில் திடீரென பெரிய விருக்ஷமாகி விடும் என்று யார் கண்டார்கள்?



கட வாத்தியக்காரர் குழந்தையைக் கொஞ்சுகிறார்!

"என்னைவிட அவள் உங்களுக்கு உயர்ந்தவளாகி விட்டாளா?" என்றாள் வசந்தா.

"உன்னைவிட அவள் உயர்ந்தவள்தான்!"

"அப்படி என்ன விதத்தில் உயர்ந்தவள்?"

"ஒரு விதத்திலா? எல்லா விதத்திலும் அவள் உயர்ந்தவள்தான்."

"என்னைவிட அவள் உங்களுக்கு ரொம்பவும் உறவோ? என்னால்தானே உங்களுக்கு அவள் உறவு!"

"மகா உறவு. என்ன ஆனாலும் அவளை அனுப்ப முடியாது."

"நான் போகிறேன்!"

"போயேன், தாராளமாக! இங்கே ஒருவரும் தடை செய்யவில்லை."

"நான் போக வேண்டும். அவள் இருக்க வேண்டும்! அதுதானே நீங்கள் சொல்வது? சிலகாலமாகவே சந்தேகித்தேன். இப்போது நிச்சயமாகி விட்டது. நீங்கள் இருவரும் சேர்ந்து என் வாழ்க்கையைப் பாழாக்கத் திட்டமிட்டு விட்டீர்கள். நான் தொலைய மாட்டேனா என்று நீங்கள் இருவரும் நினைக்கிறீர்கள், இல்லையா? ஆனால் நான் உயிரு

டன் இருக்கும் வரை உங்கள் எண்ணம் கை கூடாது'' என்றாள் வசந்தா.

"சீ, நாயே! மூடுவாயை! என்ன அபத்தமான பேச்சு!'' என்று கூறிப் பளார் பளார் என்று வசந்தாவை அடித்து விட்டு வெளியே போய்விட்டான் ராஜாராமன்.

கடிதத்துக்குப் பதில் வராததைக் கண்ட ராமநாதய்யர் மறுதினமே வந்து அகிலாவை அழைத்துப் போனார். புறப்படும் போது ராஜாராமன் எவ்வளவோ தடை செய்தும் பலனில்லை. வசந்தாவிடம், "நான் வருகிறேன், அக்கா!'' என்று சொல்லிக் கொண்டாள் அகிலா. வசந்தா முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். வண்டி தெருக்கோடி போகும் வரை வாசலில் நின்றபடியே அகிலாவைப் பார்த்துக் கொண்டிருந்தான். இது விஷயங்களை அகிலா தன் பெற்றோரிடம் சொல்லவில்லை.

அகிலா சென்று ஆறு மாத காலம் ஆகி விட்டது. ஒரு நாள் வசந்தா பெற்றோர் வீட்டுக்கு வந்தாள். அவளைப் பார்த்துத் திடுக்கிட்டாள் அகிலா. வேறு எதற்காகவும் இல்லை. என்னதான் பலஹீனமானவளாக வசந்தா இருந்தும் இப்போது உடம்பு துரும்பாக இளைத்து, கன்னங்கள் ஒட்டி, கண்கள் குழிவிழுந்து காணப்பட்டாள். வசந்தாவின் உடல் நிலை அவளுடைய பெற்றோரைத் திடுக்கிட வைத்தது.

வசந்தா தன் கணவன் தன்னைக் கொடுமைப் படுத்தியதாய்ச் சொன்னாளே ஒழிய அகிலாவின் காரணமாகத்தான் தன் கணவன் இப்படி நடந்தான் என்பதைச் சொல்லவில்லை. ஆனால் அவள் பேரிலும் தன் கணவன் பேரிலும் அவளுக்குச் சொல்ல முடியாத வெறுப்பு. வர வர மனக்கவலை அதிகமாகிப் படுத்த படுக்கையானாள் வசந்தா. நோய் வாய்ப் பட்டுப் படுக்கையில் கிடந்த போது அவள் மனம் பழைய சம்பவங்களைச் சீர்தூக்கிப் பார்த்தது. தன் கணவன் அகிலாவிடம் பழகிய தோரணையைத் தான் சந்தேகித்தது தப்பிதம் எனவும் அவன் சாதாரணமாகத்தான் அகிலாவுடன் பழகியிருக்க வேண்டும் என்று எண்ணினாள். அதை ஊர்ஜிதம் செய்வதுபோல் ஒரு கடிதம் அவள் பார்வையில் தென்பட்டது. அந்தக் கடிதம் அகிலா ஊருக்குப் புறப்படும்போது ராஜாராமன் ஒருவருக்கும் தெரியாமல் அகிலாவிடம் கொடுத்தது. அதைப் பத்திரப் படுத்தி வைத்திருந்த அகிலா தன் சகோதரி வசந்தா தன் மீது கொண்டுள்ள வீண் சந்தேகம் நீங்க வேண்டும் என எண்ணியே வசந்தாவின் காலடியில் கிடந்த மேஜையின் அடியில் அவள் கண்ணில் படும்படியாக வைத்தாள்.

"அகிலா, உன் சகோதரி உன்னையும் என்னையும் பற்றித் தவறுதலாக எண்ணினாலும் நான் அப்படியெல்லாம் தவறான எண்ணம் கொண்டு உன்னுடன் பழகவில்லை. வசந்தாவைத் தவிர என் மனத்தில் வேறு யாருக்கும் இடம் இல்லை. இதை அவளிடம் சொல்லலாமென்றால் குரோத மனப்பான்மை கொண்ட வசந்தா இதை வெளி வேஷம் என்பாள். எப்போதாவது நீ அவளுடன் இதைப் பற்றிப் பேசினால் அவளிடம் தெரிவிக்கவும்—ராஜாராமன்'' என்று எழுதியிருந்தது.

"அகிலா அகிலா'' என ஆர்வத்துடன் கூப்பிட்டாள் வசந்தா. "என்னை மன்னித்து விடு'' என்று அகிலாவைக் கட்டிக் கொண்டு அழுதாள். "இந்த விஷயம் நம் மூவருடனேயே இருக்கட்டும். நீ உடனேயே என் கணவருக்குக் கடிதம் எழுதி வரவழை'' என்றாள் வசந்தா.


அகிலாவின் சந்தோஷத்துக்குக் கேட்க வேண்டுமா? உடனே ராஜாராமனுக்குக் கடிதம் எழுதினாள். ராஜாராமன் வந்ததும் அவனைத் தன் அறைக்கு அழைத்து "என் ஸ்தானத்தில் என் தங்கையை வைத்து நீங்கள் குடித்தனம் செய்ய வேண்டும்'' என்று ராஜாராமனைப் பார்த்துச் சொன்னாள். பக்கத்திலிருந்த தன் தங்கையைக் கூப்பிட்டு, "நீ என் கணவரை மணம் செய்து கொண்டு சந்தோஷமாயிரு. இதைவிட என் மனசுக்குத் திருப்தி வேறு இல்லை. நான் செய்த கொடுமைகளை இருவரும் மறந்து விடுங்கள்'' என்று கூறினாள்.

* * *

பூமாலை கட்டிமுடித்தாள். நினைவு மாலையும் கட்டி முடிந்து விட்டது.

"ராஜாராமனுக்கு உன்னைக் கொடுக்க எண்ணுகிறேன். உன் சம்மதம் என்ன அம்மா!'' என்று கேட்டார் ராமநாதன்.

'பூரண சம்மதம்!' என்பதற்கு அறிகுறியாக நாணம் அவள் இதழ்களில் இழையோடியது.



தாயார் :—நீ மடுவுக்குப் போய் நீந்தக் கூடாது.

பையன் :—அந்த மாமா மட்டும் நீந்துகிறாரே, ஏன்?

தாயார் :—அந்த மாமா நிறைய இன்ஷியூர் பண்ணியிருக்கிறார், அதனாலே நீந்துகிறார்.



# இடைக்கால 'மனைவி'!

கே. எம். முன்ஷி
தமிழாக்கம்: ரா. வீ

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இருள் சூழ்ந்த இரவு. இருவரும் ஒருவருக்கொருவர் மிகச் சமீபத்தில் இருந்தோம். விளக்கு வேறு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. போதாக்குறைக்கு எல்லாவற்றுக்கும் மேலாக வாசற் கதவு வேறு தாளிடப் பட்டிருந்தது. அந்த அறியாக் குழந்தையைத் தவிர எங்களிருவருக்கும் மத்தியிலே மூன்றுமவர் யாரும் இல்லை. இதை விட எங்கள் இருவருக்கும் தனிமையில் சந்திக்க வேறு என்ன வேண்டும்!

"நீங்கள் இங்கே எப்படி வந்தீர்கள்!" என்று சுய நினைவை வரவழைத்துக் கொண்டு கேட்டேன்.

"ஏன்! நாங்கள் இங்கே கல்யாணத்துக்கு வந்திருக்கிறோம்!" என்றாள் அவள்.

"அப்படியா! நீங்களும் பார்டுவாவுக்குத்தான் வந்து கொண்டிருந்தீர்களா!"—வேறு என்ன கேட்பது என்று புரியாமல் போகவே, நான் இந்தக் கேள்வியைக் கேட்டு வைத்தேன்.

"இல்லை, இல்லை; இது பாக்கோடி அல்லவா!" பெண்களுக்கே இயல்பான நிஷ்களங்கத்துடன் அவள் சொல்லி வைத்தாள்.

"இல்லை, இது பார்டுவா. இந்த வீடு இந்த ஊரில் மிகப் பிரபலஸ்தரான தயால்ஜிபாயின் வீடு!" என்று புரிய வைத்தேன் நான்.

"என்ன, என்ன! இது பாக்கோடி இல்லையா! அப்படியானால் என்னை இங்கே ஏன் அழைத்துக் கொண்டு வந்தார்கள்!" என்று பதறிப் போய் அவள் கேட்டாள்.

"அதனால்தான் உங்கள் கணவர் ரயிலிலேயே தங்கி விட்டாரோ!" என்றேன்.

"ஆ! என்ன!" என்று இன்னும் பதறிப் போய்த் துடிதுடித்துக் கேட்டாள் அவள்.

"என்னவா! சகுனியாவின் வேட்டியைக் கொடுத்து வருகிறேன் என்று சொல்லி முன் பெட்டியில் போய் ஏறிக் கொண்டார் அல்லவா! அப்பொழுது வண்டி புறப்பட்டு விட்டது! அவர் வண்டியுடன் போனதை நான் என்னுடைய இந்தக் கண்களாலேயே பார்த்தேன்!" என்றேன்.

"என்ன, நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றே எனக்கு விளங்க வில்லையே! குழந்தைக்கு அப்பா இன்னொரு வண்டியில் உட்கார்ந்திருக்கிறார் என்று அந்தத் தேசாய்க் கிழவர் சொல்லிப் போனாரே! அப்புறம் யாரோ மக்கன்ஜி பாய், அவர் வந்து என்னை இன்னொரு வண்டியில் ஏற்றி விட்டுப் போனார்!" என்று அவள் களை யிழந்த முகத்துடன் சொன்னாள்.

அப்புறம்தான் — அதாவது அவள் சொன்னதைக் கேட்டபின்தான்—எனக்கு விஷயம் உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்கியது. நான் நெற்றியைப் பிடித்துக் கொண்டு அப்படியே அயர்ந்து போய் உட்கார்ந்து விட்டேன். இம்மாதிரித் தர்ம சங்கடத்தில் மாட்டிக் கொண்டிருந்த பொழுதிலும், அந்த விஷயத்தை நினைத்துப் பார்த்ததும் என்னால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. "அட கடவுளே!" என்றேன்.

"கடவுளைக் கூப்பிட்டு என்ன பிரயோஜனம்! இப்பொழுது என்ன செய்வது என்று எனக்கு ஒன்றுமே புரியவில்லையே!" என்று அவள் தலையைப் பிடித்துக் கொண்டாள்.

"எல்லாம் அந்தக் கிழவர் செய்த குழப்பம். எல்லாரையும் சரியாக உட்கார வைத்தாய் விட்டது என்று என்னிடம் வந்து சொல்லிப் போனார். அப்பொழுது அவர் சொன்னது எனக்குச் சரியாகப் புரியவில்லை. யாரை உட்கார வைத்தால் என்ன, உட்கார வைக்காவிட்டால் என்ன என்று எண்ணிக் கொண்டிருந்து விட்டேன். இப்பொழுதல்லவா விஷயம் புரிந்தது!"

"அப்படியானால் என்னை உங்கள்......" இதற்கு மேல் வாக்கியத்தை முடிக்க முடியாமல் அவள் வெட்கம் காரணமாக வெளிறிய முகத்துடன் தலை குனிந்தாள். பிறகு உதடுகளில் இளநகை தாண்டவமாட, "இது பெரிய தர்ம சங்கடமாக அல்லவா ஆகி விட்டது!" என்றாள்.



"தர்ம சங்கடம் என்றால் சாமான்யமான தர்ம சங்கடமா! — ஆமாம், வெற்றிலைப் பீடா வாங்கிக் கொள்ளும் பொழுது நீங்கள் இதைப் புரிந்து கொள்ள வில்லையா!" என்று கேட்டேன்.

அவள் அதற்குப் பதில் சொல்லாமல் மழுப்பி விட்டு, "அதுகளக்கிடாலவது கெட்டுப் போகட்டும். இப்பொழுது

அவர் நிலைமை என்ன ஆகும்!'' என்று மிகக் கலவரத்துடன் என்னைக் கேட்டாள்.

''என்ன ஆகும்! அடுத்த வண்டியில் திரும்பி வந்து விடுகிறார்!'' என்றேன்.

''ஆமாம், நம் நிலைமை...!''

''நம் நிலைமைக்கு என்ன!''

''ஆமாம், அப்படியானால் உங்கள் காரணமாகத்தான் எனக்கு இந்த மட்டு-மரியாதை, வசதி-கௌசதி, விருந்து-கிருந்து எல்லாம் கிடைத்திருக்கிறது என்று சொல்லுங்கள்!''

''ஆமாம்! அப்படித்தான் இருக்க வேண்டும்'' என்றேன் நான்.

பிறகு நாங்கள் இருவரும் சிறிது நேரம் பேசாமல் இருந்தோம். பெண்களுக்கு இயல்பான நாணம் அவளை மேலே பேசவிடவில்லை. பொறியில் அகப்பட்ட எலி போல் அவள் மனம் அலைபாய்ந்திருக்க வேண்டும். சிறிது நேரத்துக் கெல்லாம் அவள் என்ன நினைத்துக் கொண்டாளோ, ''இனி என்ன ஆகும்!'' என்ற கேள்வியைக் கேட்டுவிட்டு என்னையே பார்க்கலானாள்.

பாவம், அவள் மிகவும் பதறிப் போயிருந்தாள். எனக்கும் என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை. நானும் அவள் முகத்தையே பார்த்தேன். ''ஐயையோ! நான் என்ன செய்வேன்!'' என்று கேட்டவள் அந்தப் பதற்றத்திலும் தன்னைமறந்து 'கல கல' வென்று சிரித்து விட்டாள். என்னாலும் பேசாமல் இருக்க முடியவில்லை. நானும் ஓரேயடியாக மடைவாய் திறந்து விட்டது போலக் 'கட கட' வென்று சிரித்து விட்டேன். பிறகு, 'இந்தக் கஷ்டத்திலிருந்து எப்படி விடுதலை கிடைக்கும்!' என்று கண்டு பிடிப்பதற்காக நாங்கள் இருவரும் ஜன்னலண்டை சென்றோம்.

''யாரிடமாவது சொல்லி......'' என்று அவள் ஆரம்பித்தாள்.

''எல்லோரும் தூங்கிப் போய்விட்டார்களே!'' -நான் நம்பிக்கை இழந்து திரும்பினேன்.—''இதை யாரிடம் போய்ச் சொல்லுவது! எப்படிச் சொல்வது! சொன்னால் மானம், மரியாதை எல்லாம் காற்றாகப் பறந்து விடாதா!'' என்று கூறியவாறே அறையின் மத்தியில் தரையில் போய்த் 'தொபுகடீர்' என்று உட்கார்ந்து கொண்டேன்.

''நீங்கள் சொல்லுவது ஒரு விதத்தில் நியாயம் தான். இந்தச் சமயம் யாரிடம் போய் என்னத்தைச் சொல்லுவது!......இந்தப் பிள்ளையைப் பெற்ற தகப்பனுக்குத் தெரிந்தால் என் உயிரை வாங்கி விடுவானே!''

''இங்கிருக்கிறவர்களுக் கெல்லாம் தெரிந்தால் என் மானத்தை வாங்கி விடுவார்களே! நாளை ராவ் சாஹேப்! என் கதி என்ன ஆவது!''—நான் கவலைப்பட்டுக்கொண்டு என் பதற்றத்தைக் காட்டினேன். அவரவர் கவலை அவரவர்க்கு!

''சுகமோ, துக்கமோ எப்படியாவது இராப் பொழுதை ஓட்டி விடுவோம்!'' என்றாள் அவள்.

''நான் தனியாகத் தூங்கக் கீழே இறங்கிப் போய் விடட்டுமா!'' என்று நான் அவளைக் கேட்டேன். அதைத் தொடர்ந்தாற் போலவே, ''கீழே போய்க் கதவைத் திறக்க முயற்சித்தால் ஊர் முழுவதும் விழித்துக் கொண்டு விடுமே!'' என்ற சந்தேகத்தையும் நானே எழுப்பினேன்.

''போதாக் குறைக்கு இது கல்யாண வீடு வேறு ஆயிற்றே!'' என்று அவள் என் சந்தேகத்துக்கு இன்னும் வலுவூட்டினாள்.

நான் பேசாமல் இருந்தேன்.

''ஆனால் பொழுது விடிந்தால் நான் யாரிடம் என்னவென்று சொல்லுவேன்!'' என்று அவள் இன்னொரு புதிய சிரமத்தையும் சங்கடத்தையும் சுட்டிக்காட்டி என்னைக் கேட்டாள்.

''அதைப்பற்றி இப்பொழுது என்ன கவலை! எப்படியாவது சமாளித்துக் கொள்ளலாம். உங்களை நான் பாங் கோடிக்கே கொண்டு போய் விட்டு வந்துவிடுகிறேன்!'' என்று சொன்னேன்.

''ஆமாம், அதுதான் சரியான யோசனை!'' என்று அவள் ஒத்துப் பாடினாள்.

இந்தச் சிரமமான பிரச்னையை ஒருவாறு தீர்த்துக்கொண்ட பின்னர் அவள் அந்த அறையின் அகல நீளத்தைத் தன் கண்களாலேயே அளந்து பார்த்துக் கொண்டாள். விளக்கின் மங்கிய ஒளியையும் மதிப்பிட்டுக் கொண்டாள். பிறகு என் மீது பார்வையைப் புதைத்தாள். நானும் அந்த சமயம் அதே காரியத்தைத்தான் செய்து முடித்து அவள் பக்கம் பார்வையைத் திருப்பி யிருந்தேன். என் முகத்தைப் பார்த்த அவள் இலேசாகச் சிரித்தாள். பிறகு தலையைக் குனிந்து பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள். நானும் பக்கத்தில் பார்வையைத் திருப்பிக் கொண்டேன். இச்செய்கையினால் எங்களையும் மீறி எங்களுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. கடைசியில் இருவரும் 'கலகல' வென்று சிரித்து அந்த அறையையே அதிரச் செய்து விட்டோம்.

எங்கள் சிரிப்பொலியைக் கேட்டு எதிர் வீட்டு ஜன்னல் இலேசாகத் திறந்ததையும், எங்கள் தம்பதி விநோதத்தை யாரோ கண்டு ஆனந்திக்க முயல்வதையும் நான் கண்ணுற்றேன்.

என் வாய் திறந்தது திறந்தபடியே இருந்து விட்டது. ''கட்டையிலே போகிறவன்!'' என்று அவள் என் காதுகளில் விழும்படியாகத் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள்.

அவள் குறிப்பறிந்த நான் மெதுவாக எழுந்து சென்று எதிர் ஜன்னல் கதவைச் சாத்தி விட்டு வந்தேன். எங்கே தூங்குவது, எப்படித் தூங்குவது என்ற எங்கள் பிரச்னை தீர்க்கப் படாமலேயே கிடந்தது.

முன் உட்கார்ந்த இடத்துக்கே வந்து நான் உட்கார்ந்து கொண்டேன். மறுபடியும் எங்கள் இருவர் பார்வையும் அந்த சிறு அறையை ஒரு சுற்று சுற்றிவிட்டுப் பிறகு எங்களிலேயே வந்து லயித்தது. இம்மாதிரி எத்தனை தடவை செய்தோமோ, சட்டென்று எங்கள் கண்களில் விளக்குத் தட்டுப்பட்டது. அடுத்த கணம் ஏக காலத்



தில் எங்கள் இருவருக்குமே படுத்துத் தூங்கிவிட வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது.

விருந்தாளிகள் வந்து ஏகமாகக் குழுமி விடவே தயாள்ஜி பாயியினால் எங்களுக்கு ஒரே ஒரு அறை தான் ஒழித்துக் கொடுக்க முடிந்திருந்தது. அதில் ஜமக்காளமோ, கம்பளியோ கூட விரிக்கப்பட்டிருக்கவில்லை. எங்கள் இருவருடைய மூளையையும் தூங்க வேண்டும் என்ற எண்ணம் முற்றுகை யிட்டுக் கொண்டிருந்ததே தவிரத் தூங்க வழி தோன்றவில்லை.

“மக்கன்ஜியை எழுப்பி இன்னொரு படுக்கை கேட்டு வாங்கினால் என்ன!” என்றேன் நான்.

“கேட்கலாம். மற்றவர்களும விழித்துக் கொண்டுவிட்டால்...!” என்ற அதே சிரமத்தை மறுபடியும் அவள் நினைவுறுத்தினாள்.

“இன்னொரு படுக்கை இல்லாமல் இந்தப் படுக்கையையே இரண்டு பேரும்......” என்று நான் ஆரம்பித்தேன்.

“ஐயையோ!” என்று சொல்லி இரு கைகளையும் அவள் பிசைந்தாள். அப்பொழுது அவளுடைய நாணிக் கோணிக் கொண்ட அழகைக் காணக் கோடிக் கண்கள்தான் வேண்டும். ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்ட எங்களுக்குச் சிரிப்பதைத் தவிர வேறு வழி தோன்றாமற் போகவே மறுபடியும் சிரித்தோம்.

“ஆமாம். யாருக்காவது தெரிந்துவிட்டால்...!” என்று அவள் மறுபடியும் ஆரம்பித்தாள்.

“அதைத்தானே நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன்!” என்று சொன்ன நான் மறுபடியும் என்னை மீறிச் சிரித்தேன்.

சிறிது நேரம் இருவரும் பேசாமல் இருந்தோம். எனக்குச் சட்டென்று ஒரு யோசனை தோன்றிற்று.

“ஒரு காரியம் செய்தால் என்ன!” என்றேன்.

“என்ன!”— ஆவலுடன் கேட்டாள் அவள்.

“இந்தத் தலையணையின் ஒரு பக்கத்தை நான் தலைக்கு உயரமாக வைத்துக் கொள்கிறேன். நீங்கள் இன்னொரு பக்கத்தை வைத்துக் கொள்ளுங்கள். எனக்குத் தலைக்கு உயரமாக ஏதாவது வைத்துக் கொண்டால்தான் தூக்கம் வரும்!”

“எனக்கும் அப்படித்தான். தலைக்கு உயரம் இல்லாவிட்டால் தூக்கம் வருவதில்லை!”

“இந்தக் குழந்தை நமக்கு நடுவில் தூங்கட்டும்”—அப்பொழுது நான் அந்தக் குழந்தையை



எங்கள் இருவருக்கும் இடையே சுவர்போல ஒரு மறைப்பாக உபயோகப்படுத்திக் கொள்ள முயன்றேன். இதைச் சொன்ன பிறகு, நான் கோட்டு, ஷர்ட்டு, தலைப்பாகை முதலியவற்றைக் கழற்றி ஒரு புறமாக வைத்து விட்டுப் படுக்க என்னைத் தயார் செய்து கொண்டேன்.

“ஏகப்பட்ட ஆசார-உபசாரங்கள் செய்து எனக்கும் வயிறு வெடிக்க விருந்து செய்துவைத்து விட்டார்கள்!” என்றாள் அவள்.

நாங்கள் இருவரும் தலையணையில் பாதிப் பாதியைத் தலைக்கு உயரமாக வைத்துக் கொண்டு தூங்க முயன்றோம்.

எங்களுடைய இந்த முயற்சி வெற்றி அடைவதற்கு முன்பாகவே பையன் மேல் ஸ்தாயியில் முகாரி ராகத்தை ஆலாபனம் செய்யத் தொடங்கி விட்டான். ஆகவே, அவன் தாயார் எழுந்து உட்கார்ந்து அவன் அழுகையை ஓய்க்க முயன்றாள்.

“ஏன்! என்ன வேணுமாம் அவனுக்கு!” என்று நானும் தூங்கும் முயற்சியைக் கைவிட்டு விட்டுக் கேட்டேன்.

அவள் தன் குழந்தையின் அழுகையை ஓய்க்க என்ன வெல்லாமோ செய்து பார்த்து விட்டாள். ஆனால் அதற்கெல்லாம் அவன் அழுகை ஓய்வதாயில்லை. வர வர உச்சஸ்தாயியை எட்டிப் பிடிக்க ஆரம்பித்தது.

கடைசியில் என்னால் பேசாமல் இருக்க முடியவில்லை. “என்ன வேண்டுமாம், அவனுக்கு!” என்று சலிப்புடன் கேட்டேன்.

என் கேள்வியைக் கேட்ட அந்தப் பெண்ணின் முகத்தில் நாணம் படர்ந்தது. முகத்தைப் புடவைத் தலைப்பில் புதைத்துக் கொண்டு சிரிக்கலானாள்.

“என்ன விஷயம்!”—அதில் ஏதோ ரகசியம் இருப்பதாக எண்ணி நான் திருப்பித் திருப்பிப் பல தடவைகள் அவளை அதே கேள்வியைக் கேட்டுத் திக்குமுக்காட வைத்து விட்டேன்.

“ஒன்றும் இல்லை. இவன் அப்பாதான் தினமும் இவனைத் தட்டித் தூங்கப் பண்ணுவது வழக்கம். அதற்காகத்தான் அழுகிறான்!” என்று குறும்பாகச் சிரித்தவாறே தலையைத் தரையில் புதைத்த வண்ணம் அவள் சொன்னாள்.

அட, கஷ்டமே!

“இவ்வளவுதானே விஷயம்! சரி, நான் தட்டித் தூங்கப் பண்ணுகிறேன். இப்படிப் படுக்கையில் போடுங்கள்!” என்று சொல்லிக் குழந்தையை என் அருகில் இழுத்துப் போட்டுக் கொண்டு தட்டித் தூங்கப் பண்ண முயன்றேன்.

பயல் சரியான பயல்தான்! என் கைபட்டதும் கண்களை மூடிவிட்டான். வெற்றி மகிழ்ச்சியுடன் நான் அந்தப் பெண்ணைப் பார்த்தேன். அவளுக்கு அடக்க மாட்டாத சிரிப்பு வந்தது. மிஷினை முடுக்கவிட்டதும் குழாயில் ‘குபுக் குபுக்’ என்று தண்ணீர் வருமே, அதுபோல அவள் விட்டு விட்டுக் ‘களீர், களீர்’ என சிரித்தாள்.

பிறகு நாங்கள் இருவரும் ஒரே தலையணையைத் தலைக்கு உயரமாக வைத்துக் கொண்டு எதிரும் புதிருமாகப் படுத்து விட்டோம். பிறகு தூக்கத்தை வரவழைக்கப் பிரும்மப் பிரயத்தனம் செய்தோம். சாதாரணமாக எனக்குத் தூக்கம் என்றாலே ரொம்பப் பிடிக்கும். தூக்கத்தில் கும்பகர்ணன் என்பார்களே, அவன் கூட என்னிடம் சிற் சில சமயம் பிச்சைதான் வாங்க வேண்டும். இன்றைக்குக் கிடைத்தது போன்ற ஆசார உபசாரமான விருந்து வேறு என்றைக்காவது கிடைத்திருந்தால், கண்களை மூடியதுமே நான் கண்

அயர்ந்திருப்பேன். ஆனால் இதுவோ புது இடம். இரண்டாவதாக அன்றைக்கு எத்தனையோ வீடுகளில் தேநீர் அருந்தியிருந்தேன். அதையெல்லாம் விட முன்பின் பழக்கமில்லாத ஒரு பெண் எனக்குத் தூக்கத்துக்குத் துணைவியாக வாய்த்திருந்தாள். அப்படியிருக்கும் பொழுது தூக்கம் எங்கிருந்து வரும்! தலைவலி மண்டையைப் பிளந்தது. மூச்சுக் காற்றில் உஷ்ணம் ஏறியது. கை கால்கள் முறுக்கிக் கொண்டு மூட்டுகளில் கடுத்தன. ஒன்று, இரண்டு, மூன்று நூறுவரைக்கும் எண்ணினேன். ஆயிரம் தடவை ராம நாமத்தை ஜபித்தேன். இந்திய சட்டத்தின் பிரிவு - உப பிரிவுகளை ஒரு முறை ஞாபகப்படுத்திக் கொண்டேன். என்ன செய்து என்ன! கண்கள் திறந்தது திறந்தபடி இருந்தனவே யொழிய இமை கொட்டவில்லை. கண் கொட்டாமலிருந்த எனக்கு அந்தப் பெண்ணும் கண் கொட்டினதாகத் தெரியவில்லை.

தூக்கமும் வரவில்லை. உள்ளமும் பதற்றத்தில் சோர்ந்து விட்டது. உள்ளமும் உடலும் சோர்ந்த அந்தச் சமயத்தில், மறுபடியும் அந்தப் பையன் தூக்கக் கலக்கத்தில ஸ்வரம் பாடத் தொடங்கினான். நான் ஒரு கையினால் அவன் முதுகில் தட்ட ஆரம்பித்தேன்.

சோர்ந்து புரண்டு படுத்த அந்தப் பெண்ணும் குழந்தை அழுவதை அறிந்து தாயின் இயல்புக்கேற்பக் கையை நீட்டினாள். எங்கள் இருவர் கைகளும் ஒன்றை ஒன்று ஸ்பரிசித்துக் கொண்டு விட்டன.

''அட கடவுளே!'' என்று நான் என்னையும் அறியாமல் கூறிய வண்ணம் தீயை மிதித்துவிட்டவன் போலத் துள்ளி எழுந்து உட்கார்ந்தேன்.

அந்தப் பெண்ணும் எழுந்து உட்கார்ந்தாள். ''அடி அம்மா!'' என்ற சொல் அவள் வாயிலிருந்து அவளை யறியாமலேயே வெளி வந்தது.

நாங்கள் இருவரும் ஒருவரை யொருவர் மறுபடியும் பார்த்துக் கொண்டோம். தூக்கம் வராமல் தவித்துக் கொண்டிருந்த நாங்கள் எங்களை யறியாமலே இன்னொரு முறையும் சிரித்துவிட்டோம்.

''ஆமாம், பொழுது எப்பொழுது விடியுமோ!'' என்றாள் அந்தப் பெண்.

''நானும் அதையேதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்!'' என்றேன்.

எங்கள் கேள்விக்குப் பதில் சொல்லுவது போல் விளக்கின் ஒளி பளிச்சென்று சுடர்விட்டுப் பிரகாசித்தது. நாங்கள் பயத்தினால் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டோம். பிறகு விளக்கின் பக்கம் பார்வையைத் திருப்பினோம். அதற்குள் விளக்கு அணைந்து விட்டது.

• • •

விடியற்காலை ஐந்து மணி சுமாருக்கு நான் மாடிக் கதவைத் திறந்தே தீருவது என்று துணிந்து தீர்மானித்து விட்டேன். நேரே கதவைத் திறந்து கொண்டு தயால்ஜியைக் கூப்பிடப் போனேன்.

''தயால்ஜிபாய்! நான் இப்பொழுதே போய் ஆக வேண்டும்!'' என்றேன் அவரை எழுப்பி.

''என் சார்! இவ்வளவு அவசரம் என்ன!'' என்று அவர் மிகவும் வினயத்துடன் கேட்டார். நான் கோபித்துக்கொண்டு விட்டேன் என்று அவருக்குத் தோன்றியது போலும்!

''இங்கே வருகிற அவசரத்திலே இன்று கமிஷனரைப் பார்க்க வேண்டும் என்பதையே மறந்து விட்டேன். அதனால்தான்...'' என்றேன்.

''அடடா! அப்படியானால் இப்பொழுது என்ன செய்வது!''

''பரவாயில்லை. காலையில் ஒரு வண்டி போகிறதல்லவா? அது நாலு மணிக்கெல்லாம் பம்பாய் போய்விடும்!'' என்றேன்.



''அட ராமா! சரி, நீங்கள் புறப்படுங்கள். உங்கள் மனைவி இன்னும் இரண்டு நாள் இருந்துவிட்டு வரட்டும்!'' என்றார் தயால்ஜிபாய்.

''இல்லை. அதுவும் முடியாது. குழந்தையை டாக்டரிடம் காண்பிக்க வேண்டும்!'' என்றேன்.

தயால்ஜிபாய்க்கு மிகவும் மன வருத்தம் தான். இருந்தாலும் வேலையின் முக்கியத்தைக் கருதி உடனே வண்டியைப் பூட்டச் சொன்னார். மக்கன்ஜியையும் கூப்பிட்டு எங்களை ஸ்டேஷன்வரை கொண்டு விட்டு வருமாறு உத்தரவிட்டார். மக்கன்ஜி கூட வருவதை நான் விரும்பவில்லை. ஆகவே, வெகு சிரமப்பட்டு அவனைத் தடுத்து நிறுத்தினேன். கடைசியில் அவசர அவசரமாகக் காலைச் சிற்றுண்டியை முடித்துக்கொண்டு, நானும் என் இடைக்கால 'மனைவி'யும் சிரித்த முகத்துடன் எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு ஸ்டேஷனுக்குப் புறப்பட்டோம்.

வழியில் நாங்கள் வார்த்தை யாடிக் கொண்டே போனோம். இரவின் இருள் அகன்றதுபோலவே, எங்களிடையே குடிகொண்டிருந்த குழப்பமும் வெட்கமும் அகன்றன. கடைசியில் ஸ்டேஷனும் வந்துவிட்டது. வண்டிக்காரனை அதிக நேரம் காக்க வைப்பது சரியாகப் படவில்லை. ஆகவே, அவனுக்கு ஒரு ரூபாய்

இனும் கொடுத்து அவனை அனுப்பி விட்டேன். எங்கள் மனத்தை அழுத்திக் கொண்டிருந்த சுமை ஒருவிதமாகக் குறையலாயிற்று. ரயிலில் ஏறி உட்கார்ந்து விட்டால் அப்புறம் நம்மைக் கேட்பவர் யார்!

ஆகவே, போர்ட்டரின் அறையை நோக்கி வண்டி எப்பொழுது வரும் என்று விசாரிப்பதற்காகப் போனேன். நான் கதவைத் தட்டுவதற்குள்ளாகவே தூரத்தில் வண்டி வருவது தெரிந்தது. கதவு தட்டும் சத்தத்தைக் கேட்ட போர்ட்டர் ஜன்னல் கதவைத் திறந்து தலையை வெளியே நீட்டினான். அதற்குள் அந்த அறைக்குள்ளிருந்து யாரோ உரத்த குரலில், "ஏண்டி! எங்கேயடி போய்த் தொலைந்தாய்!" என்று கடிந்து கொண்டது காதில் விழுந்தது.

என் இருதயத்தை மறுபடியும் குறைந்த அந்தச் சுமை வேதாளம் முருங்கை மரம் ஏறிய கதையாக அழுத்தலாயிற்று. உள்ளிருந்து அந்த ஆசாமி கோபம் மூண்ட கருநாகத்தைப் போல என்னையே பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டேன். எனக்கு கிலைக்குத்தல் இட்டு விட்டது.

இந்த சந்தர்ப்பத்தில் ராவ்சாஹேபின் அதிகார தோரணையைக் கையாளாவிட்டால் காரியம் சாயாது என்று எனக்குத் தோன்றியது. ஆகவே, நான் வெகு மிடுக்காக, "அடே, மிஸ்டர்! நேற்று நீ வண்டியிலே தங்கிவிட்டாய், பாவம், உன் பெண்சாதி......" என்று ஆரம்பித்தேன்.

"டேய், மிஸ்டருக்கு மகனே! மரியாதையாகப் பேசடா!" — அந்த ஆசாமி என்னுடைய அதிகாரத்தை யெல்லாம் சிறிதும் லட்சியம் செய்யவில்லை. "நான்தான் வண்டியை உடனே நிறுத்தி விட்டு வந்து விட்டேனே, அப்பா! நீ என் பெண்சாதியை எங்கே அழைத்துக் கொண்டு போனாய், சொல்லு! நேற்றிரவு முழுவதும் இவளைத் தேடித் தேடி என் கால் கடுத்து விட்டது! எங்கேடா அழைத்துக்கொண்டு போனாய், சொல்லடா!" என்று மிகவும் கீழ்த்தரமான பாஷையைக் கையாளத் தொடங்கி விட்டான்.

"டேய்! வாயை அடக்கிப் பேசு. என்னை யார் என்று எண்ணினாய்! 'டா!' போட்டுப் பேசுகிறாயே! உனக்கு உதை கேட்கிறதா!" என்று அதட்டினேன்.

"உனக்கு மரியாதை வைத்து வேறு பேச வேண்டுமா! வெட்கம், மானம், சூடு, சொரணை உள்ளவனாக இருந்தால் நீ ஊரான்......" என்று இன்னும் கீழே இறங்கி விட்டான்.

ஏன் அவனிடம் வாயைக் கொடுத்தோம் என்றாகிவிட்டது. என் அதிகாரத்துக்கோ மிரட்டலுக்கோ ஒரு பலனும் ஏற்படவில்லை. என்னுடன் யாராவது வில்லைச் சேவகனோ வேலைக்காரனோ இருந்தால் என் பதவியையும் அதிகாரத்தையும் பற்றி அவனுக்குத் தெரியச் செய்திருக்க முடியும். காசைக் கெட்டியாக முடிந்துகொள்ள முயன்ற நான்தான் என்னோடு யாரையும் அழைத்துப் போக வில்லையே! என்ன செய்வது! இருந்தாலும் நான்தான் இந்த இலாகாவுக்கு மேலதிகாரி என்பதைச் சொல்லலாம் என்று எண்ணி வாயைத் திறந்தேன். அதற்குள் அவன் கைச்சட்டைகளை ஒதுக்கி விட்டுக் கொண்டு, முஷ்டியை மடக்கிக் கொண்டு குத்துவதற்காக என் அருகில் வந்துவிட்டான். அவனுக்குத் துணையாக அவனோடு இன்னொரு ஆஜானுபாகுவான ஆளும் வந்து சேர்ந்தான்.

எனக்கு இன்று நம்பாடு சட்டினிதான் என்று தோன்றிவிட்டது. நான் ஜில்லா கலெக்டராகவே இருந்தாக்கூட என்னை யார் லட்சியம் செய்யப் போகிறார்கள்! எனக்கு உலகமே சுற்றியது.

நல்ல வேளையாக, அந்த மனிதன் என் அருகில் வருவதற்குள்ளாக ரெயில் பிளாட்பாரத்தில் வந்து நின்று விட்டது. பக்கத்திலிருந்த போர்ட்டர் கதவைத் திறந்து விட்டான். நான் ஒரே தாவாகத் தாவி வண்டிக்குள்ளே போய்க் கதவை உட்புறமாகத் தாளிட்டுக் கொண்டேன். இரண்டாம் வகுப்புப் பெட்டியிலே உட்புறமாகத் தாழ்ப்பாள் போட்டுக் கொள்ளச் சௌகரியம் செய்து வைத்தானே, அவனுடைய புத்தியை மெச்சிக் கொண்டும், எனக்கு ஜில்லா கலெக்டர் பதவி அளிக்கப் போகும் அதிர்ஷ்ட தேவதையை வாழ்த்தி வணங்கிக் கொண்டும் 'வண்டி எப்பொழுதடா புறப்படப் போகிறது!' என்று காத்துக் கொண்டிருந்தேன். 'இருந்தாலும் கை கஷ்டம் கஷ்டந்தானே! இரண்டாவது வகுப்புப் பெட்டியில் ஏறி உட்கார்ந்து விட்டாயே!' என்று என் உள்ளம் என்னை இடித்துக் கொண்டிருந்தது.

'இது என்ன உலகமடா! நன்மை செய்யப் போனவனுக்குத் தீமையா! பிரிந்த மனைவியைச் சேர்த்து வைத்தேனே! இதற்கு இதுதானா வெகுமதி!' என்று எண்ணிக் கொண்டிருக்கும் பொழுதே வண்டி புறப்பட்டு விட்டது! "நீ! நீயும் ஒரு மனிதன்மாதிரி!" என்று சற்று இரைந்தே சொல்லி விட்டு அந்தப் பெண்ணைக் கடைசியாக ஒரு முறை கண்ணாரப் பார்த்தேன்.


என் இடைக் கால 'மனைவி' ஸ்டேஷன் பிளாட்பாரத்திலேயே தங்கி விட்டாள்!




கடைக்காரர்:—இதைப் பாருங்கள், ஸார்! இது சுத்தமான கம்பனியில் நெய்த சால்வை!

வாங்குபவர்:—அது சரி, ஆனால் இதன்மேல் 'பருத்தி நூல் நெசவு' என்று போட்டிருக்கிறதே!

கடைக்காரர்:—அதுவா, அது பூச்சிகளை ஏமாற்றுவதற்காகப் போட்டது, ஸார்!



# அதைச் செலவிடாதீர்கள்

இது செலவு பண்ணும் காலமல்ல. கஷ்டகாலத்திற்கென்று சேமித்து வையுங்கள்; அல்லது உங்கள் பணத்திற்கு அதிக மதிப்பு கிடைக்கும் தற்காலம் வரும் வரையில் சேமித்து வையுங்கள். இடையே சேமிக்கும்போதே சம்பாதியுங்கள்.

பன்னிரண்டு வருஷ நேஷனல் ஸேவிங்ஸ் ஸர்டிபிகேட்டுகள் சிறந்த முதலீடாகத் திகழுகின்றன. முதலீடு பூர்த்தியாகும்போது உங்கள் சேமிப்பின் பேரில் 50 சதம் அதிக வருமானத்தை அவை அளிக்கின்றன. இந்த போனஸ் வரி விலக்கு வாய்ந்தது.

பத்து வருஷ ட்ரஷரி ஸேவிங்ஸ் டிபாஸிட்டுகள் இது போலவே மற்றொரு சிறந்த முதலீடாகும். இவைகளுக்கு 3½ சதவிகிதம் வரி விலக்கு உள்ள வட்டி உண்டு; இவை வருஷாவாரியில் டிபாஸிட்டுதாருக்கு செலுத்தப்படும்.

**நேஷனல் ஸேவிங்ஸ் ஸர்டிபிகேட்டுகள்** | **டிரெஷரி ஸேவிங்ஸ் டிபாஸிட்டுகள்**


இரண்டிலும் பணம் திரும்பப் பெறுவதற்கு இந்திய சர்க்கார் உத்தரவாதம் அளிக்கிறது.

குறைவாகச் செலவு செய்; அதிகம் சேமித்து வை; புத்திசாலித்தனமாக முதலீடு செய்.

நேஷனல் ஸேவிங்ஸ் கமிஷனர் வெளியிட்டது, நீதி மந்திரி காரியாலயம், சார்ட்டன் காலனி, ஸிம்லா

# பயர்ஸ்டோன் டயரின் அமைப்பு



## கம்-டிப்பிங்

பந்தோபஸ்து, உழைப்பு, நம்பகம் ஆகிய யாவையும் கம்-டிப்பிங் முறையால் நன்கு கவனிக்கப்பட்டு பயர்ஸ்டோன் டயர்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப் பிரத்தியேக பேடண்ட் பயர்ஸ்டோன் முறையில் ஒவ்வொரு பஞ்சு நூலும் விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட ரப்பர் திராவகத்தில் தோய்க்கப் படுகின்றது. இது ஒவ்வொரு தனி இழையையும் ஒன்ருகப் பிணைக்கின்றது. அதிக வேகத்திலும் கம்-டிப்பிங் முறை டயர்களை குறைவான சீதோஷ்ண நிலையிலேயே வைத்திருக்கின்றது. ஆகவேதான் நம்பகத்திற்குச் சிறப்பாக பயர்ஸ்டோன் டயர்கள் சிறந்தவைகளாக விளங்குகிறது.

அதிக மைல்கள், சுகம், நாகரீகப் பாங்கு, பணத்திற்குரிய மதிப்பு ஆகிய பயன்களை பயர்ஸ்டோன் டயர்கள் வாங்கும்போது நீங்கள் அடைகிறீர்கள்.



**Firestone**

"கம் டிப்பிடு டயர் இது ஒன்றே"

LAS. (B)


# ஆதார சக்தி



நீங்களும் பெறுக

# வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

தினசரி போஜனத்திற்குப் பிறகு ருசிகரமான வாட்டர்பரீஸ் காம்பவுண்டும் சாப்பிட்டு வந்தால் சொற்பகாலத்திலேயே தெம்பும் திடமும் அதிகரிப்பதை காண்பீர்கள். தேக உறுப்புகளுக்கு வலுவூட்ட அவசியமான பொருள்கள் நிறைந்த வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் உங்களுடம்பில் திராணி அதிகரிக்கச் செய்யும். களைப்பேற்படாமல் தெம்பூட்டி ஜலதோஷம், இருமல் வராமலிருக்க அதிக எதிர்ப்பு சக்தியும் பெற உதவுகிறது. இளையோர், முதியோர் யாவருக்கும் சிறந்த ஆரோக்கிய டானிக்.




# WATERBURY'S
## COMPOUND

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்


உங்களைத் தெம்புடன் வைத்திருக்கும்

NAS 737


வாயில் அணிவதால் உயரும் தோற்றம் ந. 1
கடாவ்
அழகு, குணம் வாய்ந்த
வாயில்கள்

# தொல்லைப்படுத்தும் பூச்சிகளைக் கொல்லுங்கள்


....அவை மலேரியா, டைபாய்ட், வயிற்றுக் கடுப்பு, காலரா மற்றும் அநேக வியாதிகளைப் பரப்புகின்றன!




ஈ, கொசு, கரப்பு, மூட்டைப்பூச்சி இவை துரிதமாக விருத்தியாகின்றன. சேற்றில் வாழும் இந்த ஜந்துக்கள் உங்கள் வீட்டிற்கு நோய்க் கிருமிகளைக் கொண்டுவந்து உங்கள் உயிருக்கே உலைவைக்கக் கூடும். ஒரே ஈயில் 60,00,000க்கு மதிகமான கிருமிகள் காணப்பட்டுள்ளன!

பூச்சி சிறியதாயும் சாதுபோலவும் தோற்றமளித்தபோதிலும், அது உங்கள் உயிருக்கு ஆபத்து விளைவிக்கலாம்.

எல்லாப் பூச்சிகளையும், அவை உங்களிடையே நோயைப் பரப்புமுன் கொல்லுங்கள்! ப்ளிட்டிலிருக்கும் 5 கொடிய டோக்ஸின்கள் எல்லாப் பூச்சிகளையும் துரிதமாகவும் நிச்சயமாகவும் கொல்லுகின்றன.




ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி
(கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)




இப்புதிய டயர் பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்ட அடியை உடையதாகையால், பஸ்களுக்கும், லாரிகளுக்கும் ஏற்றதாக இருக்கிறது. இதன் பலமான பிணைப்புகள், இதை கரடு முரடான ரஸ்தாக்களுக்கேற்றதாகச் செய்வதுடன், அதிக மைல்கள் ஓடி உழைக்கச் செய்கின்றன.

மிருதுவானதும், பலமுள்ளதுமான, இந்த டயர்கள் கரடு முரடான ரஸ்தாக்களுக்குச் சிறந்ததாயிருக்கிறது. இந்த டயர்கள், பஸ்கள், லாரிகள், மற்றும் அதிக மைல்கள் ஓடும் வண்டிகளுக்கேற்றதாக, பல்வேறு சைஸ்களில் செய்யப்பட்டிருக்கிறது

**GOODYEAR**

ரப்பர் சம்பந்தமான சாமான்களில் பெயர் பெற்றவர்கள்.

ஒரு அணா ஸ்பெஷல் ஸீல்களை வாங்கி க்ஷயரோக நிவாரணத்துக்கு உதவுங்கள்

# நீங்கள் இன்று உங்கள் பற்களை மக்ளீன் செய்தீர்களா?



அவள் செய்து தானிருக்கிறாள். அவளது பிரகாசமான புன்னகையைப் பாருங்கள்! பளபளப்பும், ஆரோக்கியமும் மிளிரும் பற்களை பாருங்கள். மக்ளீன் பெராக்ஸைட் பற்பசையால் தினமும் இரண்டுதரம் அவள் சுத்தம் செய்து கொள்ளுகிறாள்.

மக்ளீன் பெராக்ஸைட் பற்பசை உங்கள் ஈறுகளை ஆரோக்கியமாகவும், பற்களை வெண்மையாகவும், ஒரே சமயத்தில் விளங்கும்படி செய்கிறது. அதனால்தான் உலகிலுள்ள லக்ஷக்கணக்கான புத்திசாலித்தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு தினமும் இரண்டு தடவை மக்ளீன் பற்பசையினால் பற்களை சுத்தம் செய்யும்படி கூறுகின்றனர்.

"நான் எப்போதும் மக்ளீன்ஸ் உபயோகிக்கிறேன். ஏனெனில் அது என் பற்களை வெண்மையாகவும் பளபளப்பாகவும் இருக்கச் செய்கிறது என்று என் தாய் சொல்கிறாள்."


**இன்றே மக்ளீன்ஸ் வாங்குக!**




MTY.1 TAM.

வியாபார விவரங்களுக்கு: ஜே.எல். மாரிசன், ஸன் அண்ட் ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட், மஹாலக்ஷ்மி கோவிலுக்கு எதிரில், வார்டன் ரோட், பம்பாய் 26.

# பரம்பரையான ஒரு பெயர்




ஸிங்கர் உலகம் முழுவதும் ஒவ்வொரு இல்லத்திலும் முழங்கும் பெயராகி விட்டது.

வருடப் போக்கிலே ஸிங்கர் பல விதங்களில், ஒவ்வொன்றும் அதற்குக் குறித்த உபயோகத்தை ஒட்டி, திறமையுடன் தையல் மிஷின்களை அமைத்தது. பலவாகியான இயந்திரங்களும் எங்கும் எப்பொழுதும் பாகங்களைமாற்றி அமைத்துத் தந்து உதவும் சேவையும்தான், உலகு முழுவதும் ஸிங்கர் விநியோகங்களை உபயோகிப்பதற்கான முக்கிய காரணங்கள்.

## ஸிங்கர் *

* ஸிங்கர் மானுபாக்சரிங் கம்பெனியுடைய ஒரு டிரேட் மார்க்


LAS 181




O'CLOCK
SLOTTED
BLADE
O'CLOCK
SLOTTED BLADE
7 o'clock
ஸெவன் ஓ'கிளாக் பிளேடுகள்

# கீர்த்திமுகம்

உதயபுரிக்கு அருகில் உள்ள நீலகண்டேசுவரர் ஆலயம் 11-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. அதன் முன்சுவரில் அமைந்துள்ள ஓவியங்களைப் பார்த்து வரும்போது மெய் சிலிர்க்கச்செய்யும் கீர்த்திமுகத்தைக் காணலாம். புராணத்தில் கூறப்பட்டுள்ள விலங்கின் வடிவத்துடன் திகழும் கீர்த்திமுகத்தை ராகுமுகம் என்றும் கூறுவதுண்டு. ராகுமுகம் என்றால் விழுங்கும் வதனம் என்று பொருள். தேவர்களுக்கு மஹா விஷ்ணு அமிர்தம் விநியோகித்தபோது ராகு தந்திரமாக மறைந்து நின்று ஒரு கை வாங்கிக்குடித்ததாக கதை கூறுகிறது. அவன் அமிர்தத்தை விழுங்கிவிடுமுன் சூரியனும் சந்திரனும் அதையறிந்து விஷ்ணுவிடம் தெரிவித்தனர். ராகு சிரச்சேதம் செய்யப்பட்டான். ஆயினும் அமிர்தத்தை ருசித்தபடியால் அவன் தலைமாத்திரம் இறவாநிலை எய்திவிட்டது. பழிக்குப்பழியாக, சூரிய, சந்திரர்களுக்கு அருகில் செல்லும் போதெல்லாம் ராகு அவர்களை விழுங்கப்பார்க்கிறான்....அதனால்தான் கிரஹணங்கள் சம்பவிக்கின்றன.






ஆக்ரா - பம்பாய் மார்க்கத்திலுள்ள திவாஸுக்கும், ஜான்ஸி - நாக்பூர் மார்க்கத்திலிருக்கும் ஸாகருக்கும் இடையே செல்லும் ரஸ்தாவில் போபாலுக்கு 27 மைல் தூரத்தில் பில்ஸா இருக்கிறது. பில்ஸாவிலிருந்து வடக்கேபோகும் பாதை பஸோடா வழியாக சுமார் 30 மைல் தொலைவிலிருக்கும் பரேத்துக்குச் செல்லுகிறது. பரேத்துக்குக் கிழக்கே நாலு மைல் தூரம் கப்பி ரஸ்தாவில் சென்றால் உதயபுரியை அடையலாம். டன்லப் கண்டுபிடிப்பின் மூலமாக மோட்டார் பிரயாணம் பிரம்மாண்டத்தை அளித்து வருகிறது. அவர் பெயர்கொண்ட டயர்கள் எந்த நிலைமையிலும் பத்திரமுள்ளதாகவும் சிறந்தும் விளங்குகின்றன.

- மோட்டார் பிரயாண சுகங்கள் என்றும் தொடரக் காணலாகும்.

**டன்லப்**





# டாடா
# அக்ரிகோ
## கருவிகள் உணவு உற்பத்தியைப் பெருக்க உதவுகின்றன

நம் நாட்டில் உள்ள விவசாயிகள் அனைவரும் அக்ரிகோ கருவிகளையே பெரும்பாலும் விரும்புகின்றனர். ஏனெனில் அவை மிகவும் உறுதியானவை. நீடித்துழைக்கக்கூடியவை. கையாளுவதற்கு சுலபமானவை. வெற்றிகரமான உழவுக்கு இன்றியமையாதவை.

**எல்லாவித உழவு வேலைகளுக்கும் ஏற்ற அக்ரிகோ கருவிகள் இருக்கின்றன.**



**மண்வெட்டிகள்:**

பிரபலமான ஸ்வான்-நெக் டிசைன் உள்பட மூன்று நிறுவகைகள் கிடைக்கிறது. கூராக வெட்டும் முனைகள் வேலையை நிறைவுடன் செய்து முடிக்க உதவுகின்றன. சீரான அமைப்பு வாய்ந்திருப்பதால் வேலை செய்ய இலகுவாக இருக்கிறது.



**பாரைகள் :**

விதவிதமான வேலைகள் புரிவதற்காக ஐந்து வித டிசைன்களில் கிடைக்கின்றன. இதர எல்லா அக்ரிகோ கருவிகளைப் போல், உயர்ந்த மதிக்கப்பட்ட உறை கார்பன் ஸ்டீலிருந்து தயாரிக்கப்பட்டது.




**தோட்டாக்கிகள், செம்மட்டிகள் :**

வெவ்வேறு வேலைகளுக்காக நான்கு விதமான அடிப்படையான நிறுவகைகளில் கிடைக்கும். கூராக வெட்டும் முனைகள் பழுக்காமலிருப்பதற்காக விசேஷமாக உறுதியாக்கப்பட்டவை. மிகவும் உறுதி வாய்ந்தவை. நீடித்து உழைக்கக் கூடியவை.

## டாடா அக்ரிகோ கருவிகள்
**டி டாடா அயர்ன் & ஸ்டீல் கம்பெனி லிமிடெட்,**

ஹெட் ஆபீஸ்: 23B, நேதாஜி சுபாஷ் ரோட், கல்கத்தா.
பிராஞ்சுகள்: பம்பாய், மதராஸ், நாக்பூர், அஹமதாபாத், கான்பூர், செகந்திராபாத், விஜயநகரம் கண்டோன்மெண்ட், ஜலந்தர் கண்டோன்மெண்ட்.




Edited Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

REGD. No. M. 4392

*Registered as a newspaper in Ceylon*

# "லக்ஸ் டாய்லட் சோப் என் சருமத்திற்கு மிகவும் ஏற்றது"

என்று கூறுகிறார்

தவமணிதேவி




இனிய மணத்துடன் கூடிய
இந்த வெண்மையானதும்
சுத்தமானதுமான சோப்
உங்கள் சருமத்தை
வசீகரமாகச்செய்யும்!

## சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 292-X30 TM